பக்கங்கள் : 24
விலை:
ரூபா 25.00
★

# உதயன்

சுடர் 28 | கதிர் 115 | வள்ளுவர் ஆண்டு 2044 | பங்குனி 8 வியாழன் 21.03.2013
UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

ஒப்பந்தங்கள்
ஏழு
8

அமெரிக்கா
தயார்
நிலையில்
9

மதக் கோட்பாடு
பற்றிப் பேச
உரிமையில்லை
17

வோர்னர்
துணைத்
தலைவர்
23

# படைகள் பறித்த காணிகள் இனிக் கிடையவே கிடையா

## மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் தீவிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கில் படையினரால் கையகப்படுத்தப்பட்ட பொதுமக்களின் காணிகள் இனிமேல் ஒருபோதும் திரும்பக் கிடைக்கப் போவதில்லை என்பது உறுதியாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு திரைமறைவில் மேற்கொண்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

வடமாகாணத்தில் முப்படையினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்குப் பதிலாக அதே மதிப்பீட்டு பெறுமதியில் மாற்றுக் காணிகள் வழங்குவதற்குரிய நட

பார்க்க பக்கம் 04

# வாக்கெடுப்பு கோருவோம்

## இலங்கை அரசு அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 21

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் சபையில் 31 நாடுகளின் இணை அனுசரணையுடன் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை மீது வாக்கெடுப்பைக் கோருவதற்கு இலங்கை முடிவு செய்துள்ளது.

இந்த வாக்கெடுப்பின் போது, பிரேரணைக்கு எதிராக வாக்களித்து, இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு கோரி இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு அவசரக் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் நிலைமைகளைச் சமமற்ற வகையில் நோக்கும் இந்தப் பிரேரணையில், இலங்கையை இழிவுபடுத்தும் வகையிலும் தனிமைப்படுத்தும்வகையிலும் அமைந்துள்ளதாக இலங்கை நம்புகிறது.

பார்க்க பக்கம் 04

# அமெ.-இலங்கை மோதல் இன்று

## முழு ஆதரவும் தமக்கே என்கிறார் டொனஹே

(ஜெனிவாவிலிருந்து ஆர்.சிவராஜா)

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்துள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் இன்று நடைபெறவுள்ள சூழ்நிலையில், இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு மனித உரிமைகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஆதரவளிக்கும் என மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் டொனஹே அம்மையார் நேற்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று உரையாற்றியபோதே, பிரேரணையை உறுப்பு நாடுகள் அனைத்தும் ஆதரிக்கும் என நம்புவதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை பல்வேறு விடயங்களில் பொறுப்புக் கூற வேண்டியுள்ளதால் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டிய அவசியம் உள்ளதாகவும் அவர்

பார்க்க பக்கம் 04

# மும்பைத் தமிழர்களும் போராட்டத்தில்



மும்பை, மார்ச் 21

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவைக் கண்டித்து இந்தியாவின் மும்பை நகரில் வாழும் தமிழர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை குறித்துச் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை நடத்த வலியுறுத்தியுள்ள அவர்கள், மஹிந்த ராஜபக் ஷவைத் தண்டிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியாவே கொண்டுவர வேண்டும் என்றும் மும்பை வாழ் தமிழர்கள் வலியுறுத்தினர்.

இனப்படுகொலை தொடர்பான படங்களையும் பதாகைகளையும் ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள், இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு அளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். (த)

# பிரேரணையை இந்தியா வலுவற்றதாக்கவில்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறார் சிதம்பரம்

புதுடில்லி, மார்ச் 21

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணையை இந்தியா வலுவிழக்கச் செய்துள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை இந்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் முற்றாக மறுத்துள்ளார். அவ்வாறானதொரு செயலை இந்தியா மேற்கொள்ளவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது ஒரு கடுமையான பிரேரணை நிறைவேற்ற வேண்டும் என்பதையே இந்தியா விரும்பியதாக அவர் கூறியுள்ளார்.

ஒரு கடுமையான செய்தியை இலங்கைக்குத் தெரிவிக்கவும் சுயாதீனமான ஒரு விசாரணையை நடத்த அதனை நிர்ப்பந்திக்கவும் பிரேரணையில் இந்தியா திருத்தங்களை கொண்டு வரும் எனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவளை- ஜெனிவாவில் கொண்டு வரப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணை தொடர்பாக, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நேற்று உயர்மட்ட அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மத்தாய் ஆகியோர்

பார்க்க பக்கம் 04

# தவறான தீர்மானம் எடுக்காதீர்

## – சமரசிங்க

ஜெனிவா, மார்ச் 21

தவறான தீர்மானங்களை எடுத்து இலங்கைக்கு எதிராக செயற்பட சர்வதேச சமூகம் முயலக்கூடாது என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும், மனித உரிமைகள் சபைக்கான இலங்கைக் குழுவின் தலைவருமான மஹிந்த சமரசிங்க நேற்று கோரிக்கை விடுத்தார்.

ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற மனித உரிமைகள் சபையின் கூட்டத்தில்

பார்க்க பக்கம் 04

இறுதிப் போரில் காணாமற்போனோர் தொடர்பில்

# உறவினர்கள் ஐவர் ஆட்கொணர்வு மனு

## இராணுவத் தளபதிக்கு அழைப்பாணை

வவுனியா, மார்ச் 21

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப் போரின் பின்னர், இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற் போயிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளவர்களில் ஐந்து பேர் தொடர்பில் ஆட்கொணர்வு மனுக்கள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து முல்லைத்தீவில் உள்ள 58 ஆவது படைப்பிரிவின் தலைமை அதிகாரியையும், இராணுவத் தளபதியையும் எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி நீதிமன்றத்தில் தோன்றி இது தொடர்பில் சாட்சியமளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காணாமல் போனவர்களின் மனைவிமார் மற்

பார்க்க பக்கம் 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தி.மு.க.நிபந்தனைப் படி

# பிரேரணையை திருத்த 'சவுத் புளொக்' எதிர்ப்பு

புதுடில்லி,மார்ச் 21

ஐ.நா. மனித உரிமைகள் சபையில்அமெரிக்காகொண்டு வந்துள்ள பிரேரணையில் திருத்தங்களைச் செய்ய இந்திய மத்திய அரசு மேற் கொண்டுள்ள முயற்சி களுக்கு, சவுத் புளொக்கில் உள்ள கொள்கை வகுப்பா ளர்கள் எதிர்ப்புத் தெரிவித் துள்ளதாகத் தகவல்கள் தெரி விக்கின்றன.

ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகித்த தி.மு.க, இலங்கை விவகா ரத்தைக் காரணம் காட்டிக் கூட்டணியில் இருந்து வெளி யேறுவதாக அறிவித்துள்ள நிலையில், அந்தக் கட்சி யைச் சமாதானப்படுத்தும் நகர்வுகளை மேற்கொள்ள காங்கிரஸ் தலைமை முடிவு செய்துள்ளது.

நேற்றுக் காலை புதுடில் லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நிதி அமைச் சர் ப.சிதம்பரம், ஜெனிவா வில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையில் தேவையான திருத்தங்களை மேற்கொள் வதில் இந்தியா உறுதியுடன் இருப்பதாகவும், அதற்கான அறிவுறுத்தல் ஜெனிவாவுக் கான இந்தியத் தூதுவருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில், தி.மு. க.வின் நிபந்தனைப்படி, ஜெனிவா பிரேரணையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலை என்று திருத்தம் செய்யப்படுவ தற்கு, சவுத்புளொக்கில் உள்ள இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். எனினும் இனப்படுகொலை என்ப தற்குப் பதிலாக, கொடுமை கள் என்ற பதம் சேர்க்கப்பட லாம் என்றும் தெரியவருகிறது.

இதற்குத் தி.மு.க இணங் கினால், ஜெனிவா பிரேர ணையை ஆதரித்து இந்தியா வாக்களிக்கும் என்று புது டில்லி ஊடகம் ஒன்று தெரி வித்துள்ளது.

அதேவேளை, தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பிரே ரணை வரைவு, ஆரம்பத் தில் முன்வைக்கப்பட்டதை விட, நீர்த்துப் போயுள்ளது.

இதில் நேரடியாக இலங்கை அரசுக்கு அழைப்பு விடுப்ப தாகக் கூறப்படும் வாக்கியங் கள் நீக்கப்பட்டு, பொதுப் படையான சொற்களே சேர்க் கப்பட்டுள்ளன.

இந்தப் பிரேரணைக்கு எதிராக பாகிஸ்தானும் மாலை தீவும் வாக்களிக்கும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது.

இதற்கிடையே, ஜெனிவா பிரேரணையின் மீதான வாக் கெடுப்பின் போது, இந்தியா வாக்களிக்காமல் ஒதுங்கி நிற்கும்படி, கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா புதுடில்லிக்கு ஆலோசனை கூறியுள்ளதா கவும் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)




யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த கனேடிய செனற்றரும், பொதுநலவாய மாநாட்டுக்கான விசேட குழுவின் இணைப்பாளருமான ஹைக் டீ.சீகல், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் ஷெலி விடிங் ஆகியோர் அடங்கிய குழு 'உதயன்' நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன், பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

# டெங்கை கட்டுப்படுத்த பற்றைக் காணிகள் துப்புரவு

### மாநகர சபை சுகாதாரப் பிரிவு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 21

அதிகரித்து வரும் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்த பற்றைக் காணிகளை துப்பு ரவு செய்யும் நடவடிக்கை மாநகர சபை சுகாதாரப்பிரிவின ரால் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது என்று யாழ்.மாநகர பிரதம பொது சுகாதாரப் பரி சோதகர் ஆ.ஜீவநாதன் தெரி வித்தார். டெங்கு நோய்த்தாக் கத்துக்குள்ளாகி வாரத்துக்கு ஒருவராவது போதனா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டு வருகிறார்.

டெங்கு நோயாளி ஒருவரை இனங்கண்டால் அந்தப் பிர தேசத்துக்கு புகையடித்தல் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். இவற்றைத் தவிர நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவான இடங்களைக் கண்ட றிந்து வழக்குத் தாக்கல் செய்து குற்றப்பணம் அறவிடப்பட்டு வருகின்றது. இதன் மூலம் ஓர ளவு டெங்கு நோயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்று தெரிவித்தார். (ஓ-13)

# ஆர்ப்பாட்டத்துக்குச் சென்ற இளைஞர் மோட்டார் சைக்கிளை இழந்தார்

யாழ். நகரில் அரசுக்கு ஆதரவாக நேற்று நடத்தப்பட்ட ஆர்ப் பாட்டத்துக்குச் சென்றவர் மோட்டார் சைக்கிளைப் பறி கொடுத்தார். இந்தத் திருட்டுச் சம்பவம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது என்று யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

பிரஸ்தாப நபர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்துக்குச் சென்றுள்ளார். அங்கிருந்து ஏனைய சிலருடன் சேர்ந்து துரையப்பா விளை யாட்டரங்குக்கு முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்துக்குச் சென்றார்.

அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்சி அலுவலகத் துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டம் முடிந்து திரும்பிவந்து பார்த்தபோதே மோட்டார் சைக்கிள் திருட்டுப் போனமை தெரியவந்துள்ளது. அதன் பெறுமதி சுமார் 2 இலட் சம் ரூபா என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-4)

# இலங்கையர்களின் பாதுகாப்புக்கு டில்லியும் தமிழகமும் உத்தரவாதம்

### நாடாளுமன்றில் கூறினார் பீரிஸ்

கொழும்பு, மார்ச் 21

தமிழ் நாட்டுக்குச் செல் லும் இலங்கையர்களுக்கும் அங்குள்ள இலங்கை அரசின் சொத்துக்களுக்கும் பூரண மான பாதுகாப்பு வழங்கப் படும் என இந்திய மத்திய அரசும் தமிழ் நாட்டு அரசும் உறுதியளித்துள்ளன என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பிரிஸ் நேற்று நாடா ளுமன்றில் கூறினார்.

அதேவேளை, பௌத்த மதம் பிறந்த நாட்டில் பௌத்த பிக்குகள் தாக்கப்பட்டதை யிட்டு கடும் விசனத்தை அவர் கள் வெளிப்படுத்தி உள்ள தாகவும் பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின் ஜே.வி.பி. உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க, தமிழ் நாட்டில் பௌத்த பிக்குமார் தாக்கப்பட் டுள்ளனர். இலங்கை அரசுக்குச் சொந்தமான உடைமைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசு உத்தியோக பூர்வமாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? சேதமாக்கப்பட்ட சொத்துக் களின் பெறுமதி எவ்வளவு? எதிர்காலத்தில் தமிழ் நாட் டுக்குச் செல்லும் இலங்கை யர்களும் பாதுகாப்புக்கு உத்தர வாதம் என்ன? என்பவற்றுக்கு அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்று கோரினார்.

அவரது கூற்றுக்கு வெளி விவகார அமைச்சர் பேராசி ரியர் பீரிஸ் பதில் அளித்தார்.

அதில் அவர் கூறியதா வது:-

தமிழ் நாட்டில் யாத்திரை மேற்கொண்ட பௌத்த பிக் குமார் தாக்கப்பட்டமை, மிஹின் எயார் அலுவலகம் தாக்கிச் சேதமாக்கப்பட்டமை உட் பட அங்கு நம்மவர்களுக்கு ஏற்பட்ட ஒவ்வொரு சம்ப வங்கள் தொடர்பாகவும் டில் லியில் இருக்கும் எமது தூது வர் மற்றும் சென்னையில் இருக்கும் பிரதித் தூதுவர் மூலமும் இந்திய அரசுக்கு அவ்வப்போது அறிவித்துள் ளோம். அதேவேளை, இலங் கையில் உள்ள இந்திய தூது வரே அழைத்து எமது கடும் விசனத்தையும் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளோம்.

தமிழ் நாட்டுக்கு வரும் இலங்கையர்களுக்கு உச்சக் கட்ட பாதுகாப்பு வழங்கப்படும். அங்குள்ள எமது சொத்துக் களுக்கு இந்திய அரசு உத்தி யோக ரீதியான பாதுகாப்பை ஏற்படுத்தும் என உறுதிய ளித்துள்ளது-என்றார். (த-2)

# பொதுநலவாய மாநாடு இலங்கையில் வேண்டாம்

### கனேடியப் பிரதிநிதிகளிடம் யாழ்.ஆயர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறு வதாக இருந்தால், அது தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக அமைய வேண்டும். அது தமிழ் மக்க ளுக்கு நன்மை பயக்கத் தவ றுமாக இருந்தால் அவ்வாறான தொரு மாநாடு இலங்கை யில் நடைபெறக்கூடாது.

இவ்வாறு யாழ்ப்பாணத் துக்கு நேற்று வருகைதந்த பொதுநலவாய மாநாட்டு விசேட குழுவின் செனற்றர் மற்றும் கனேடியத் தூதுவர் ஆகியோரிடம் வலியுறுத்தி னார் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

பொதுநலவாய மாநாட்டு விசேட குழுவின் செனட்டர் ஹக் டீ.சீகல், கனேடிய தூது வர் ஷெலி விடிங் உட்பட 5 பேர் கொண்ட குழுவினர் யாழ்.ஆயரை அவரது இல் லத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர். அதன் போதே ஆயர் இதனைத் தெரிவித்தார்.

> இங்குள்ள தமிழ் மக்களின் பிரச்சினை கள் நீண்டகாலமாகத் தீர்க்கப் படாதுள்ளன.

இங்கு தற்போதுள்ள நிலைமை தொடர்பாகவும் குழுவினர் ஆயரிடம் விரிவா கக்கேட்டறிந்தனர். இந்தச் சந்திப்புக் குறித்து ஆயர் தெரிவித்ததாவது:-

பொதுநலவாய மாநாடு இந்த முறை இலங்கையில் நடைபெறுவதனை விரும்பு கின்றீர்களா என்று குழுவினர் என்னிடம் கேள்வியெழுப் பினர். பொதுநலவாய மாநாடு நடக்கக் கூடாது என் பதனையே நான் வலியுறுத் திக் கூறினேன். இங்குள்ள தமிழ் மக்களின் பிரச்சினை கள் நீண்டகாலமாக தீர்க்கப் படாதுள்ளன. அவற்றைத் தீர்த்து வைப்பதாகப் பொது நலவாய மாநாடு அமையு மாயின் இலங்கையில் அது நடைபெறுவதனை வரவேற் கலாம். ஆனால் அவ்வாறு அது மக்களுக்கு நன்மைப யக்கத் தவறுமானால் அந்த மாநாடு இங்கு தேவை யில்லை.

தமிழ்மக்கள் பாகுபா டின்றி நடத்தப்படுகிறார்களா? என்று குழுவினர் என்னிடம் கேள்வியெழுப்பினர். இங் குள்ள தற்போதைய நிலை யில் தமிழ் மக்கள் மீது வெளிப் படையாகப் பாரபட்சம் காட் டப்படாமல் மறைமுகமாக அது மேற்கொள்ளப்படுவ தாகக் குழுவினரிடம் நான் விரிவாக விளக்கினேன். இது குறித்து கவனத்தில் கொள்வ தாக அவர்கள் என்னிடம் கூறினர் -என்றார். (த-4)







ஜெனிவாவில் இலங்கை மீது அமெரிக்கா கொண்டுவரும் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று யாழ்.நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தாங்கியிருந்த பதாகைகள் இவை. (த-5-288)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விலக்குப் பிடித்தவர் வாங்கிக் கட்டினார்

தென்மராட்சி,மார்ச் 21

குடும்பச் சண்டையை விலக்குப் பிடிக்கச் சென்ற குடும்பஸ்த்தர் கொட்டன் அடிக்கு ஆளாகித் தலையில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் பாலாவி மேற்கில் இடம்பெற்றது.

கணவன்- மனைவி சண்டையைத் தீர்த்து வைக்கச் சென்ற வேளையிலேயே இவர் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த தம்பிரான் மகேந்திரம் (வயது- 46) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## அளவெட்டி தெற்கு அடவம்பற்று விநாயகருக்கு வசந்த மண்டபம்

அளவெட்டி, மார்ச் 19

அளவெட்டி தெற்கு அடவம்பற்று சித்தி விநாயகர் ஆலயத்துக்கான வசந்த மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா கடந்த வெள்ளிக்கிழமை சதுர்த்தி நாளில் இடம்பெற்றது.

ஆலய பிரதம குரு பாலையாக் குருக்களின் ஆசியுடன் விசேட பூசைகள், ஆராதனைகள் இடம்பெற்று வசந்த மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது. (ம-36)

## புதிய கணக்குகள் குறித்து விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21

சங்கானை மக்கள் வங்கி அதிகாரிகள் புதிய வங்கிக் கணக்குகள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அரச திணைக்களங்கள், பொது நிறுவனங்களை மையமாக வைத்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இடப்பெயர் சேவை மூலம் உடனுக்குடன் கணக்குகளை ஆரம்பித்தும் வருகின்றனர்.

பெண்களை வங்கிகளில் இணைக்கும் நோக்கத்தை முன் வைத்தே இவ்விதம் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

## இரவு வேளையில் கொட்டப்படும் கழிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

நவாலி மேற்கு-களையோடை கண்ணகை அம்மன் வீதியில் திண்மக் கழிவுகள் இரவுவேளைகளில் வீதியின் அருகே கொட்டப்படுகின்றன என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.


இதனால், டெங்கு பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என்று சிந்தாமணி தோட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கழிவு கொட்டுவோர் யார் என்பது இதுவரை கண்டறியப்படவில்லை.

கழிவுகொட்டப்படும் இடம் தொடர்பாக மானிப்பாய் பிரதேச சபைக்கு முறையிடப்பட்டுள்ளது. (ம-41)

# அடிப்படை வசதிகள் இல்லை மீளக்குடியமருமாறு பணிப்பு

■ பொன்னாலை மக்கள் கவலை



வலி. வடக்கு மார்ச் 21

*பொன்னாலை கிருஷ்ணன் கோவிலை அண்மித்த பகுதியில் மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் பொதுமக்களை குடியமருமாறு அரச அலுவலர்கள் பணித்துள்ளனர் என்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.*

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த பிரதேசம் அண்மையில் பொதுமக்களின் மீள் குடியமர்வுக்காக விடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் போதிய வருமானம் இன்றி கடந்த இருபது வருடங்களாக இடம்பெயர்ந்து போதிய தொழிலின்றி உதவிகள் முழுமையாகக் கிடைக்காத நிலையில் முகாம்களில் வாழ்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உடனடியாக தற்காலிகக் கொட்டில்கள் போட்டு முதலில் வந்து மீளக்குடியமர்ந்தால் மட்டுமே இந்திய வீட்டுத் திட்ட உதவி கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணத்தால் பற்றையாகவும் மின்சார வசதி இன்றியும் காணப்படும் இந்தப் பகுதியில் பொது மக்கள் தற்காலிக கொட்டில்களை அமைத்து குடியிருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட பகுதியில் பொது மக்களுக்கான தண்ணீர் வசதியோ மற்றும் மலசலகூட வசதியோ இல்லை. பற்றைகளும் புதர்களுமே நிறைந்து காணப்படுகின்றன.

இதேவேளை குறித்த பகுதியின் அவல நிலைமை தொடர்பில் அந்தப் பகுதி மக்களால் யாழ். மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து அவர் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். (வ-86)

# வடலியடைப்பு வெள்ள வாய்க்கால் நிர்மாணப் பணிகள் நிறுத்தம்

### ஒப்பந்தத்துக்கு அமைய வேலை இடம்பெறாமையே காரணம்

யாழ்ப்பாணம்,மார்ச் 20

பிரதேச சபையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படாத , வடலியடைப்பு வெள்ள வாய்க்கால் நிர்மாணப் பணிகளை வலி.தென்மேற்கு பிரதேசபை நிறுத்தியுள்ளது என்று தலைவர் அ.ஜெபநேசன் தெரிவித்தார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் வடலியடைப்பில், உள்ள வெள்ள வாய்க்கால், வெள்ளம் வழிந்தோடக் கூடிய நிலையில் இல்லாததால் மழை காலங்களில் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இதனை அடுத்து யாழ். மாவட்ட அரச அதிபரால் குறித்த வெள்ள வாய்க்கால் நிர்மாணப் பணிக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதற்குரிய வேலைகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக பிரதேச சபையே நியமிக்கப்பட்டது. இதற்கமைய மேற்படி வேலை ஒப்பந்தகாரர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த ஒப்பந்தகாரர் பிரதேச சபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் வெள்ள வாய்க்கால் கட்டுமானத்தின் போது 3 கம்பிகள் வைத்து கட்டுவதாகத் தெரிவித்திருந்த போதும் இரண்டு கம்பிகளைப் பாவித்தே கட்டுமான வேலைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதனை பிரதேச சபை உறுப்பினர்களான குமணன், ஜிப்ரிக்கோ, மகேந்திரன், சிவகுமார், கௌரிகாந்தன் ஆகியோர் பிரதேச சபைத் தலைவரிடம் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதற்கமைவாக பிரதேச சபைத் தலைவரால் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூலம் மேற்படி விடயத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய ஒப்பந்தகாரர் சபையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக வேலைகளை முன்னெடுக்காமை உறுதி செய்யப்பட்டது.

இதனால் பிரதேச சபை மேற்படி வேலைகளை இடைநிறுத்தியுள்ளது. இது தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-5-115)

# மல்லாகம் மதுவரித் திணைக்களத்தால் கடந்த ஆண்டு 282 முறைப்பாடுகள்

### நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன

வலி. வடக்கு, மார்ச் 21

மல்லாகத்தில் அமைந்துள்ள மதுவரித் திணைக்களத்தால் கடந்த ஆண்டு 282 மதுவரிக் குற்ற வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

> மதுவரித் திணைகளத்தின் புள்ளி விவரங்கள் தகவல் தெரிவிக்கின்றன

மதுவரித் திணைக்களத்தின் புள்ளி விவரங்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

சட்டவிரோதமான முறையில் சாராய விற்பனை, கசிப்பு உற்பத்தி, விற்பனை மற்றும் போதைப் பொருள்கள் விற்பனை என பல்வேறு செயல்களுடன் தொடர்புடையவர்கள் மீது மதுவரித் திணைக்களத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த ஆண்டு இதுவரையில் சுமார் 57 வழக்குகள் மதுவரித் திணைக்களத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# கஜமுத்துக்களை விற்பனை செய்ய முயன்ற நபர் பொலிஸாரால் கைது

**யானைத் தந்தத்தில் இருந்து பெறப்படும் கஜமுத்துக்களை யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்ய முயன்ற திருகோணமலையைச் சேர்ந்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்**

வலி. வடக்கு, மார்ச் 21

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடை ஒன்றில் யானைத் தந்தத்தில் இருந்து பெறப்படும் கஜமுத்துக்களை விற்பனை செய்ய முயன்ற நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்தின தலைமையில் இயங்கும் விசேட புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்ட நபரைக் கைது செய்ததுடன் அவரிடம் இருந்து கஜமுத்துக்களையும் மீட்டனர்.

குறிப்பிட்ட நபர் திருகோணமலையைச் சோந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த நபர் யாழ். நீதிவான் முன்னிலையில் பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவரை இரண்டு வார காலத்துக்கு விளக்க, மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தில் இத்தகைய பெறுமதியான முத்துக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டமை இதுவே முதல் தடவை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-86)

# கஞ்சா வைத்திருந்த இருவர் பொலிஸாரிடம் மாட்டினர்

வலி. வடக்கு, மார்ச் 21

கஞ்சா வைத்திருந்த இருவர் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஷ்மந்த தலைமையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் குறித்த இரண்டு நபர்களையும் கைது செய்துள்ளனர்.

உடுவில் மல்வம் பகுதியில் இரவுக் கடமையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது நேரம்பிந்தி வந்த இருவரை மறித்து சோதனையிட்ட வேளையில் அவர்களிடம் இருந்து 4600 மில்லிக்கிறாம் கஞ்சா மீட்கப்பட்டது என்று தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட இருவரும் சனிக்கிழமை மல்லாகம் நீதிவான் வாசஸ்தலத்தில் பொலிஸாரால் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இருவரையும் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-86)

# காலநிலை வேறுபாடுகளால் அழிந்தது கீரை; விலை உயர்வு

அளவெட்டி, மார்ச் 21

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் பெய்த கடும் மழை காரணமாக கீரை நாற்றுக்கள் முளைத்த நிலையில் அழிவுற்றன.

இதன் காரணமாகச் சந்தைகளில் கீரையின் விலை 40 ரூபா முதல் 60 ரூபாவரை அதிகரித்துள்ளது.

இதனால் கீரைப்பிரியர்கள் மிகுந்த கவலையுடன் கீரை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது என சுன்னாகம் சந்தையில் கீரை வாங்கியவர்களில் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

அத்தோடு சீரற்ற காலநிலையும் கீரையின் விலையில் உயர்வு ஏற்படக் காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமான பெரும்பாலான விவசாயிகள் இந்த முறை கீரை உற்பத்தியில் நாட்டம் கொள்ளவில்லை என்று கீரை உற்பத்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.(ம-36)

# கடந்த வருடம் மட்டும் 194 பேர் எரிகாயங்களுக்கு ஆளாகினர்

■ 30 பேர் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 21

கடந்த வருடம் எரிகாயங்களுக்கு ஆளாகி சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் 194 பேர் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் 30 பேர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

எரிகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்படுபவர்களில் சாதாரணமாக உடலில் குறைந்தளவு எரிகாயங்களுக்கு ஆளாவோரை மட்டுமே சிகிச்சை மூலமாகக் குணப்படுத்த முடிகிறது.

உடலில் அதிகளவில் எரிகாயங்களுக்குள்ளானவர்கள் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்து விடுகின்றனர். அவ்வாறு 30 பேர் கடந்த வருடம் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் நஞ்சருந்திய நிலையில் சிகிச்சைக்காக கடந்த வருடம் யாழ். போதனா வைத்தியசாலையில் 998 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் சிகிச்சை பயனின்றி 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

தீக்காயங்கள் தவறுதலாக தீப்பற்றுதல், சமையலறையில் எண்ணெய் ஊற்றி அடுப்பு மூட்டும் போது அணிந்திருக்கும் ஆடைகளில் தீப்பற்றுதல், தமக்குத் தாமே எண்ணெய் ஊற்றித் தீ மூட்டிக் கொண்ட சம்பவங்கள் போன்றவை அதிகரித்துள்ளன என்று மேலும் தெரிவித்தார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னாட்டு விசாரணையே தீர்வு சர்வதேசத்துடன் முரண்படாதீர்

## கூட்டமைப்பு அரசுக்கு அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 21

''இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச விசாரணையொன்றே சிறந்த தீர்வாக இருக்கும். இலங்கை அரசு முரண்டுபிடிக்காமல் சர்வதேசத்துடன் இணைந்து செயற்படவேண்டும். இதுவே இலங்கையின் எதிர் காலத்துக்கு நன்மை பயக்கும்'' - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற 'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான அமைப்பு' நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையே பிரச்சினைகள் தொடர்ந்து நிலவி வருகின்றன. இலங்கைக்கு எதிராக தமிழ்நாட்டில் எழுச்சிகொண்ட போராட்டங்கள், முழு இந்தியாவிலுமே பரவி வரும் அபாயநிலை இன்று காணப்படுகிறது. மேலும் மாணவர் போராட்டங்களும் நாளுக்குநாள் எழுச்சிபெற்று வருகின்றன.

இந்தப் போராட்டங்களுக்கு முக்கிய காரணம் இந்த மஹிந்த அரசே. இவர்கள் போர்க் காலத்தின்போது தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகளும், மனித உரிமை மீறல்களுமே இந்தியாவில் மாணவர் போராட்டங்களாக வெடித்துள்ளன.

சர்வதேச விசாரணையை வலியுறுத்தியே இந்தியாவில் கோடிக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளனர். சர்வதேச நாடுகளும் இலங்கை அரசிடம் நடுநிலையான - நீதியான விசாரணைகளை நடத்துமாறு கோரி வருகின்றன.

போரின்போது தவறு இழைத்தது எனக் கூறப்படும் இந்த அரசிடம் எப்படி விசாரணைகளை எதிர்பார்ப்பது? அப்படி மேற்கொண்டாலும் நடுநிலைமையான விசாரணையை இந்த அரசு ஒருபோதும் நடத்தாது. சரியான தீர்வொன்று எட்டப்பட வேண்டுமாயின், அது சர்வதேச விசாரணையொன்றின் மூலமே முடியும்.

போர் முடிந்து சமாதானம் நிலவும் இக்காலகட்டத்தில் பொதுபல சேனா அராஜகத்தை ஆரம்பித்துள்ளது. முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதல்கள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்க, தற்போது கிறிஸ்தவர்களுக்கெதிரான தன் அடுத்த நடவடிக்கையில் தடம் பதித்துள்ளது.

ஐ.நாவால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் பிரச்சினைகள் இன்னும் முடிவுறாத நிலையில், இதுபோன்ற பொதுபலசேனாவின் நடவடிக்கைகள் தொடர்பில் அரசு மௌனம் காப்பது மேலும் சர்வதேசத்துடன் பகையை அதிகரிக்கும் செயலாகவே அமையும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாம் அரசுக்கு முன்வைக்கும் கோரிக்கை என்னவென்றால், சர்வதேசத்தை பகைத்துக் கொள்ள வேண்டாம். இந்த அரசு முரண்டு பிடிக்காமல் சர்வதேசத் துக்கு ஒத்துழைப்பு வழங்கினால் மட் டுமே சிறந்ததோர் எதிர்காலத்தை இலங்கையிலும் நிலைநாட்ட முடியும்'' - எனத் தெரிவித்தார். (சி)

# வடக்கில் இராணுவத் தலையீடு; கனடா அதிருப்தி

ஜெனிவா, மார்ச் 21

இலங்கையின் வடக்கில் சிவில் நடவடிக்கைகளில் இராணுவத்தின் தலையீடுகள் இருப்பது குறித்துத் தாம் தீவிர கவனத்தை செலுத்தி வருகின்றனர் என்று கனடா நேற்று தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் நேற்றுக் கருத்து வெளியிட்ட ஜெனிவாவில் உள்ள கனேடியத் தூதுவர், ஊடகங்கள் மீதான தாக்குதல்கள், ஆட்கடத்தல்கள் குறித்து கனடா கடும் கவலை அடைந்துள்ளதாகவும் கூறினார்

மனித உரிமை ஆர்வலர்கள் இலங்கையில் கடும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி உள்ளதாகவும் சிவில் சமூக செயலர்களும், ஊடகவியலாளர்களும் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்ட அவர் வடக்கில் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு இருக்கக் கூடாதென்றும் கூறினார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சிறுபான்மை தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்கவில்லை என கூறிய அவர், அதன் பரிந்துரைகள் கூட கிரமமாக நடைமுறைப் படுத்தப்படாமை கவலைக்குரிய விடயம் எனவும் அமெரிக்காவின் பிரேரணையில் இவை வலியுறுத்தப் பட்டுள்ளன எனவும் கூறினார். (சி)

## தவறான...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

இலங்கை நல்லிணக்க முயற்சிகளிலும் பொறுப்புக் கூறும் கடப்பாட்டிலும் மிகவும் அக்கறையாக உள்ளது. இலங்கையின் நிலைமைகள் குறித்து அறிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளருக்கு கொழும்பு வருமாறு நாங்கள் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் அழைப்பு விடுத்து வருகிறோம்.

ஆணையாளர் அங்கு வந்து தேவையான செயற்பாடுகளில் ஈடுபடவும், விரும்பிய இடங்களுக்குச் செல்லவும் ஏற்பாடுகளைச் செய்துகொடுக்க இலங்கை அரசு தயாராகவே உள்ளது.

இலங்கையானது வாக்குறுதிகளில் இருந்து எப்போதும் மீறி செயற்படவில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் அக்கறையாகவே நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.

சர்வதேச சமூகம் இதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். தவறான தகவல்களை நம்பி இலங்கைக்கு எதிராகச் செயற்பட நாடுகள் முன்வரக் கூடாது. தனிப்பட்ட ஆலோசனைகளை கவனத்தில் எடுத்து ஐக்கிய நாடுகள் சபை செயற்படக் கூடாது - என்றார் அவர்.

## படைகள்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வடமாகாணக் காணி ஆணையாளர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி படையினர் வசமுள்ள காணிகள் இனி ஒருபோதும் கிடைக்கப்போவதில்லை என்பது உறுதியாகியுள்ளது.

காணி ஆணையாளர் நாயகத்தினால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற முரண்பாட்டுக்குப் பின்பு அரச காணிகளில் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் துரித வேலைத் திட்டம் என்ற பெயரில் 2013/01 இலக்க் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை தொடர்பில் அரச ஊழியர்களுக்கு தெளிவுபடுத்தும் செயலமர்வுகளை வடமாகாண காணி ஆணையாளர் அலுவலகம் முன்னெடுத்து வருகின்றது. இதன்போதே கையகப்படுத்திய காணிகளுக்குப் பதிலாக மாற்றுக் காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முப்படையினரதும் மற்றும் அரச திணைக்களங்களினதும் பாவனைக்காகவும், அபிவிருத்திப் பணிகளுக்காகவும் காணிகள் கையகப்படுத்தப்பட்டால் அல்லது வேறு யாராவது காணிகளில் நிரந்தரமாகக் குடியிருந்தால், அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் தமது காணிகளை இழந்திருப்பார்கள்.

இவ்வாறு இழக்கப்பட்ட காணிகளை மீளப் பெற்றுக்கொள்வது சாத்தியமற்றதாயின் குறித்த பிரதேசத்திலேயே பொருத்தமான காணியை இனங்கண்டு மாற்றுக் காணியாக உரியவர்களுக்கு அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாற்றுக் காணிகள் காணிக் கச்சேரி வைக்கப்பட்டு அதனூடாகவே வழங்கப்படும்.

இதற்குரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடமாகாண காணி ஆணையாளர் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(த-5-6-400)

## அமெ. - இலங்கை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்றைய கூட்டத்தில் உரையாற்றிய சீனத் தூதுவர், இலங்கை தனது உள்நாட்டு பொறிமுறை மூலம் பல்வேறு விடயங்களுக்கு தீர்வு காண முயல்வதாகவும் சர்வதேச சமூகம் அதற்காக இலங்கைக்கு ஆதரவு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இங்கு கருத்து வெளியிட்ட பிரிட்டனுக்கான தூதுவர், இலங்கையின் வடக்கில் தேர்தல் நடை பெறும் போது அது நீதியாக நடைபெற வேண்டுமென வலியுறுத்தினார்.

இலங்கையில் மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலைமை தொடர்வதாக குற்றம் சாட்டிய அவர் இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, கியூபாவின் பிரதிநிதி பேசும்போது, இலங்கை மீது விதிக்கப்படும் அழுத்தங்கள் நியாயமற்றவை என்றும், போருக்குப் பின்னர் இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப இலங்கை முயலும் போது அதற்கு ஒத்துழைப்பு வழங்காமல் கடும்போக்குடன் நடந்து கொள்வதை கியூபா எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டார்

வியட்நாம் தூதுவர் தனது உரையில், மோசமான போருக்குப் பின்னர் இலங்கையின் நிலைமைகள் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருவதாகவும் அதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டியது தான் இப்போதைய தேவை என்று கூறினார்.

இதேவேளை, பிரேரணை விடயத்தில் ஆதரவை மேலும் பலப்படுத்திக் கொள்ளும் வகையில் அமெரிக்காவும் இலங்கையும் நேற்றைய தினமும் பிற நாடுகளின் இராஜதந்திரிகளுடன் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

## உறவினர்கள்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

றும் தாய்மார் வவுனியா மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்குகள் நேற்றுப் புதன்கிழமை வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தன.

வழக்காளிகள் சார்பில் மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் நீதிமன்றத்தில் தோன்றி காணாமற் போயிருப்பவர்கள் தொடர்பில் விளக்கங்களைச் சமர்ப்பித்தார்.

அவர் தனது விவாதத்தில் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் இறுதிக்கட்ட இராணுவப் போர் நகர்வின் போது, வன்னிப்பிரதேசத்தில் இருந்த மக்கள் ஓரிடத்தில் இருந்து மற்றுமோரிடத்துக்கு விரட்டியடிக்கப்பட்டு இறுதியாக முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து அவர்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அப்போது, விடுலைப்புலிகள் அமைப்பில் இருந்தவர்களை இராணுவத்தினரிடம் சரணடையுமாறு கோரி ஒலிபெருக்கி மூலமாகப் பொதுமக்களுக்கும் போர் முடிவடைந்ததையடுத்து ஆயுதங்களைக் கீழே போட்டிருந்த விடுதலைப்புலிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

சரணடைபவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்றும், பொது மன்னிப்பளிக்கப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அந்த அறிவிப்பில் அரசு உறுதியளித்திருந்தது. அதிகாரிகள் மூலமாக அரசு வழங்கிய இந்த உறுதிமொழியை நம்பி, ஏற்று, நூற்றுக்கணக்கானவர்கள் சரணடைந்தார்கள்.

இவ்வாறு சரணடைந்தவர்களுக்கென ஒரு கருமபீடம் திறக்கப்பட்டு அங்கு சீருடை அணிந்த இராணுவத்தினர் சரணடைந்தவர்களின் பெயர் விவரங்களைப் பதிவு செய்தார்கள். அப்போது, மொழி தெரியாத காரணத்தினால், சிங்களம் மற்றும் ஆங்கிலம் தெரிந்த அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் மற்றும் இரண்டு கிறிஸ்தவ குருமார் சரணடைந்தவர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்திச் செயற்பட்டிருந்தார்கள். இவ்வாறு, சரணடைந்தவர்கள், அரசுக்குச் சொந்தமான பஸ்களில் இராணுவத்தினரால் ஏற்றிச் செல்லப்பட்டார்கள். சரணடைந்தவர்களின் மனைவிமார், பிள்ளைகள் மற்றும் தாய்மார் எனக் குடும்ப உறவினர்களின் கண் முன்னாலேயே கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இந்தச் சரணடையும் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இவ்வாறு சரணடைந்தவர்களை அதன் பின்னர் அவர்களது உறவினர்கள் இன்னும் காணவில்லை. சரணடைந்தவர்களின் நிலைமை என்ன? அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் ?அல்லது எங்கு வைக்கப்பட்டிருக்கின்றார்கள் ? என்ற விவரங்கள் எதுவும் தெரியாமல் உறவினர்கள் துன்பமடைந்திருக்கின்றார்கள்.

இந்த ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தவர்களில் ஒரு தாயார் தனது மகள், மருமகன், அவர்களுடைய 6 வயது, 4 வயதுடைய இரண்டு குழந்தைகளுடன் காணாமற்போயிருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். இவ்வாறு பெரியவர்கள்,குழந்தைகள் என வயது வித்தியாசமில்லாமல் பலர் அரசினால் பிடிக்கப்பட்டு, சிறைப்பிடிக்கப்பட்டு அவர்களுடைய கதி என்னவென்று தெரியாத வகையிலேயே இந்த அரசு மக்களை வைத்திருக்கின்றது.

எனவே, அரச பொறிமுறைகளின் மூலமாக விசாரணை நடத்தி, காணாமற் போயிருப்பவர்களுக்கு என்ன நடந்தது என்பதைச் சட்ட ரீதியாகத் தெரிவிப்பதற்கு அரசு கடமைப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு எது நடந்தாலும் அதற்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும். இதற்கு உரிய நடவடிக்கை எடுத்து காணாமல் போயிருப்பவர்களை நீதிமன்றத்தின் முன் கொண்டு வருமாறு உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் என்று சட்டத்தரணி ரட்ணவேல் கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து, முல்லைத் தீவில் உள்ள 58 ஆவது படைப்பிரிவின் தலைமை அதிகாரியையும், இராணுவத் தளபதியையும் எதிர் வரும் மே மாதம் 20 ஆம் திகதி நீதிமன்றத்தில் தோன்றி இது தொடர்பில் சாட்சியமளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(த)

## வாக்கெடுப்பு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இலங்கையின் தற்போதைய நல்லிணக்க முயற்சிகளுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் இந்தப் பிரேரணை, நாட்டை அவமானப்படுத்தி உதவியற்ற நிலைக்குத் தள்ளக்கூடியது.

கடினமான வெற்றி கொள்ளப்பட்ட அமைதியைச் சீர்குலைக்க முனைபவர்களைத் தவிரவேறு எவரும் இதன் மூலம் பயனடையப் போவதில்லை. அத்துடன், பக்கசார்பான, அரசியல் மயப்படுத் தப்பட்ட இந்த அமெரிக்கப் பிரேரணை ஏனைய நாடுகளுக்கும் ஆபத்தானது.

இலங்கை அரசு கடந்த முறை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணையை ஏற்றுக்கொள்ளவில்லை. அது போலவே புதிய பிரேரணையும் நிராகரித்துள்ளது.

இந்தப் பிரேரணையின் வரைவு நாளை (இன்று) ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்படும்போது, அதன் மீது வாக்கெடுப்பு நடத்த இலங்கை கோரும்.

இந்தத் தீர்மானத்தை தோற்கடிக்க உறுப்புநாடுகளின் ஆதரவை இலங்கை எதிர்பார்க்கிறது- என்றுள்ளது.

(த)

## பிரேரணையை..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பங்கேற்றுள்ளனர்.

முன்னதாக, இந்திய வெளிவிவகார அமைச்சில் நடந்த சந்திப்பில், ஜெனிவாவில் இருந்து அவசரமாக அழைக்கப்பட்ட இந்தியத் தூதுவர் திலீப் சின்ஹாவுடன் மூத்த அதிகாரிகள் ஆலோசனை நடத்தியிருந்தனர்.

ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணையில் திருத்தம் செய்வது, அதன் சாதக, பாதகங்கள் குறித்தே இந்தச் சந்திப்புகளில் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ஜெனிவா பிரேரணை தொடர்பான இந்தியாவின நிலைப்பாடு குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் நேற்றுச் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சல்மான் குர்ஷித்,ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணையில் திருத்தம் செய்யப்படும் என்று கூறினார்.

இந்தத் திருத்தம் தொடர்பான இறுதி முடிவை பிரதமர் மன்மோகன் சிங் எடுப்பார். இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாகச் சுதந்திரமான விசாரணை நடத்த ஜெனிவாவில் வலியுறுத்துவோம் என்றும் சல்மான் குர்ஷித் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தொடர்புகளுக்கு

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

தலைமையகம்:

மின் அஞ்சல்
செய்தி :
news@uthayan.com
கருத்து:
comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com

## இந்திய ஆரியத்திடம் அவியாது திராவிடத்தின் பயறு என்றாற்போல்...

குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது எம்மத்தியில் நிலவும் பேச்சு வழக்கு.

இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா இரண்டாவது தடவையாகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்துள்ள பிரேரணை இந்தியாவின் செல்வாக்கினால் வலுக்குறைக்கப்பட்டுள்ளமை அதனையே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

இறுதிப் போரின்போது, அரசதரப்பினரால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து அனைத்துலக மட்டத்திலான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற அமெரிக்கப் பிரேரணையின் வரைவு மாற்றப்பட்டுவிட்டது.

அதனால் இன்று (மார்ச் 21 ஆம் திகதி) வாக்கெடுப்புக்கு விடப்படும் பிரேரணையில், சுயாதீனமான, நம்பகத்தன்மையுள்ள அனைத்துலக விசாரணைக்குப் பதிலாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை, நடைமுறைப்படுத்த நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்தைக் கோருவது என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட பிரேரணையில் இந்திய அரசின் செல்வாக்கு பொதிந்திருப்பதைத் தெளிவாகக் காண்பிக்கும் ஆதாரங்கள் மிகமிகப் பலவும் உண்டு என்று, அனைத்துலக மன்னிப்புச் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அனந்த பத்மநாபன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தப் போவதாக இலங்கை அரசு அறிவித்திருப்பதை வரவேற்றும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் வடக்கில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அமெரிக்கப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துலக சமூகம் இலங்கைக்கு எதிராக ஒரு கடுமையான நிலைப்பாட்டைத் தொடக்கத்தில் மேற்கொண்டிருந்தது. ஆனால் தற்போது பிரேரணை முற்றிலுமாக நீர்த்துப் போகச் செய்திருப்பது என்பது, இந்தியா - இலங்கை இடையேயான உறவுக்கான வெற்றி. இந்நிலையில், இலங்கைக்கு எதிராகப் பிரசாரம் மேற்கொண்டவர்களுக்குத் தோல்வி ஏற்பட்டுள்ளது என்றும் அனந்த பத்மநாபன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை மிகக்கடுமையான நிலைப்பாட்டை இலங்கைக்கு எதிராக மேற்கொண்டிருக்கும் நிலையில் 'இந்தியாவின் செல்வாக்குத் தான்' இலங்கையைக் காப்பாற்றியிருக்கிறது என்று அரசியல் பார்வையாளர்கள் சுட்டிக்காட்டும் அளவுக்கு புதுடில்லி அரசு தப்புத்தாளம் போட்டிருக்கிறது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுயாதீனமான, நம்பகத்தன்மையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று எவரும் எதிர்பாராத விதமாக காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி அறிவித்ததும், சர்வதேச விசாரணை அமெரிக்கத் தீர்மானத்திலிருந்து நீக்கப்பட்ட பின்புதான் என்பது இப்போது தெரியவந்துள்ளது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு முன்னணியிலிருந்து வெளியேறுவதாக தி.மு.க. அறிவித்தபோது, மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தது. ஒன்று, அமெரிக்கப் பிரேரணையைக் கடுமையாக்கும் விதத்தில் அதில் இந்தியா திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும். மற்றது, போர்க்குற்றங்கள் தொடர்பாக சுயாதீனமான, நம்பகத்தன்மையுள்ள சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். மூன்றாவது, இலங்கையின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

இவற்றில் முதல் இரண்டு கோரிக்கைகளும் 'அவுட்' ஆகிவிட்டன. இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமன்றி, தமிழகத்துக்கும் அதன் அரசியல் தலைவர்களுக்கும், உனக்கும் 'பெப்பே'; உன் அப்பனுக்கும் 'பெப்பே' காட்டிவிட்டது.

போரின் இறுதியில் தனது பங்களிப்பு சர்வதேச விசாரணையின்போது அம்பலமாகிவிடக் கூடும் என்று இந்தியா அஞ்சுவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள். அதில் நூற்றுக்கு நூறு உண்மைத்தன்மை உண்டு.

ஒட்டுமொத்தத்தில், வட இந்தியர்களின் மரபணுவுக்கும், தென்னிலங்கைச் சிங்கள மக்களின் மரபணுவுக்கும் ஒற்றுமையுண்டு என்பதனை இந்திய அரசின் வடக்குத் தலைவர்கள் பட்டை தீட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

தென்னிந்தியத் திராவிடத் தமிழ் மக்களும், மாணவர்களும் தீக்குளித்தாலென்ன, மற்றும் வழிகளில் உயிரை மாய்த்தாலென்ன, அவை எதுவும் ஆரியத்திடம் அவியாது என்பது பால் வெள்ளை போன்று தெரிகிறது....! வேறென்ன சொல்ல...?



# சுற்றுலாத்துறை ஒன்றியத்துடன் உணவகங்களை இணைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம், கண்டி வீதியில் உள்ள உணவகங்களை சுற்றுலாத்துறை ஒன்றியத்துடன் பதிவு செய்து சிறுசிறு உணவகங்களும் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதான நடவடிக்கைகளை வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் மேற்கொண்டு வருகிறது.

வடமாகாணத்துக்குள் உள்நுழையும் சுற்றுலாத்துறை பயணிகள் தமது விரும்பத்துக்கு ஏற்பவும் வசதிக்கு ஏற்பவும் உணவகங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

இதனால் சில குறிப்பிட்ட உணவகங்களே வருமானத்தைப் பெற்று வருகின்றன. ஏனைய உணவகங்கள் நஷ்டத்தில் இயங்க வேண்டிய நிலையில் உள்ளன.

இதனை ஒழுங்கமைத்து உணவகங்களை ஓர் ஒன்றியத்தின் கீழ் பதிவு செய்து அதனூடாக சுற்றுலாப் பயணிகள் அந்தந்த உணவகங்களுக்கு செல்வதற்கான வழிகாட்டல்களை வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் மேற்கொள்ளவுள்ளது.

ஏ-9 வீதியில் குறிப்பிட்ட சில உணவகங்கள் வருமானம் இழந்த நிலையில் அடுத்தகட்ட தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளன.

இவற்றைக் கருத்தில் கொண்டே வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இதற்கென உணவகங்களின் கடை உரிமையாளர்களை நேரடியாகச் சந்தித்து ஒன்றியத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது 30 இற்கும் மேற்பட்ட உணவகங்கள் வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்துடன் இணைந்துள்ளன என்று கூறப்பட்டது. (ம-14)

# விளாவெளி மயான எல்லைகளை மீள் நிர்ணயம் செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 19

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட விளாவெளி இந்து மயான எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் வலி. தென் மேற்கு, வலி. மேற்கு பிரதேச நிர்வாகிகள் மட்டத்தில் உயர் மட்ட மாநாடு மூலம் எல்லை மீள் நிர்ணயம் செய்து பிரதேச நிர்வாகத்துக்கும் மக்களுக்கும் உதவ முன்வர வேண்டும் என்று வலி.தென் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சி.மகேந்திரன் தெரிவித்தார்.

விளாவெளி இந்து மயான எல்லைகள் மீள் நிர்ணயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வலி. தென் மேற்கு பிரதேச சபை இரண்டு பட்டினங்கள், இரண்டு கிராம உப - அலுவலகங்கள் உட்பட 4 உப- அலுவலகங்களையும், 28 கிராம அலுவலர் பிரிவுகளையும் கொண்ட பரந்த பிரதேசம்.

இதில் விளாவெளி இந்து மயானம் ஜே/147 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்டது. இந்தக் கிராம அலுவலர் பிரிவு வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்டது என்று சில உறுப்பினர்கள் வாதிடுகின்றனர்.

ஆனால் ஜே / 147 பிரான்பற்று கிராமம் பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி பத்திரிகையில் வலி. தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலும் 12-5-1987 இல் வெளியிடப்பட்ட பிரதேச சபைகள் மீள் எல்லைகள் நிர்ணயம் தொடர்பாக மாகாண சபைகள் அமைச்சராக இருந்த ரணசிங்க பிரேமதாசவால் வெளியிட்டப்பட்ட வர்த்தமானி பத்திரிகையிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வலி. தென் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட விளாவெளி இந்து மயான பிரதேசமும் ஜே/147 பிரதேசமும் வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆதனம் என்று வாதிடுவது பொருத்தமற்றது.

எனவே வலி. மேற்கு பிரதேச செயலர், வலி. மேற்கு பிரதேச சபை தலைவர், செயலாளர், வலி தென் மேற்கு பிரதேச செயலாளர், வலி. தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர், செயலாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரை ஒருங்கிணைந்த வகையில் இதற்கான எல்லை நிர்ணயத்தை கூட்ட இரு சபைகளின் தலைவர்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

இதன் மூலம் நீண்ட நாள் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண முற்படலாம் என்று வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சி.மகேந்திரன் தெரிவித்தார். (ம-41)

கொடிகாமம் பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க

# அங்கத்தவர் சேமபங்கு நிதியை அபிவிருத்திக்கு பயன்படுத்தத் தீர்மானம்

**எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு**

தென்மராட்சி, மார்ச் 21

கொடிகாமம் பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் சேமப் பங்கு நிதியை அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்துவது தொடர்பில் நெறியாளர் சபை தீர்மானித்துள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற குறித்த சங்கத்தின் நெறியாளர் சபைக் கூட்டத்தில் வங்கியில் நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ள பணத்தை மீளப்பெற்று அபிவிருத்தித் தேவைகளுக்குப் பயன்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்தை இடைநிறுத்தக்கோரி 94 அங்கத்தவர்கள் நெறியாளர் சபைக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை இந்தத் தீர்மானத்தை மேற்கொண்ட நெறியாளர் சபைக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கும் அங்கத்தவர்கள் முடிவு செய்துள்ளனர். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி சங்கம் தெரிவித்துள்ளதாவது:-

சங்க அங்கத்தவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டகள்ளுக்கு வழங்கப்படும் நிதியிலிருந்து சேமத்துக்கென ஒதுக்கப்பட்ட [illegible] இலட்சம் ரூபா இதுவரை வங்கியில் வைப்புச் செய்யப்படவில்லை.

அத்துடன் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தென்மராட்சி கொத்தணியிடம் இருந்து கிடைக்க வேண்டிய 62 இலட்சம் ரூபா இதுவரை அறவிடப்படவில்லை.

இந்த நிலையில் எமது உழைப்பில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு வங்கியில் நிலையான வைப்பில் இடப்பட்டதுமான ஒரு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட சேமப் பணத்தின் ஒரு தொகையை மீளப்பெற்று செலவு செய்வதற்கு கடந்த 13 ஆம் திகதி நெறியாளர் சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எமது உழைப்பில் எமக்கென்று ஒதுக்கப்பட்ட நிதியை எமக்குத் தெரியாமல் எமது அனுமதியின்றி செலவு செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் பெரியளவிலான மனித உரிமைகள் மீறல் என்பதை உணர முடிகின்றது.

எம்மால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திக்கு போதிய ஊதியம் வழங்கத் தவறியது மட்டுமல்லாமல் எமது உழைப்பில் சேகரிக்கப்பட்ட சேமப் பணத்தை சங்க நிர்வாகம் எடுத்துச்செலவு செய்வதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது. பொறுத்துக் கொண்டிருக்கவும் முடியாது. இதனால் சங்க நிர்வாகம் மீது அங்கத் தவர்களாகிய நாம் நம்பிக் கையில்லாத் தீர்மானம் ஒன்றை முன்வைப்பது மட்டுமல்லாமல் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுச் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்படவுள்ளது என கூறப்பட்டது.

(வ-9-400)

# நெடுந்தீவு கூ.சங்கத்துக்கு பதில் பொது முகாமையாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 21

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை இலாபகரமாகக் கொண்டு செல்லும் நோக்குடன் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பதில்பொது முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடந்த சில ஆண்டுகளாகப் பெரும் நஷ்டத்தில் செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு அனலைதீவு கூட்டுறவுச் சங்க முகாமையாளர் தற்காலிகமாக இங்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சங்கத்துக்குப் பொது முகாமையாளராக தகுதியுடைய எவரும் கடமை புரியலாம்.

ஆனால் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும். இதய சுத்தியுடன் பணியாற்ற முன்வரவேண்டும்.

இந்தச் சங்கத்தின் மாதாந்த செயற்பாடுகள், கணக்கறிக்கைகள் முன்னர் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்படுவதில்லை. இதனால் சங்கத்தின் நிலை தொடர்பாக அறிந்து கொள்ள முடியாது இருந்தது.

இதுவும் சங்கம் பின்னடைவுக்குச் செல்லக்காரணம் - என்றார்.

இதேவேளை, வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிதாக பொது முகாமையாளர் ஒருவர் கடந்த 18 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் கூறினார். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிகுளத்தில் அஞ்சல் அலுவலகம் திறக்குமாறு அவசர கோரிக்கை

வவுனியா,மார்ச் 21

ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவில் உப அஞ்சல் அலுவலகம் ஒன்று திறக்கப்பட வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வவுனியா பிரதேச செயலர் பிரிவினுள் இந்த ஆசிகுளம் கிராமம் அமைந்துள்ளது. ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவில் சிதம்பரபுரம், ஆசிகுளம், தரணிக்குளம், பெரிய கோமரசன்குளம், கல்வீரன்குளம், வேப்பங்குளம், கல்நாட்டியகுளம் ஆகிய கிராமங்கள் உள்ளடங்கியுள்ளன.

இங்கு சிதம்பரபுரம் நாகேந்திரா வித்தியாலயம், பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயம், ஆசிகுளம் அ.த.க. பாடசாலை கல்நாட்டியகுளம் அ.த.க பாடசாலை என்பன இயங்கி வருகின்றன.

ஆனால் அஞ்சல் அலுவலகம் இல்லாததால் மேற்குறிப்பிட்ட பாடசாலை மாணவர்களும், கிராம மக்களும் தமது அஞ்சல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வவுனியா நகருக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதற்கு இவர்கள் அதிக பணத்தைச் செலவு செய்து பஸ் மூலமாக வவுனியா நகரிலுள்ள அஞ்சல் அலுவலகத்துக்கு செல்ல வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது. சாதாரண கடிதங்களை சேர்ப்பதற்கென இந்தக் கிராமங்களில் தபால் பெட்டிகள் கூட இல்லாத நிலையே காணப்படுகின்றது.

எனவே தமது அவல நிலையை உணர்ந்து இந்தப் பகுதியில் உபஅஞ்சல் அலுவலகம் ஒன்றை அமைக்குமாறு இங்கு வசிக்கும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-421)

# பொலிஸாரின் செயற்பாடுகள் நம்பிக்கையளிப்பதாக இல்லை

## மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கிளிநொச்சி மக்கள் முறைப்பாடு

கிளிநொச்சி, மார்ச் 21

கிளிநொச்சியில் பொலிஸாரின் செயற்பாடுகள் நம்பிக்கை தருவதாக இல்லையென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளிடம் பல்வேறு தரப்பினரும் முறையிட்டுள்ளனர்.

கடந்த காலப் போர், இடப்பெயர்வு என்பனவற்றால் பாதிக்கப்பட்ட சமூகம் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாக நீதிதேடிப் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்றால், அங்கு சரியான நீதி கிடைப்பதில்லையென்றும் தொடர்ந்தும் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாகவும் பலரும் நேற்றுமுன்தினம் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் முன்னிலையில் முறையிட்டுள்ளனர்.

கடந்த இறுதி போர்க் காலத்தில் தனது கணவரை இராணுவத்திடம் ஒப்படைத்த



அவரது மனைவி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தனது முறைப்பாட்டை பதிவு செய்யச் சென்றபோது அதனை அவ்வாறு ஏற்கமுடியாது என்றும், அவரைக் காணாமற்போனவர் என்றே முறைப்பாடு பதிவு செய்ய முடியும் என்றும், அதனைத் தமிழில் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்ததாக மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளரிடம் முறையிடப்பட்டது.

இதேபோன்று கடந்த 13 ஆம் திகதி முறைப்பாடு செய்யச் சென்ற ஒருவரின் முறைப்பாட்டை ஏற்க பொலிஸார் மறுத்தமை, சிங்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்படுகின்றமை மற்றும் விசாரணை செய்யப்படுகின்றமை தொடர்பாகவும், கிளிநொச்சி முழங்காவில் கமநல சேவை நிலையத்தை தொடர்ந்தும் பொலிஸார் பயன்படுத்தி வருகின்றமை குறித்தும் பல்வேறு முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட் டன. (த-6)

## குடிதண்ணீருக்கு அலையும் பொன்னகர் கிராம மக்கள்

முல்லைத்தீவு,மார்ச் 21

முள்ளியவளை பொன்னகர் கிராமத்தில் வசிக்கும் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம், முள்ளியவளை பொன்னகர் கிராமத்தில் விதவைகள் மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கென வழங்கப்பட்டுள்ள ஐம்பது வீட்டுத்திட்டத்திலேயே இந்த அவலநிலை காணப்படுகின்றது.

இங்கு மீளக்குடியமர்ந்த இந்தக் குடும்பங்கள் கடந்த ஒருவருட காலமாக எந்தவித வசதிகளும் இன்றிப் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றன.

குறிப்பாக குடிதண்ணீரைப் பெறுவதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

அத்துடன் இங்கு வசிக்கும் பெண்களும், சிறுவர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிய வருகின்றது. (க-6)

## தொண்டர் ஆசிரியருக்கு நாளை கூட்டம்

கிளிநொச்சி,மார்ச் 21

கிளிநொச்சி தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சி எடிசன் கல்லூரியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (க)

# நாய், பூனை கடித்தால் கூட உரிய மருத்துவ வசதி இல்லை

## மல்லாவி வைத்தியசாலை குறித்து பிரதேசமக்கள் ரஜீவவிடம் முறைப்பாடு

மல்லாவி,மார்ச் 21

நாய், பூனை கடித்தால் கூட அதற்குச் சிகிச்சை அளிக்கக் கூடிய வசதிகள் மல்லாவி மருத்துவமனையில் இல்லையென மக்கள் முறையிட்டுள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான ரஜீவ விஜேசிங்கவுடனான சந்திப்பின்போதே இந்த மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இங்கு கலந்துகொண்ட மக்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பூனை, நாய் போன்ற மிருகங்கள் கடித்தால் கூட நாம் கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளுக்குச் சென்றே உரிய சிகிச்சைகளைப் பெற வேண்டிய நிலையில் உள்ளோம் என்று தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த ரஜீவ விஜேசிங்க இந்தக் குறைபாடுகள் விரைவில் நிவர்த்தி செய்யப்படும் எனப் பதிலளித்தார்.

மல்லாவி மருத்துவமனையை துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த ஏராளமான மக்கள் பயன்படுத்தி வருகின்ற நிலையில் இங்கு சிறந்த மருத்துவ வசதிகளை ஏற்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.(க-18)

## மன்னார் அல்-அஸ்ஹர் மாணவர் 32 பேர் பல்கலைக்கு அனுமதி

மன்னார், மார்ச் 21

மன்னார் அல்-அஸ்ஹர் மகாவித்தியாலய மாணவர்கள் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளதாகப் பாடசாலை அதிபர் எம்.வை. மாஹிர் தெரிவித்துள்ளார்.

இந்த முறை 32 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றியவர்களில் கணித, விஞ்ஞானப் பிரிவில் 17 மாணவர்களும், கலை, வர்த்தகத்துறையில் 15 மாணவர்களுமே இவ்வாறு பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் ஜே.நவ்ராஸ் என்ற மாணவர் மருத்துவத்துறைக்கும், ஏ.எம் அஸ்மின் 3ஏ (மாவட்டநிலை முதலாமிடம்), ஏ.எம்.நிஸ்வர் 2ஏ,பி ஆகியோர் வர்த்தகத்துறைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் எச்.எம். றிஸ்மியா, ஆர்.எம்.மிஸாப், எ.எம். இல்யாஸ் ஆகியோர் மருத்துவத்துறைக்கும், எம்.ரி.எம் அஸ்ரி கலைத்துறைக்கும், எஸ்.எம்.சஜாத் வர்த்தகத்துறைக்கும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டதாக பாடசாலை அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (க-400)

## போதையில் வாகனம் செலுத்தினால் இனிமேல் சிறைத் தண்டனை தான்

### கிளிநொச்சி நீதிவான் எச்சரிக்கை

கிளிநொச்சி,மார்ச் 21

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்திச் செல்பவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும்- இவ்வாறு தெரிவித்துள்ளார் கிளிநொச்சி நீதிவான் எம்.ஐ.வகாப்தீன்.

கிளிநொச்சியில் வீதி ஒழுங்கு விதிகள் தொடர்பாகக் கைது செய்யப்படுவோரில் அதிகளவானோர் மதுபோதையில் வாகனம் செலுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு மதுபோதையில் வாகனம் செலுத்துவதனால் அதிகளவான விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

இவ்வாறு மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்த நீதிவான் குறித்த நபர்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதித்தார். அதேவேளை, சாரதி அனுமதிப்பத்திரங்களையும் ஆறுமாத காலத்துக்கு இடைநிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இதன்போதே கிளிநொச்சி நீதிவான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியின் பல பகுதிகளில் சாரதி அனுமதிப்பத்திரங்கள் இல்லாது வாகனங்களைச் செலுத்திய ஆறு பேருக்கு தலா 10 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-6)

## அத்துமீறிய செயல்களில் விறகு வியாபாரிகள்

நெளுக்குளம்,மார்ச் 21

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் விறகு வியாபாரிகளின் அத்துமீறிய செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதுவித கட்டுப்பாடுகளும் இன்றி இந்தக் காணிகளுக்குள் நுழையும் விறகு வியாபாரிகள் அங்கு தறித்து வீழ்த்தப்பட்ட நிலையில் காணப்படும் மரங்களை எவரது அனுமதியும் பெறாது எடுத்துச் செல்வதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் இவர்கள் வேலிகளுக்கென அமைக்கப்பட்ட கம்பிக் கட்டைகள் மற்றும் கொங்கிறீற் கற்கள் என்பனவற்றையும் தமது இஷ்டம் போல எடுத்துச் செல்வதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த வீட்டுத் திட்டத்துக்கு மின்சாரம், போக்குவரத்து வசதிகள் என்பன மேற்கொள்ளப்படாமையால் இங்கு வசிப்பதற்குப் பல குடும்பங்கள் தயங்கி வருகின்றன.

இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் விறகு வியாபாரிகள் மேற்கூறிய செயல்களில் ஈடுபட்டு வருவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (க-402)

## உணவு கையாளும் பணியாளருக்கு மருத்துவப் பரிசோதனைகள்

வவுனியா,மார்ச் 21

வவுனியா நகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் உணவு கையாளும் நிலையங்களில் பணி புரியும் பணியாளர்களுக்கான மருத்துவப் பரிசோதனைகள் நேற்று புதன்கிழமையிலிருந்து ஆரம்பமாகியுள்ளன.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் காலை 9 மணியிலிருந்து மாலைவரை மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பரிசோதனைகள் நாளையும், மறுதினமும் இடம்பெறுமெனவும் தெரியவந்துள்ளது.

மேலும் மருத்துவப் பரிசோதனையின் போதே நெருப்புக் காய்ச்சலுக்கான தடுப்பூசி வழங்கப்படுவதுடன், வயிற்றுப் புழுவுக்கான சிகிச்சையும் அளிக்கப்படுவதால் உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களும் இதில் கலந்து கொண்டு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-எ)

## வவுனியா நகரில் கறுப்புக் கொடி

வவுனியா, மார்ச் 21

ஜெனிவா தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்தும் வவுனியாவில் நடத்தப்பட்ட போராட்டத்துக்கு ஆதரவாக அரச ஆதரவாளர்களால் கறுப்புக் கொடிகள் வவுனியா நகரத்தில் பறக்க விடப்பட்டிருந்தன.

வவுனியா மணிக்கூட்டு கோபுரம், வவுனியா பொது வைத்தியசாலை உட்பட பல்வேறு இடங்களில் இவ்வாறு கறுப்பு கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

அரசுக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவரப்படும் தீர்மானத்தை எதிர்த்து மன்னார், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளைகளின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கறுப்புக் கொடிகளைக் கட்டிப் பறக்கவிடும் முயற்சியில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டனர்.

இதேவேளை கறுப்புக் கொடிகளைப் பறக்க விடுமாறு தமிழ் வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டபோதிலும் அந்த வர்த்தகர்கள் எவரும் கறுப்புக் கொடிகளைப் பறக்க விடாமையால் பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த சிலருக்கும் வர்த்தகர்களுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-402)

## முன்பள்ளிக்கு புதிய கட்டடம்

பளை, மார்ச் 21

புலோப்பளை- சென். பீற்றர்ஸ் முன்பள்ளிக்கு 80 லட்சம் ரூபா செலவில் சகல வசதிகளையும் கொண்ட கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை 'பிரண்ட்ஸ்' நிறுவனம் வழங்கவுள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. பளை கத்தோலிக்கப் பங்குத் தந்தை அருட்பணி ஜேம்ஸ்நாதன் அடிகள் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், பளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருட்டு சந்தேக நபர்கள் அடையாள அணி வகுப்பில்

தென்மராட்சி, மார்ச் 21

தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்ற பல திருட்டுக்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நால்வரை சாவகச்சேரி பொலிஸார் நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இந்த நால்வரையும், விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் இன்று அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு பணித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)



யாழ். இந்து சமயப் பேரவையின் 'சிவபூஜா க்ரம பத்ததி'' நூல் வெளியீட்டு விழா செவ்வாய்க்கிழமை இந்துப் பேரவையின் நடராஜர் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தில்லை வாழ் அந்தணர் சிவஸ்ரீ. கணேச பரமேஸ்வர தீக்ஷிதர் நூலை வெளியிட்டு வைக்க முதல் பிரதியை சர்வானந்தமய பீடத்தின் அமைப்பாளர் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா பெற்றுக் கொண்டார். (ம-14)

## நெடுந்தீவு போக்குவரத்து குமுதினியால் சீர்குலைவு

யாழ்ப்பாணம், மார்ச் 21

நெடுந்தீவு குறிகாட்டுவான் போக்குவரத்துச் சேவையில் உள்ள குமுதினி அரச படகு பழுதடைந்ததை அடுத்து நெடுந்தீவு கடல் போக்குவரத்துச் சேவை சீர்குலைந்துள்ளது.

தனியார் படகுகள் தற்போது சேவையில் இல்லாத நிலையில் அரச படகு குமுதினி மட்டுமே இந்தச் சேவையில் இருந்து வந்தது.

வடதாரகை குறித்து அனைவருமே மறந்து விட்டதாகவே தெரிகிறது.

நேற்றுக் காலை 6.30 மணிக்கு பயணம் மேற்கொள்ளும் நம்பிக்கையுடன் வந்த மக்கள் படகுகள் எதுவும் இல்லாத நிலையில் நீண்ட நேரம் காத்திருந்து காலை 8 மணிக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் படகில் பயணித்தனர்.

நெடுந்தீவில் உள்ள அதிகாரிகள் மக்களின் பயணக் கஷ்டங்கள் குறித்து அக்கறை காட்டுவதில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

ஒழுங்காக ஓடாத படகுச் சேவைக்கு அடிக்கடி நேர அட்டவணைகளைத் தயாரித்துப் புதுமை செய்வதிலேயே அதிகாரிகள் குறியாக இருக்கின்றனர் எனவும் மக்கள் தெரிவித்தனர். (ம-7)

## வலி. கிழக்கில் தொழில் சந்தை

யாழ்ப்பாணம், மார்ச் 21

வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் தொழில் வாய்ப்பின்றியுள்ள இளைஞர் யுவதிகளுக்குத் தனியார் துறையில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் தொழில் சந்தை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வலி. கிழக்குப் பிரதேச செயலகத்தில் இந்தத் தொழில் சந்தை இடம்பெறவுள்ளது.

இதில் பல்வேறு துறைசார் தனியார் தொழில் வழங்கும் நிறுவனங்கள் பங்குபற்றவுள்ளன.

குறித்த பிரதேச செயலர் பிரிவில் தொழில் வாய்ப்பு இன்றியுள்ள இளையோர் தமது விவரங்களுடன் காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்துக்கு வருகை தருமாறு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம)

# 45 வயதுக்குட்பட்ட விதவைகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கத் திட்டம்

## நல்லூர் பிரதேச சபை தீர்மானம்

**வலுவிழந்தோரை உறுப்பினராகக் கொண்ட குடும்பங்களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.**

யாழ்ப்பாணம், மார்ச் 21

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் வாழும் 45 வயதுக்குட்பட்ட இளம் விதவைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஒவ்வொருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் நன்கொடையாக வழங்குவதற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் முதற்கட்டமாக 45 வயதுக்குட்பட்ட இளம் விதவைகள் மற்றும் விசேட தேவையுடைய உடல் ஊனமுற்று உழைக்க முடியாமல் உள்ள உறுப்பினரை உடைய குடும்பங்களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவானது கிராமசேவையாளர்களின் உறுதிப்படுத்தலுடன் சபை உறுப்பினர்களின் சிபாரிசுடனும் வழங்கப்படவுள்ளது.

அது மட்டுமல்லாது வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருதய அறுவைச் சிகிச்சை, உதவி கோருபவர்களுக்கும் பிரதேச சபையூடாக 25 ஆயிரம் ரூபா வழங்குவதற்கும் சபை தீர்மானித்துள்ளது.

அத்துடன் 70 வயதுக்கு மேற்பட்ட உறுப்பு மாற்று சத்திரசிகிச்சை என்பவற்றுக்கும் முதியவர்களை கௌரவிப்பதுடன் அவர்களுக்குரிய உடுபுடைவைகள் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-7-400)

## போலி சாரதிய பத்திரம் வைத்திருந்தவர் மாட்டினார்

தென்மராட்சி, மார்ச் 21

போலி சாரதிய அனுமதிப் பத்திரத்துடன் வாகனம் செலுத்திய புத்தூர் வடக்கு வாசியை சாவகச்சேரி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்த நபரை பொலிஸார் நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தி வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பல வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் சாரதிய அனுமதிப் பத்திரம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார். (ம-5)

## சங்கிலியை அபகரித்தவர்கள் அடையாளம் காட்டப்பட்டனர்

தென்மராட்சி, மார்ச் 21

ஓட்டோவுக்குள் இருந்து கொண்டு சங்கிலியை அபகரித்த சகோதரர்களை நீதிமன்றில் அடையாளம் காட்டினார் சங்கிலியைப் பறிகொடுத்த பெண்.

கடந்த ஏழாம் திகதி வரணிப்பகுதியில் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த பெண்ணிடம் ஓட்டோவுக்குள் இருந்தவண்ணம் முகவரி கேட்ட போது அதற்குள் குனிந்து முகவரி கூறிய பெண் அணிந்திருந்த 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு ஓட்டோவில் தப்பியோடினர்.

சங்கிலியை பறிகொடுத்த பெண் கூக்குரலிடவே அந்தப் பகுதியில் நின்ற இளைஞர்களும் அந்த வழியே வந்த படையினரும் வாகனங்களில் துரத்தி மீசாலைப் பகுதியில் வைத்து இருவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கடந்த எட்டாம் திகதி யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த குறித்த அண்ணன், தம்பியை கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

அந்த இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் நேற்று முன்தினம் அடையாள அணி வகுப்பை நடத்துமாறு பொலிஸாரைப் பணித்தார்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்ற கட்டடத்தில் பதில் நீதிவான் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது. வழக்கின் முதலாவது சாட்சியான சங்கிலியைப் பறிகொடுத்த பெண் சந்தேக நபர்கள் இருவரையும் அடையாளம் காட்டினார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இருவரையும் ஏப்ரல் இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-9)

## தெல். கூட்டுறவு ஆஸ்பத்திரியை மீள இயக்குவது பற்றி ஆராய்வு



வலி வடக்கு, மார்ச் 21

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையின் வருடாந்த பொதுக் கூட்டம் தலைவர் சு.கணேசமூர்த்தி தலைமையில் கூட்டுறவு வைத்தியசாலை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது. இதன்போது வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைப்பது குறித்து ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், தலைமைப்பீட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் கே.கணேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (ம-86)

## கைதடிப் பாலத்தில் மோதி 'பிக்கப்' வாகனம் விபத்து

தென்மராட்சி, மார்ச் 21

பாலத்தில் வாகனச் சில்லு சறுக்கியதில் பாலத்துடன் வாகனம் மோதியது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை காலை கைதடியில் இடம்பெற்றது.

ஏ-9 வீதியில் வேகமாக வந்த 'பிக்கப்' வாகனம் பாலத்துக்கு முன்பாக போடப்பட்டுள்ள வேகக்கட்டுப்பாட்டு மேட்டின் மீது ஏறி சறுக்கியதில் வாகனம் பாலத்துடன் மோதிச் சேதமடைந்தது.

வாகனத்தில் பயணித்தவர் படுகாயடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

விபத்தில் சிறுகாயங்களுக்கு உள்ளான சாரதி சாவகச்சேரி வெளிநோயாளர் பிரிவில் சிசிக்சை பெற்றுச் சென்றுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸார் இதுகுறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏ-9 வீதி 'காப்பெற்' வீதியாக மாற்றப்பட்ட பின்னர் நாவற்குழி, கைதடி பகுதியில் பயணிக்கும் பல வாகனங்கள் பாலங்களுடன் மோதி விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்ற வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ம-9)

## அதிவேகமாகப் பயணிக்கும் கனரக வாகனங்களால் அபாயம்

அச்சுவேலி, மார்ச் 21

கனரக வாகனங்கள் கட்டட நிர்மாணத்துக்கு பயன்படுத்தும் மணலை ஏற்றி இறக்குவதற்கு நாளாந்தம் வடமராட்சிப் பகுதிக்கு சென்று வருகின்றன.

மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் அதிவேகமாக செல்வதால் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மணல் ஏற்றச் செல்லும் போதும் மணலை ஏற்றிக்கொண்டு வரும் போதும் குறித்த வாகனங்கள் அளவுக்கு அதிகமான வேகத்தில் பயணிக்கின்றன.

இந்த வாகனங்கள் செல்லும் போது வீதியோரத்தில் நிற்பவர்களையே இழுத்து விழுத்தும் அளவுக்கு காற்ற சைவும் பலத்த அதிர்வும் ஏற்படுகின்றன.

இந்த வாகனங்கள் ஏனைய வாகனங்களைக் கடந்து செல்லும் போது அஞ்ச வேண்டிய நிலை ஏற்படுகின்றது. என்று மக்கள் கூறுகின்றனர்.


மணல் ஏற்றிச் செல்லும் போது மூடிய நிலையில் கொண்டு செல்ல வேண்டும். அல்லது கொண்டு செல்லும் மணல் வெளியே வீசப்படாதநிலையில் கொண்டு செல்லப்பட வேண்டும்.

ஆனால், குறித்த வாகனங்களில் மணலை திறந்த நிலையில் ஏற்றிக் கொண்டு அதிவேகமாகச் செல்கின்றனர். இதனால் வீதியால் செல்லும் மோட்டார் சைக்கிள் சாரதிகள் மற்றும் சைக்கிளில் பயணிப்போர் கண்களுக்குள் மண் வீசப்படுவதால் நிலையில் திணறும் நிலை ஏற்படுகின்றது.

இந்த நிலையால் குறித்த வாகனங்கள் வேகக் கட்டுப்பாட்டோடு வீதியில் செல்வதையும், மணல் வெளியே வீசப்படாமல் எடுத்துச் செல்வதையும் உரிய அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று பொது மக்கள் கோருகின்றனர். (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சதீஸ்கரில் சிக்கியது பல வருட பழமை வாய்ந்த மரப்படிமங்கள்



சதீஸ்கர் மாநிலத்தில் பல லட்சம் ஆண்டுகள் பழமை வாய்ந்த மரப்படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பஸ்தர் மாவட்டத்தில், தொல்பொருள் ஆய்வாளர்கள் இருவர் ஆய்வுகள் மேற்கொண்டபோது 3அடி உயரமுள்ள மிகப் பெரிய பாறை ஒன்றில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது அது பாறை அல்ல என்பதும், பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த மரத்தின் படிமம் என்றும் தெரியவந்தது.

அந்தப் படிமத்தை கிராம மக்கள் துணி துவைப்பதற்குப் பயன்படுத்தி வந்துள்ளனர். மரப்படிமத்தின் தொன்மையைக் கணக்கிடுவதற்காக காபன் ஆய்வுக்குட்படுத்த அதன் மாதிரி எடுக்கப்பட்டு ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. சதீஸ்கர் மாநி லத்தின் சுர்குஜா பகுதியில் 6.5 கோடி ஆண்டுகள் பழமையான படிமங்கள், சில ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டன. (வ)

## மாவோ தாக்குதல்களினால் 5 வருடங்களில் 2500 பேர் சாவு

### உள்துறை அமைச்சகம் தகவல்

டில்லி, மார்ச் 21

மாவோயிஸ்ட்டுகளின் வன்முறை தாக்குதல்களில் கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 2500 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் பழங்குடியின மக்கள் எனவும், பொலிஸாருக்கு உளவு சொல்பவர்கள் என்ற சந்தேகத்தில் மாவோயிஸ்ட்டுகள் அவர்களை சித்திரவதை செய்து கொன்றதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

ஏழைகளும், ஒடுக்கப்பட்டவர்களும் இந்த வன்முறையின் பாதிப்புகளை

**ஏழைகளும், ஒடுக்கப் பட்டவர்களும் இந்த வன்முறையின் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.**

அதிக அளவில் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதனால், சமூக- பொருளாதார முன்னேற்றம் தடைப்படுகிறது.

இந்தத் தடைகளைத் தகர்த்தெறிய சமுதாயமும், ஊடகங்களும் முன்வர வேண்டும் எனவும் அந்த அறிக்கை கூறுகிறது. (வ)



இலங்கையில் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை கண்டித்து அறந்தாங்கியில் மாணவர் கூட்டமைப்பு மற்றும் தமிழர் பாசறை சார்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் போது போர்க்குற்றத்துக்காக ராஜபக்ஷவைக் கண்டித்தும், அவர்மீது சர்வதேசசமுதாயம் நடவடிக்கைஎடுக்கவலியுறுத்தியும் கோஷங்கள்எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்ட முடிவில்ராஜபக்ஷ வின் உருவப் பொம்மை தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. (வ)

## பிக்கு மீதான தாக்குதல்; 3 சந்தேகநபர்கள் கைது



சென்னை, மார்ச் 21

கண்டியைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் சென்னையில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பௌத்த பிக்கு ஒருவர் உட்பட 19 பேர் டில்லியிலிருந்து, தமிழ் நாடு எக்ஸ்பிரஸ் ரயிலில், கடந்த திங்கட்கிழமை காலை சென்னை மத்திய ரயில் நிலையம் வந்த போது, அவர்களை இனந்தெரியாத மூன்று நபர்கள் தாக்கிவிட்டு தப்பிச் சென்றனர்.

இதுகுறித்து மத்திய ரயில்வே பொலிஸார் விசாரணை மேற்கொண்டு சரவணபிரகாஷ், பிரபாகரன், சீனி வாசன் ஆகிய மூவரைக் கைது செய்தனர்.

கைதானவர்கள் பொலிஸாரிடம் அளித்த வாக்கு மூலத்தில், பிக்கு வருவதாக அதே ரயிலில் பயணம் செய்தவர்கள் மூலமாக எங்களுக்குத் தகவல் வந்தது. பிக்குகளை எச்சரிக்கை விடுக்கவே சென்றோம்.

ஆனால், அவர்கள் பேசிய விதம் எங்களுக்குக் கோபத்தை ஏற்படுத்தும் வகையில் இருந்தது. அதைத் தொடர்ந்து அவர்களைத் தாக்கினோம். அவர் களிடம் இருந்து நாம் பணம் எதுவும் பறிக்கவில்லை என்று தெரிவித்தனர்.

இதுதொடர்பாக மத்திய ரயில்வே டி.எஸ்.பி. பொன்ராம், பொலிஸ் அதிகாரி சேகர் ஆகியோர் விசாரணை நடத்தி வருகின்றனர். இதே வேளை தாக்குதலுக்கு இலக்கான பௌத்த பிக்கு நேற்று முன்தினம் இலங்கை திரும்பியுள்ளார். (வ)


# இந்தியா – எகிப்து இடையே 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

### புதிய ஜனாதிபதி மூர்சி டில்லியில் மன்மோகனுடன் சந்திப்பு

டில்லி, மார்ச் 21

இந்தியாவும் எகிப்தும் பாதுகாப்பான இணையத் தளத் தொழில் நுட்பம் உட்பட 7 ஒப்பந் தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

எகிப்தில் 30 ஆண்டு காலம் ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சியை எதிர்த்து கடந்த 2011 இல் அந்த நாட்டு மக்கள் கிளர்ச்சிகளில் ஈடு பட்டனர். அதையடுத்து அவர் பதவி விலகினார். அங்கு முதன்முறையாக ஜனநாயக ரீதியில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, முகமது மூர்சி புதிய ஜனாதிபதியாகப் பொறுப் பேற்றார். தற்போது அவர் இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று



முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்த அவர் இரு தரப்பு உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதித்தார்.


அதன்போது, இந்தியாவுக்கும் எகிப்துக்கும் இடையில் சைபர் எனப்படும் இணையத்தள தொழில் நுட்பப் பாதுகாப்பு, எகிப்தின் அல் அசார் பல்கலைக் கழகத்தில் ஆய்வு மையம் ஒன்றை அமைத்தல், அறிவு சார் சொத்துரிமைப் பாதுகாப்பு, புராதனப் பொருள்கள் சட்டவிரோதமாகக் கடத்தப்படுவதைத் தடுத்தல் ஆகியவை உட்பட 7 ஒப் பந்தங்கள் கைச்சாத் தாகின. இரு தரப்பு ஒத்துழைப்புக்கான துறைகளை இனம் காண்பதற்கும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.

சந்திப்புக்குப் பின்னர் இரு தலைவர்களும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அதன் போது பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்ததாவது:-

அதிபர் மூர்சியும் நானும் விரிவான முறையில் ஆக்கபூர்வமாக விவாதம் நடத்தி னோம். எகிப்தில் புதிய ஜனநாயக சகாப்தத்தை ஏற்படுத்து வதில் அந்நாட்டு மக்களின் வீரம் மற்றும் தியாகம் பாராட்டுக் குரியவை. அந்தநாட்டுடன் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள இந்தியா தயாராக உள்ளது-என்றார். (வ)

## ஹைதராபாத் குண்டுவெடிப்பு:

## தகவல் தருவோருக்கு சன்மானம் ரூ. 10 லட்சம்



ஹைதரபாத், மார்ச் 21

ஹைதராபாத் குண்டுத் தாக்குதல் தொடர்பாக தகவல் கொடுத்தால் 10 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று தேசிய விசாரணைக்குழு அறிவித்துள்ளது.

ஆந்திரத் தலைநகர், ஹைதராபாத்தில் கடந்த மாதம் 21 ஆம் திகதி 2 இடங்களில் சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்தன. அதில் 17 பேர் உயிரிழந்தனர். 117 பேர் காயமடைந்தனர்.

இந்தக் கொடூரத் தாக்குதல் குறித்து தேசிய விசாரணை ஆணையம் நடத்திவரும் விசாரணையில் இதுவரை துப்பு எதுவும் கிடைக்கவில்லை. தீவிரவாதிகள் யாரும் கைது செய்யப்படவில்லை.

இந்தநிலையில், இரட்டைக் குண்டு வெடிப்பை நடத்திய சதிகாரர்கள் குறித்து தகவல் கொடுப்பவருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று தேசிய விசாரணைக்குழு அறிவித்துள்ளது. துப்புக் கொடுப்பவர்களின் பெயர், விவரங்கள் இரகசியமாக வைக்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## லோக்சபாவில் நிறைவேறியது பாலியல் குற்றத்தடுப்பு பிரேரணை

டில்லி, மார்ச் 21

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுக் கும் புதிய சட்டத் திருத்தப் பிரேரணை நேற்று முன் தினம் லோக்சபாவில் நிறை வேற்றப் பட்டுள்ளது.

டில்லியில் மருத்துவ மாணவி பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு உயிரிழந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிக ரிப்பதை அடுத்து, இது போன்ற குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு, கடுமையான தண்டனை வழங்கவும், பெண்க ளுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கவும், குற்றவியல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள மத்திய அரசு முடிவு செய்தது.

அதன்படி திருத்தப்பட்ட பிரேரணைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. அதையடுத்து பிரேரணை நேற்றுமுன்தினம் லோக் சபாவில் தாக்கல் செய்யப்பட்டது. பிரேரணையை மத்திய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே தாக்கல் செய்தார். இந்த பிரேரணைக்கு பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியும் ஆதரவு தெரிவித்தது.

இந்தப் பிரேரணையின்படி, பாலியல் வன்புணர்வுக்கு குற்றங்களுக்கு குறைந்த பட்சம் 20 ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரை சிறை தண்டனை விதிக்க முடியும்.

இதே போல், பெண்கள் மீதான அசிட் வீச்சு தாக்குதலில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக் கவும் பிரேரணை வழிவகை செய்கிறது. இணக்கத்துடன் பாலியல் உறவு கொள் ளும் வயது 18 ஆக தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**அவையில் இல்லை ராகுல் காந்தி**

பிரேரணை மீதான வாக் கெடுப்பு நடைபெற்றபோது, குழந்தைகள் கடத்தல் மற்றும் அசிட் வீச்சுக்கு ஆயுள் தண்டனை விதிக்கும் சட்ட திருத்தத் திற்கு லோக் சபா ஒப்புதல் அளிக்க மறுத்து விட்டது. இந்த முக்கிய பிரேரணை தாக்கல் செய்யப்பட்ட போது காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் ராகுல் காந்தி அவையில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## மார்ச் 25 இல் தி.மு.க. செயற்குழு அவசரக் கூட்டம்

சென்னை, மார்ச் 21

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில், தலைமைச் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சென்னையில் அவசரமாகக் கூடுகிறது.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை தொடர்பாக, மத்திய அமைச்சரவை, ஐக்கிய முற்போக்குக் கூட்ட ணியில் இருந்து தி.மு.க., விலகுகிறது என்று அதன் தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் அறிவித்தார். இந்த அறிவிப்பு வெளியான சில நிமிடங்களில், தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் குறித்த அறிவிப்பும் வெளி யிடப்பட்டது.

இதுகுறித்து தி.மு.க., பொதுச்செயலர் அன்பழகன் வெளியிட்ட அறிக்கையில்,

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில், எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 10 மணியளவில், தி.மு.க. தலைமை செயற்குழுவின் அவசர கூட்டம், சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது. தலைமை செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும், தவறாது கலந்து கொள்ள வேண்டும்-என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இணைய வழித் தாக்குதலில்

## தென்கொரிய முக்கிய வங்கிகள் செயலிழப்பு

சியோல், மார்ச் 21

தென்கொரியாவின் முக்கிய மூன்று வங்கிகள் மற்றும் ஒளிபரப்பு நிலையங்களின் தரவு வழங்கிகள் இணைய வழித் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன என்று தென்கொரியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான வங்கிகளில் இருந்த தகவல்கள் தாக்குதலை மேற்கொண்டவர்களால் திருடப்பட்டுள்ளன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த இணைய வழித்தாக்குதலை தாம் நேற்றுக் கண்டறிந்துள்ளதாகத் தெரிவித்துள்ள தென்கொரிய இணையப் பாதுகாப்புப் பிரிவு, தாக்குதலை மேற்கொண்டவர்கள் 'நாங்கள் யார்' என்ற பெயரில் தம்மை இனங்காட்டியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.




இணையவழித் தாக்குதலை அடுத்து தென்கொரியாவின் முக்கிய மூன்று வங்கிகளின் இணையவழிப் பரிவர்த்தனை செயலிழந்தது என்றும், துரிதகதியில் அவற்றைச் சீர்செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்றும் கூறப்படுகிறது.

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே முறுகல் நிலை உச்சமடைந்துள்ள நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ற)

# அமெரிக்கா தயார்

## அதன் அணுகுண்டு விமானங்கள் கொரியப் பிராந்தியத்தில் பறப்பில்

நியூயோர்க், மார்ச் 21

அமெரிக்க விமானப் படையின் அணுகுண்டுத் தாக்குதலை மேற்கொள்ள வல்ல பி-52 விமானங்கள் கொரியப் பிராந்தியத்தில் தமது பரீட்சார்த்தப் பறப்பை மேற்கொண்டன என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

கொரியத் தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பென்டகனின் செய்தித் தொடர்பாளர் ஜோர்ஜ் லிட்டில்,

''அமெரிக்க விமானப் படையின் அணுகுண்டுத் தாக்குதலை மேற்கொள்ள வல்ல பி-52 விமானங்கள்



கொரியப் பிராந்தியத்தில் தமது பரீட்சார்த்தப் பறப்பை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளன.

தென் கொரியாவுடன் இணைந்து நடத்தப்படும் இராணுவப் பயிற்சியின் ஒரு பகுதியாகவே இந்தப் பறப்பு இடம்பெற்றுள்ளது. எந்த நடவடிக்கைக்கும் தயார் நிலையில் அமெரிக்கப் படைகள் காத்திருக்கின்றன''- என்று தெரிவித்தார்.

ஐ.நா. பொருளாதாரத் தடைகள், தென்கொரியாவுடனான அமெரிக்க போர் ஒத்திகை போன்றவற்றால் ஆத்திரமடைந்துள்ள வட கொரியா, தென்கொரியத் தலைநகர் சியோல் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்துவோம் என்று அண்மையில் எச்சரித்திருந்தது.

அதையடுத்தே அமெரிக்கா அணுகுண்டுத் தாக்குதல் நடத்தவல்ல பி-52 விமானங்களை கொரியப் பிராந்தியத்துக்கு நகர்த்தியுள்ளது என்று கூறப்படுகிறது. (ற)

### இஸ்ரேல் புறப்பட்டார் பராக் ஒபாமா

நியூயோர்க், மார்ச் 21

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இஸ்ரேலுக்கான பயணத்தை ஆரம்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒபாமாவின் இஸ்ரேல் விஜயத்தை முன்னிட்டு பெரியளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இஸ்ரேல் விஜயத்தின் போது எதிர்ப்புகள் கிளம்பக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக பலஸ்தீன எல்லைப் பகுதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர் இஸ்ரேலுக்கு முதல் தடவையாக ஒபாமா பயணம் செய்ய உள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. (ற)

### அமெரிக்க இராணுவ ஆயுதக் கிடங்கில் விபத்து; 6 பேர் சாவு

நியூயோர்க், மார்ச் 21

அமெரிக்காவின் நவாடா மாகாணத்தில் உள்ள ஹார்த்தோர்ன் இராணுவ ஆயுத கிடங்கில் ஏற்பட்ட விபத்தில் 6 படையினர் உயிரிழந்தனர்.

அங்கு பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்திலேயே உயிரிழப்புகள் ஏற்பட்டதென்று கூறப்படுகிறது.

சம்பவ இடத்திலேயே 5 பேர் உயிரிழந்தனர் என்றும் ஒருவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் போது உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 8 பேரில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் கூறுகின்றன.

1920ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூ ஜெர்சி மாகாணத்தில இருந்த இராணுவ ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட விபத்தையடுத்து, இரண்டாம் உலகப் போரின்போது நெவாடா மாகாணத்திற்கு ஆயுதக் கிடங்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

### இந்தியா – இத்தாலி நாடுகள் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் – பான் கீ-மூன்

ஜெனிவா, மார்ச் 21

கடற்படை வீரர்கள் விவகாரத்தில் இந்தியா - இத்தாலி இடையேயான அரசியல் மற்றும் சட்டச் சிக்கல்களை இரு நாடுகளும் சர்வதேச விதிமுறைகளின்படி பேசித் தீர்வு காண வேண்டும் என ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி-மூன் வலியுறுத்தியுள்ளார்.

கேரள மீனவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம் இருநாடுகளுக்கும் இடையே முறுகல் நிலையை ஏற்படுத்தியுள்ளது. தற்போது இத்தாலி தூதர் இந்தியாவை விட்டு வெளியேறக் கூடாது என்று இந்திய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பான் கீ-மூன்,

இந்தியா-இத்தாலி இடையே எழுந்துள்ள அரசியல் மற்றும் சட்டப் பிரச்சினைகளை ஆக்கப்பூர்வமான மனநிலையுடன் அணுக வேண்டும். இந்த விவகாரத்தில் சர்வதேச கட்டுப்பாடுகளின்படி இரு நாடுகளும் இணக்கமாக செயல்பட்டு தீர்வு காண வேண்டும்- என்று தெரிவித்தார். (ற)



புதிய போப்பாண்டவராகத் தெரிவு செய்யப்பட்ட போப் பிரான்ஸில் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றுக் கொண்டார். பதவியேற்றபின்னர் சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் திரண்டிருந்த மக்களுக்கு அருளாசி வழங்கினார். இயற்கையைப் பாதுகாக்க வேண்டும், மக்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் என்பதைத் தமது அருளாசியில் அவர் வலியுறுத்தியிருந்தார்.

### சீனச் சரக்கு கப்பல் விபத்து; 11 பேர் சாவு

பீஜிங், மார்ச் 21

சீனச் சரக்குக் கப்பல் விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 11 பணியாளர்கள் உயிரிழந்தனர். இந்த விபத்து சீனாவின் ஷண்டாங் கடற்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாகவே விபத்து இடம்பெற்றுள்ளது. கடும்போராட்டத்தின் பின்னர் பணியாளர் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டார் என்றும் உயிரிழந்தவர்களில் 11 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளனர். (ற)

## இரசாயனத் தாக்குதல்?



டமஸ்கஸ், மார்ச் 21

சிரிய உள்நாட்டுப் போரில் முதன்முறையாக இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிரியாவின் வடக்குப் பகுதிக் கிராமம் ஒன்றில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலின் போதே இரசாயனக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

தாக்குதலுக்கு உட்பட்டவர்கள் இனங்காண முடியாத பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டமையை உறுதிப்படுத்த முடியாதுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளது. (ற)

## ஈராக் மீதான தாக்குதல் குறித்து ஒருபோதும் கவலைப்பட்டதில்லை

### பிரிட்டன் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர்

லண்டன், மார்ச் 21

ஈராக் மீது நேட்டோ படைகள் நடத்திய தாக்குதல்கள் குறித்துத் தாம் வருத்தமடையவில்லை என்று பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் கூறியுள்ளார்.

ஈராக்கில் நேட்டோ படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் பூர்த்தியானதை நினைவுகூரும் நிகழ்ச்சி ஒன்று லண்டனில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரொனி பிளேயர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கும் மேலும் தெரிவித்ததாவது:-

''ஈராக் மீது நேட்டோ படைகள் நடத்திய தாக்குதல்கள் குறித்து நான் ஒருபோதும் வருத்தமடைந்ததில்லை. சதாம் ஹுசைன் இருந்திருந்தால் தற்போது ஈராக்கில் பெரும் கிளர்ச்சி வெடித்திருக்கும். அது சிரியாவை விட மோசமான கிளர்ச்சியாக அமைந்திருக்கும். கிளர்ச்சி செய்தவர்கள் மிக மோசமாகக் கொலை செய்யப்பட்டிருப்பார்கள். ஈராக் மீது நேட்டோ படைகள் எடுத்த நடவடிக்கைகள் சரியான தொன்றே.

அதேபோன்று சிரிய விவகாரத்திலும் மேற்குலக நாடுகள் தலையீடு செய்யவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அதற்கு பெரியதொரு



விலையை மேற்கு நாடுகள் செலுத்த நேரிடும்.''- என்று தெரிவித்தார்.

சதாம் ஹுசைனுக்கு எதிராக 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி நேட்டோ படைகள் தமது படை நடவடிக்கையை ஆரம்பித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு புதிய சவால்

## திஸ்ஸ விதாரண கூறுகிறார்

கொழும்பு,மார்ச்21

போர் முடிவுக்கு வந்தாலும் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளால் நாடு புதிய சவாலுக்கு முகம் கொடுத்துள்ளது என்று சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். எட்டியாந்தோட்டை பொலிஸ் நிலையத்துக்கான புதிய கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையில் சட்டத்தை யார் மீறினாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இதனைச் சர்வ கட்சி தலைவர்கள் மாநாட்டில் நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்தேன் என்று அவர் குறிப்பிட்டார்.

3 தசாப்த காலப் போர் முடிந்து விட்டது. எனினும் நாடு இன்று புதியதொரு சவாலுக்கு முகம் கொடுத்துள்ளது. இந்தச் சவால் நாட்டில் இன்னுமொரு சிங்கள - முஸ்லிம் இனமுறுகலைக் கொண்டு வராத வகையில் பொறுப்பு வாய்ந்தவர்கள் செயற்பட வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார். (ச)

# இலங்கையர்கள் தமிழகம் செல்லத் தடை

## கோத்தபாய அறிவிப்பு



கொழும்பு,மார்ச்21

இலங்கையர்கள் தமிழகம் செல்வதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். தற்போதைய நிலைமையில் இலங்கையர்களின் பாதுகாப்புக்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அண்மைய காலத்தில் இலங்கை பிக்குகள், தமிழகத்தில் சில சக்திகளால் தாக்கப்பட்டுள்ளனர். இந்தநிலைமையை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்வரை, இலங்கையர் தமிழகம் செல்வது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது என்று அவசர கூறியுள்ளார்.

தமிழகம் ஊடாக யாத்திரை மேற்கொள்வதற்கும், தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் புனித தலங்களுக்கு யாத்திரிகர்களை அழைத்துச் செல்லும் போது, தமிழகத்தினூடாக செல்வதை உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் இடைநிறுத்த வேண்டும் என்று அவர் அறிவித்துள்ளார்.

இந்த உத்தரவை மீறி, யாத்திரிகர்களை அழைத்துச் செல்லும் பட்சத்தில், இலங்கையர்களின் பாதுகாப்பு கருதி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வலுவிழக்கச் செய்தது இந்தியாவே

## சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச்21

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியாவே நலிவடையச் செய்தது என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மானத்தை ஆதரிப்பதா, இல்லையா என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை சர்வதேச நாடுகள் எதிர்ப்பார்த்திருக்கின்ற நிலையில், தமது முடிவை உத்தியோகபூர்வமாக அறிவிக்காத இந்தியா, இந்த விடயத்தில் மதில்மேல் பூனை என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றது.

தீர்மானத்தை மேலும் வலுவடையச் செய்வதற்கும் இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க்குற்ற விசாரணையை நடத்தவும் இந்தியாவலியுறுத்த வேண்டும் என்றும் தமிழ்நாட்டில் போராட்டங்கள் வெடித்து வருகின்றன. அந்தநிலையில் பிரேரணையை இந்தியா நலிவடையச் செய்துள்ளது என்று சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, சபைக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவர் தனது அறிக்கை மூலம் பரிந்துரைத்திருந்தார். அதனையடுத்து ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா சமர்ப்பித்தது.

> இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப் படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்

இந்தத்தீர்மானத்தில் நவநீதம் பிள்ளையின் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை அமெரிக்காவும் வலியுறுத்தி இருந்தது. இந்தத் தீர்மானத்தைக் கடுமையாக்கவும், மென்மையாக்கவும் பல்வேறு உலக நாடுகள் தமது கருத்துகளை சேர்க்க வலியுறுத்தியிருந்தன. இந்தநிலையில், மேற்படி பிரேரணையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இறுதியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் இறுதி வரைபில் சர்வதேச விசாரணை நீக்கப்பட்டுள்ளது. தற்போது இறுதியாக வாக்கெடுப்புக்காக முன்வைக்கப்பட்டிருக்கும் தீர்மானத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தக் கோருவது என்பது நீக்கப்பட்டுவிட்டது. அதற்கு இந்தியாவின் அழுத்தமே காரணம் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியப் பிரதிநிதி அனந்த பத்மநாபன் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கைக்கு எதிராக மிகக் கடுமையான ஒரு நிலைப்பாட்டை மேற்கொண்டிருக்கும் நிலையில் 'இந்தியாவின் செல்வாக்குத்தான்' இலங்கையைக் காப்பாற்றியிருக்கிறது என்றும் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ச)


## கண்ணீர் அஞ்சலி

அமரர் J.R. இராஜசேகரம்

(Senior Consultant Technical officer, RDC Package 02)



அன்பும் பாசத்துடனும் அர்த்தத்துடனும் பழகிய உள்ளம் கடமையில் கரிசனையுடனும் காதலுடனும் நடந்து கொள்ளும் இனிதாகப் பழகி இயல்பாக மற்றோர் மனதில் எளிதாக குடி கொண்ட பெரு மனிதர் இனிமேலும் எம்முடன் இல்லை. ஆனாலும் அவர் பண்பும் பெருந்தன்மையும் நாம் அவரிடம் பெற்ற பாதரட்சைகள்

மீளாத் துயில் கொண்டு இறைவனடி சேர்ந்த அன்னாரின மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**Site Manager & Staff,**
Nawaloka Construction
Jaffna Road Project,
Package 02.

(34624)(10.6.7)

## மரண அறிவித்தல்



திருமதி சச்சிதானந்தம் கிருஸ்ணகுமாரி

இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல.11, அரசடி ஒழுங்கை (தட்டாதெரு சந்தியடி), வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சச்சிதானந்தம் கிருஸ்ணகுமாரி நேற்று முன்தினம் (19.03.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ந.சச்சிதானந்தம் (ஓய்வு நிலை முகாமையாளர், இலங்கை வங்கி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆனந்தராசா (ஆசிரியர்) மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா - நாகம்மா தம்பதியரின் மூத்த மருமகளும், தர்சிகா (ICBT City Campus), கோபிநாத் (பொறியியற் பீடம்), பானுரேகா (மருத்துவத்துறை, பங்களாதேஷ்) ஆகியோரின் அன்புத் தாயும், அக்ஷயா, அபிநயா ஆகியோரின் பேர்த்தியும், சந்திரமோகன், நந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும், ராஜா (மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - கிளிநொச்சி), காலஞ்சென்ற ரதிதேவி மற்றும் சிறீதரன் (ஜேர்மனி), நகுலேசன், ரதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ராஜா இரத்தினேஸ்வரி, இ.கிருஸ்ணராசா, சி.சியாமளா, ந.வினோதா ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (22.03.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இல.11, அரசடி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(34622) (45.6.7)

## வீடு உடன் தேவை

கொக்குவில் இந்துக் கல்லூரியை அண்டிய பகுதியில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 060 2224 (34623) (6.7.11)

## வேலையாள்கள் தேவை

இயக்கச்சியிலுள்ள பிரபல தோட்டம் ஒன்றுக்கு தோட்ட வேலையாள் மற்றும் சமையலாள் (ஆண்கள் தேவை).

தொடர்பு: 077 3361 750

## வாகனம் விற்பனைக்கு

TOYOTA LITE ACE
பெற்றோல் வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777 656 918 (34619) (6.7.11)

## பெயர் மாற்றம்

அரிப்பு கிழக்கு, சிலாவத்துறை, மன்னார் எனும் முகவரியைச் சேர்ந்த டொமின் றில்டா பீரிஸ் மரியதாசன் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து அருட் சகோதரி கிறேஸ்லின் என பெயர் மாற்றம் செய்வதோடு, சகல ஆவணங் களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதை அறியத்தருகிறேன்.

அருட் சகோதரி கிறேஸ்லின்

(C/7152)(6.7.11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலயத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்சென்ற எமது வித்தியாலய முன்னாள் அதிபரும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளருமாகிய

**சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜா**

அவர்கள் SLEAS III தரத்துக்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

(27850)(2.6.)

கிளி/கண்டாவளை மகாவித்தியாலய சமூகம்.

## UNIVERSITY OF Jaffna, Sri Lanka

Reference to the paper advertisement which was appeared in this Newspaper on 13.03.2013 under the caption of **"Outsourcing of Services for Preparation of Fixed Assets Register"**.

**Please note and include the following information in respect of above**

Bids documents can be obtained from 15.03.2013 to 03.04.2013 and duly perfected documents should be submitted **on or before 12.04.2013 at 2.00 pm** and the bids will be opened on the same day.

**Registrar**

(C/7151)(6.7.11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரிகளுக்கு எதற்கு இராணுவப் பயிற்சி?

கொழும்பு,மார்ச் 21

பட்டதாரிகளுக்கு பலவந்தமாக இராணுவப் பயிற்சி வழங்க முயற்சிக்கப்படுகிறது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் கடமையாற்றி வரும் 16000 பட்டதாரிகளுக்கு இவ்வாறு பயிற்சி வழங்கப்பட உள்ளது என்று பட்டதாரிகள் மத்திய நிலையத்தின் இணைச் செயலர் தம்மிக்க முனசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

மூன்று கட்டங்களாக பயிலுநர் பட்டதாரிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

முதல் கட்டமாக ஒரு தொகுதி பட்டதாரிகளுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஏப்ரல் 9 ஆம் திகதி வரை பயிற்சி வழங்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

பட்டதாரிகளுக்கு ஆறு மாத காலத்துக்குள் நிரந்தர நியமனம் வழங்குவதாகக் கூறி சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

எனினும் இதுவரையில் பட்டதாரி பயிலுநர்களின் சேவை நிரந்தரம் ஆக்கப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஏ)

# ஆட்சி மாற்றத்துக்காக காத்திருக்கின்றனர் மக்கள்

## கடன் நெருக்கடியில் அரசு என்கிறார் சஜித்



கொழும்பு,மார்ச் 21

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் காத்திருக்கின்றனர் என்று ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முழு சமூகத்தையும் அழிவடையச் செய்து வரும் இந்த அரசைத் தோற்கடிக்க மக்கள் காத்திருக்கின்றனர்.

1977 ஆம் ஆண்டைப் போன்று ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் முயற்சிக்கின்றனர். அரசு மட்டுமன்றி மக்களும் கடன் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டை அபிவிருத்தி செய்யப் போதியளவு நிதி இல்லாவிட்டால் கடன் பெற்றுக்கொள்ள நேரிடும்.

வறியவர்களுக்கு உதவிகளை வழங்கக் கூடிய ஓர் ஆட்சியை நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.-என்றார். (ச)

# தேங்கிக் கிடந்த வெளிநாட்டுத் தபால்கள் சென்றடைந்தன

ஸ்தம்பிதமடைந்திருந்த வெளிநாட்டு தபால் சேவை காரணமாகத் தேங்கிக்கிடந்த தபால் பொதிகள் உரிய நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தபால் சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்குத் தபால் பொதிகளை அனுப்பிவைப்பது தொடர்பில் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த நிறுவனத்திடம் வழங்கப்பட்டிருந்த தபால் பொதிகள் சில இடங்களில் விநியோகிக்கப்படாமல் ஸ்தம்பிதமடைந்திருந்தன என்று தபால் மா அதிபர் ரோஹன அபேரத்ன கூறினார்.

எனினும், குறித்த நிறுவனம் தற்போது அனைத்துத் தபால் பொதிகளையும் உரிய இடங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# பிக்குகள் தாக்கப்பட்டமைக்கு அரசியல் தலைவர்களே காரணம்

## குற்றம் சாட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 21

தமிழ் நாட்டில் பிக்குகள் தாக்கப்பட்டமை தொடர்பில் முஸ்லிம் தீவிரவாத இயக்கம் ஒன்றுக்கும் தொடர்புள்ளதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. இவ்வாறான நிலைமைகள் உருவாகுவதற்கு இலங்கையில் உள்ள அரசியல்வாதிகளே காரணம் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இதனை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளும் அடாவடித்தனங்களும் இன்னும் ஓயவில்லை. அரசு அவர்களைச் சுதந்திரமாக வாழ இடமளிக்க வேண்டும்.

இது பல்லின மக்கள்வாழும் நாடு. ஒருவரை ஒருவர் அடிமைப்படுத்தி வைக்கவோ,அடக்கிஆளவோ முனையக் கூடாது.

முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்படுகின்றன. முஸ்லிம்களுக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்துகின்றனர். சம்பிரதாய உடைகளிலும் கைவைத்து விட்டனர்.

அதேவேளை தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி உள்ளனர். தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுள்ளனர்.

13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம் என ஜனாதிபதி இந்தியாவிடம் உறுதியளித்தார். ஆனால் இன்றுவரை எதுவும் செய்யப்படவில்லை.

இதனாலேயே தமிழ் நாட்டில் இன்று கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தநிலை இப்படியானதற்கு இங்கிருக்கின்ற அரசும், அரசியல்வாதிகளுமே காரணம்.

தமிழ் நாட்டில் பௌத்த பிக்குமார் தாக்கப்பட்டமைக்கு நான் எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றேன். இப்படியான செயல்கள் இனிமேல் நடக்க இடமளிக்கக் கூடாது என முதல்வர் ஜெயலலிதாவையும், கருணாநிதியையும் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க தமிழ் நாட்டுக்கு இலங்கையர்கள் செல்வதை உடனடியாகத் தடுக்க வேண்டும் என்று கூறுகின்றார். அது பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது.

தமிழ் நாட்டில் பிக்குமார் தாக்கப்பட்டனர் என்பதற்காக வெள்ளவத்தையில் ஒரு கோயிலில் இரண்டு, மூன்று குருமார்களை வெட்டிவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமா?

நான் சிங்கள தீவிரவாதியோ, முஸ்லிம் தீவிரவாதியோ அல்லது தமிழ் தீவிரவாதியோ அல்ல. அனைத்து இனமக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே எனது நோக்கம்.

இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான பிரச்சினை அல்ல. முழு நாட்டுக்குமான பிரச்சினை.

தமிழ் மக்களைத் தாக்குவதும் பள்ளிவாசல்களைத் தாக்குவதும், ஆர்ப்பாட்டங்களை நடத்துவதும் யார்?, இவர்களைத் தூண்டிவிடுவது யார்? இவை முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்-என்றார். (த-2)

கரைச்சி
புளியம்பொக்கனை நாகதம்பிரான்
ஆலயம்

தண்டல் ஒழுங்குகள்

ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கலை முன்னிட்டு வழமையான கிராமங்களுக்கு ஆலய இலட்சினை பொறிக்கப்பட்ட உழவு இயந்திரங்களில் எமது தொண்டர்கள் நேற்றிலிருந்து (20.03.2013) வருகை தருகிறார்கள். அவர்களிடம் அடியார்கள் தமது நேர்த்திப் பொருள்களை வழங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

வேறு எவருக்கும் தண்டல்கள் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதனையும் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

(C/7143)
(10.6)
ஆலய பரிபாலன சபையினர்.

# பதிவு இல்லை; மருந்து விற்பனை நிலையத்துக்கு 'சீல்'

இரண்டு வருடங்களாக தேசிய மருந்துப் பொருள் அதிகார சபையில் பதிவு செய்து கொள்ளாமல் பத்தரமுல்லையில் மருந்துப் பொருள்களை விற்பனை செய்து வந்த வியாபார நிலையம் 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளது.

அழகு சாதனப் பொருள்கள் மற்றும் தேசிய மருந்து பொருள் அதிகார சபையின் அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின் போதே இந்த மருந்துப் பொருள் விற்பனை நிலையம் பதிவு செய்யப்படாது செயற்பட்டமை தெரிய வந்துள்ளது.

இந்த விற்பனை நிலையத்தில் இருந்த சகல மருந்துப் பொருள்களும் தேசிய மருந்துப் பொருள் அதிகார சபையினால் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)




இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12. T.P 0777 2776 70

ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 2567

★ விளையாட்டுத்துறையில் வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வீறு கொண்டெழும் விசேட சக்தியை வழங்குவது ரோயல் குளுக்கோஸ்
★ நோயுற்றவேளை சோர்வுற்று இருக்கும் உங்களுக்கு புத்துணர்வும் புதுத்தென்பும் தருவது ரோயல் குளுக்கோஸ்
★ காலை முதல் மாலைவரை வேலை அதிகம் காரணமாக சோர்வுற்ற நிலை அடையும் போது புதிய உற்சாகம் பெற உங்கள் கையில் இருக்க வேண்டியது ரோயல் குளுக்கோஸ்
★ மழலைகட்கும் மகப்பேற்றுத்தாய்மாருக்கும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் முதியோருக்கும் ஏதாகதாயினும் காலத்தில் இருந்து முன் நின்று உற்சாகம் தருவது ரோயல் குளுக்கோஸ்
சந்தைப்படுத்துவோர்:- சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உற்பத்தியாளர்:- ரோயல் இன்டஸ்ரீஸ், ஆல்வொண்டில் ஸ்ரீற், கொழும்பு - 13

நினைவலைகள்
50 ஆம் வருடம் 26 ஆம் வருடம்
13.04.1920 தோற்றம் 17.06.1927



21.03.1963 மறைவு 12.10.1987

அமரர் வி.மார்க்கண்டு
(தபாலதிபர்)
திருமதி பத்மாவதி மார்க்கண்டு

தாயிற்சிறந்த கோயிலுமில்லை தந்தை
சொல்மிக்க மந்திரமுமில்லை
ஆயிரம் உறவில் பெருமைகளில்லை
அன்னை தந்தையே அன்பின் எல்லை.

"ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ
முடிந்த காரியம், நாம் அறியோம்
முழுவதும் உண்மை"

நீங்கா நினைவுகளுடன் வாழும்
வி.மா.இராமலிங்கம் (J.P - மகன்),
இ.துஷ்யந்தி (மருமகள்),
பேரப்பிள்ளைகள்:
இ.குமரன், இ.ராஜீவன் (கனடா),
ரா.திசாரதி, இ.ஜெனகன் (கனடா).

சிவன் ஊர்வு,
201, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். (35415)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களே..

இன்றைய நவீன உலகில் நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களே தான். 'பேஸ்புக், இன்ரநெற், தொலைபேசி என்பன மனிதனின் ஆற்றலை, அறிவை வளர்க்கவே தோற்றம் பெற்றவை. ஆனால் இன்றைய இளைஞர்கள் அவற்றைத் தவறான முறையில் பயன்படுத்தி தமது எதிர்காலத்தையே சீரழித்துக் கொள்கின்றனர்.

இன்றைய நவீன உலகில் ஆண்கள் எத்தனை பிஞ்சு மழலைகளின் உயிரையும் வாழ்க்கையையும் சீரழித்து விட்டார்கள். பாடப் புத்தகத்தை சுமந்து செல்லும் அந்தப் பிஞ்சு மழலைகளுக்குப் பாடசாலையில் கூட பாதுகாப்பு இல்லை. ஏனெனில் அங்கும் காமவெறி கொண்ட ஆண்கள் உள்ளார்களே. இதனைவிட இன்றைய நவநாகரிக உலகில் ஒரு ஆணுக்கு தன் மனைவிக்கும் மகளுக்கும் வேறுபாடு தெரியாத அளவுக்கு கலாசார முறைகேடுகள் பெருக, நவீன நாகரீக நடைமுறை மீதான ஈர்ப்பும் ஒரு காரணமாகவே அமைகிறது.

பெண்ணுக்கு வெளி இடத்தில் பிரச்சினை என்றால் சகோதரனிடம் அல்லது தந்தையிடம் தனது பிரச்சினையைக் கூறித் தீர்வு தேடிக் கொள்ளலாம். ஆனால் இன்றைய நவநாகரிக உலகில் பெண்களுக்கு வீட்டுக்குள்ளேயே பிரச்சினை ஏற்பட்டால் அவர்கள் தான் என்ன செய்வது?

இதனைவிட இன்றைய இளைஞர்கள் சினிமா மோகத்தில் அதிகம் மூழ்கிவிட்டார்கள். சினிமாவில் நாயகன் மோட்டார் சைக்கிளையோ அல்லது ஏதோ ஒரு வாகனத்தையோ செலுத்தும் விதத்தைப் பார்த்து விட்டு இன்றைய இளைஞர்கள் தாமும் அதே ஸ்டைலைக் காட்டுவதாக நினைத்து தம் உயிருக்குத் தாமே உலை வைத்துக் கொள்கிறார்கள்.

- இராஜேந்திரராஜா ராகவி

இன்றைய இளைஞர்கள் சினிமாவில் அதிகம் மூழ்கி தம் ஸ்டைலைக் காட்டுவதாக நினைத்து தம் உயிருக்குத் தாமே உலை வைத்துக் கொள்கிறார்கள்.



## யாரவர்.......!

எறிகணைகள்
எனை முத்தமிடாமல்
ஒழிந்து கொண்டேன்

ஓரமாய் ஒருவர்
பதுங்கியிருந்தது கண்டு
அவரருகில் நான் பதுங்க,
சிறுநேரத்தின் பின்
சத்தம் முழுதாய் அடங்கிவிட

தட்டிப் பார்த்தேன்
அண்ணலை
அசைவைக் காணோம்
ஏனெனில் ஏற்கனவே
அங்கு படுத்திருந்தது
ஆன்மா விடைபெற்ற
அடையாளம் தெரியாவுடல்
ஆடிப்போனேன்....
அடையாளம் காண
முடியாமல்!

ம.பிரதாஜினி



## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................................

முகவரி :-..............................................................

..............................................................

........................ திகதி ........................ கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# என்றும் அழியாத,அழித்திட இயலாத கல்விச் செல்வம்

21 ஆம் நூற்றாண்டில் காலதடம் பதித்த எம்மவர், வாழ்வில் கண்டதைக் கற்பவன் பண்டிதன் ஆவான் என்ற முதுமொழிக்கு இணங்க நூல்கள் பலவற்றையும் கற்றால் எம்மில் வாசிப்புத்திறன், ஆர்வம் அதிகரித்து உலக அறிவு பற்றிய தகவல் பலவற்றைத் தெரிந்து அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கிட்டும்.

எழுத வாசிக்க தெரிந்தவனுக்குத் தான் வாழ்வியலின் நன்மை, தீமைகள் பற்றி விளங்கும். அன்றைய பெரியோர், கற்றோர் முகத்திரண்டு கண்ணுடையர், கல்லாதோர் முகத்திரண்டு புண்ணுடையர்'' என்ற தமது அனுபவ வார்த்தைகள் மூலம் கல்வியின் சிறப்பை உணர்த்தி வைத்தனர். உலகத்தில் எத்தனை புத்தகங்கள் உண்டு. அவற்றையெல்லாம் எம்மால் வாசிக்க முடியுமா? என நினைக்கலாம். ஆனால் ஔவை மூதாட்டியோ,

''ஊருணியில் நீர் நிறைந்தற்றே உலகவாம் திரு'' என்று கல்வியைக் கசடறக் கற்றோர் ஒரு ஊரின் நடுவில் இருக்கும் நன்னீர் கிணற்றுக்கு ஒப்பானவர்கள் எனச் சிறப்பித்துக் கூறி வைத்தார்.

சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி,
சுதுமலை தெற்கு.

## சிந்தனைக்கு....

★ வறுமையால் பெரிய துன்பம் என்று இல்லை. அதே போல் செல்வத்தால் மிகுந்த நன்மையும் இல்லை.

★ எதிரியின் கர்வத்தை மாற்ற உபயோகிக்கும் மருந்து அன்பு.

★ தளராத இதயம் உள்ளவனால் இவ்வுலகில் முடியாதது எதுவுமில்லை.

வெற்றி என்பது, இலட்சியத்தைப் படிப்படியாக புரிந்து கொள்வது.

★ ஒரு மனிதனுக்கு என்ன நடந்ததோ அது அனுபவமாகி விடாது. தனக்கு நடந்ததை வைத்தே அவன் என்ன செய்கிறான் என்பது தான் அனுபவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021- 2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா போன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் - மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்ட்ரிசிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

# பணம் தின்னும் வாகனம்

ரகுவும், சுரேஸும் ஊரிலேயே பணக்காரர்கள். அவர்கள் இரண்டு பேருக்கும் எப்போதும் ஒருவர் மீது ஒருவர் பொறாமை. ஒருநாள் ரகு வீட்டுக்கு சுரேஸ் வந்தான்.

" நாங்கள் இருவரும் எதிரிகளாக இல்லாது இன்று முதல் நல்ல நண்பர்களாக இருப்போம். அதற்கு அடையாளமாக இந்தப் பரிசைப் பெற்றுக் கொள்." என்று சுறி சுரேஸின் கைகளில் நாலைந்து சாவிகளை திணித்தான் ரகு. சுரேஸுக்கு ஒன்றும் புரியவில்லை.

"சுரேஸ்! இவை புதிய வாகனங்களின் திறப்புகள். எல்லாம் உனக்குத் தான். இவற்றை தவணைக் கட்டண அடிப்படையில் உனக்காக வாங்கியுள்ளேன். நீ மாதாமாதம் சிறு தொகையைச் செலுத்தினால் போதும். இந்த வாகனங்களுக்கு நிரந்தரச் சொந்தக் காரனாகி விடுவாய்." என்று சொல்லிச் சென்றான் ரகு.

சுரேஸுக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. 'என்னை நாலைந்து வாகனங்களுக்கு முதலாளியாக்கிப் பார்க்க நினைக்கும் ரகுவை இத்தனை நாளும் தவறாக நினைத்து விட்டேனே.' என்று எண்ணிக்கொண்டான்.

அன்று முதல் ஊரில் சுரேஸுக்கு இன்னமும் மதிப்புக் கூடியது. பின்னே சும்மாவா. ஏழு எட்டு வாகனங்களின் முதலாளி ஆயிற்றே. ஆயினும் முதலாளி என்ற பெயர்தான் கிடைத்ததே தவிர வாகனங்களால் கிடைக்கும் வருமானத்தை விடவும் அவற்றைப் பராமரிப்பதற்கான செலவுதான் அதிகமாக இருந்தது. இதைவிட மாதாமாதம் தவணைக் கட்டணம் என்ற பெயரில் பெரும் தொகையை சுரேஸ் கட்ட வேண்டியிருந்தது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக சுரேஸின் செல்வம் கரைந்து கொண்டே போனது. தவணைப் பணம் கட்டுவதற்காக தன்னுடைய நில புலன்கள், வீடு என்று ஒவ்வொன்றாக விற்றான். கடைசியில் மிச்சமாக இருந்த வாகனங்களையும் விற்ற பின்னர் தான் அவனால் தவணைப் பண கெடுபிடியில் இருந்து மீள முடிந்தது. கடைசியில் அவன் நடுத்தெருவுக்கு வந்திருந்தான். அவனைப் பார்த்து கேலியாகச் சிரித்தபடியே வந்தான் ரகு.

" பார்த்தாயா.... நாலைந்து வாகனங்களுக்கு முதலாளியாக ஆசைப்பட்டு நடுத் தெருவுக்கு வந்துவிட்டாயே. என் திட்டம் பலித்து விட்டது. இப்போது நான் தான் ஊரிலேயே பணக்காரன்." என்று கொக்கரித்தபடியே செல்ல, தலைகுனிந்தான் சுரேஸ்.

இந்தக் கதை வெறும் வேடிக்கையானது மட்டுமல்ல. இப்போது நம்மைச்சுற்றி நடப்பவையும் இவைதான். இளைஞர்களுக்கு புதிய ரக வாகனங்கள் மீது எப்போதுமே அலாதி பிரியம் உண்டு. நாமும் மற்றவர்களைப் போல புதிய ரக கார், மோட்டார் சைக்கிள் என்பவற்றை விதவிதமாக வாங்க வேண்டும் என்ற இளைஞர்களின் கனவுக்கு பணம் பெரும் தடையாக இருக்கிறது. பல லட்சங்களைக் கொட்டி புதிய வாகனங்களை வாங்க எல்லா இளைஞர்களாலும் முடிவதில்லை.

எனவே அவர்களின் கனவை தவணைக் கட்டண முறையிலான வாகனக் கொள்வனவுகள் நனவாக்குகின்றன. எனினும் தொழில் சார் நோக்கமல்லாது வெறும் பகட்டுக்காக மட்டும் தவணைப் பண முறையில் வாகனங்களைக் கொள்வனவு செய்தால் உள்ளதும் போய் விடும் நிலையே ஏற்படும்.

அண்மையில் தென்மராட்சியில் பிடிபட்ட கொள்ளைக் கும்பலைச் சேர்ந்தவர்கள் "வாகனங்களைத் தவணைப்பணத்தில் வாங்கி, அதனைக் கட்ட முடியாத நிலையாலேயே கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடத் தொடங்கினோம்." என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஒருவரை வாழ்வில் கீழ் நிலைக்கு இட்டுச் செல்வதோடு மட்டுமல்லாது சமூகவிரோதியாகவும் மாற்றி விடக்கூடிய அபாயம் இத்தகைய தவணைப் பண வாகனக் கொள்வனவில் இருக்கின்றன. எனவே எங்களால் குறித்த தவணைப்பணத்தை கட்டும் வல்லமை உண்டா? அவ்வாறு வாங்கும் வாகனத்தால் உரிய பயன் உண்டா? என்று ஆராய்ந்த பின் காரியத்தில் இறங்குவது நலம்.

இல்லாவிட்டால் ஆனையை வீட்டிலே கட்டி வளர்க்க முற்பட்டது போல அந்தரிக்க வேண்டியிருக்கும்.

# ஈழத் தமிழரை அழித்தொழிக்க இந்தியாவின் 'ஆடு புலி ஆட்டம்'

இலங்கைத் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துயரங்கள் பற்றிய உறுப்பினர்களின் உணர்வுகளை நானும் பகிர்ந்துகொள்கிறேன். இலங்கையில் தமிழ் மக்கள் கண்ணியத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்வதை, இலங்கை அரசு உறுதிசெய்ய வேண்டும். இலங்கையில் பிரச்சினைகள் இருக்கின்றன. இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் நிலையை எண்ணி நாம் மிகுந்த கவலைக்குள்ளாகி இருக்கிறோம் - இதுதான் மன்மோகன் சிங்கின் வார்த்தைகளின் சாராம்சம். கவலை அளிக்கிறது, துக்கப்படுகிறோம், கவனிக்கிறோம், பார்க்கிறோம், பரிதாபப்படுகிறோம், யோசிக்கிறோம், சொல்கிறோம் என்பதைத் தாண்டி அவரது வாயில் இருந்து எந்த வார்த்தையும் வரவில்லை. வரவும் வராது.

வந்தால், இலங்கையில் நடந்த இறுதிப் போரின் மத்திய காங்கிரஸ் அரசாங்கம் செய்த உதவிகளை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அம்பலப்படுத்திவிட மாட்டாரா? அந்தப் பயம்தான், மன்மோகன் சிங்கை ஆட்டிப்படைக்கிறது. சோனியாவை அச்சம்கொள்ள வைக்கிறது. இலங்கைத் தமிழ் மக்கள் துயரம் அடைந்து வருவது, பாரதீய ஜனதாவைச் சேர்ந்த யஷ்வந்த் சின்ஹாவும், வெங்கய்யா நாயுடுவும் சொல்லித்தான் - மன்மோகன் சிங்குக்குத் தெரியுமா?

2004-ம் ஆண்டு முதல் ஈழத் தமிழர் விவகாரத்தில் தன்னுடைய மனச் சாட்சியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அடகுவைத்துவிட்ட மனிதர் ஒருவர் உண்டென்றால், அது மன்மோகன் சிங்தான். கொத்துக் குண்டுகளைப் போட்டும், வெள்ளை பொஸ்பரஸைத் தூவியும் ஓர் இனத்தையே கருவறுத்தபோது அதை, ஜடமாக இருந்து பார்த்தவர் அவர்தான். இதைக் காங்கிரஸ் அரசு மறைக்கலாம். மறுக்க முடியாது.

இலங்கை ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்கும்போது, அந்த நாட்டில் போர் இல்லை. நான்கு ஆண்டுகளாக போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்தது. அதைமீறி சண்டையைத் தொடங்கி, ஈழத் தமிழர்கள் அனைவரையும் முடிக்க நினைக்கிறார் அவர். இந்திய அரசும் தமிழக அரசும் தங்களுக்குச் சாதகமாக நடந்து கொண்டால் நல்லது என்று அவர் நினைக்கிறார். பிரதமர் மன்மோகனை வந்து சந்திக்கிறார். இராணுவரீதியாக உதவி செய்யும் கோரிக்கையுடன் அவர் வருகிறார். மத்திய அரசும் அதற்குச் சம்மதிக்கிறது.

தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவைச் சந்திக்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிடுகிறார். ஆனால், அதை ஜெயலலிதா நிராகரிக்கிறார். இது அவருக்கு ஏமாற்றம் அளித்தாலும் காங்கிரஸ் அரசின் ஒத்துழைப்பு கை கொடுக்கிறது. தன்னுடைய சகோதரர்கள் கோத்தபாய, பஸில் ஆகிய இருவரையும் அனுப்பிவைத்து இந்திய இராணுவ அதிகாரிகளைச் சந்திக்கவைக்கிறார்.

"இந்திய - இலங்கை இராணுவ ஒப்பந்தம் செய்யப்போகிறோம்' என்று மஹிந்தவின் அறிவிப்பை அன்று காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகித்த வைகோ, பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து அது பற்றிக்கேட்டபோது அப்படி எதுவித திட்டமுமில்லை எனப் பிரதமர் மறுக்கிறார். சில நாள்கள் கழித்து இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங் "உத்தேசிக்கப்பட்டுள்ள இந்திய - இலங்கை ராணுவக் கூட்டுறவு ஒப்பந்தம் இறுதி வடிவம் பெறுவதற்கான பணிகள் நடக்கிறது' என்று கொழும்பில் வைத்து அறிவித்தார். இப்படி இராணுவ ஒப்பந்தத்தை இலங்கையின் வளர்ச்சிக்கான ஒப்பந்தமாகத் தந்திரமாக மாற்றுகிறார்கள். "இராணுவ ஒப்பந்தமாக இல்லாவிட்டாலும், அதில் உள்ள சாராம்சத்தை வேறுவடிவில் நாங்கள் நிறைவேற்றி வருகிறோம்' என்று அதே நட்வர்சிங் கொழும்பில் சொன்னார்.

இலங்கை விமானப் படைத் துணைத் தளபதி டொனினிக் பெரைரா, யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி விமானத் தளமும் ஓடுதளமும் இந்தியப் பொருளாதார உதவியோடு சீரமைக்கப்பட்டு வருகிறது என்று 2005-டிசம்பர் மாதத்தில் அறிவித்த பிறகுதான், காங்கிரஸ் அரசாங்கத்தின் கங்காணி வேலைகள் வெளியில் வர ஆரம்பித்தன. இவர்கள் மறைமுகமாகச் செய்து கொடுத்தது அனைத்தையும் இலங்கை வெளிப்படையாக அறிவித்துக்கொண்டே இருந்தது. ராடார் கொடுத்தனர். போர் உலங்கு வானூர்திகளைக் கொடுத்தனர்.

இவர்கள் ஆயுதங்கள் கொடுக்க ஆரம்பித்த காலகட்டத்துக்குப் (2006) பிறகுதான், அங்கு மக்கள் படுகொலைகள் அதிகமாக அரங்கேற ஆரம்பித்தன. செஞ்சோலை குழந்தைகள் காப்பகத்தின் மீது விமானம் குண்டுகள் போட்டு 61 குழந்தைகள் இறந்ததில் இருந்துதான், ஈழத்தின் நான்காவது போர் தொடங்குகிறது.



இந்தப் போரை நடத்துவதற்காக இலங்கை தரப்பில் பசில், கோத்தபாய, லலித் வீரதுங்க ஆகிய மூவரும் இந்தியத் தரப்பில் சிவசங்கர் மேனன், எம்.கே.நாராயணன், விஜய்சிங் ஆகிய மூவரும் நியமிக்கப்பட்ட தகவலும் கொழும்பில் இருந்து கசிந்தது. இலங்கையின் பாதுகாப்பு அம்சங்கள், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவத் தாக்குதல் ஆகியவை பற்றி விவாதம் செய்ததாக, இலங்கை அரசின் செய்திக் குறிப்பே ஒப்புக்கொண்டது. இந்தச் செய்திகள் கசிய ஆரம்பிக்கும் போது புலிகள் எதிர் தாக்குதலை ஆரம்பித்திருந்தனர்.

வன்னிப் பகுதியில், சிங்கள இராணுவத்தின் தலைமையகத்தின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் இந்திய இராணுவப் பொறியாளர்கள் ஏ.கே.தாகூர், சிந்தாமணி ரெளட் ஆகிய இருவர் படுகாயம் அடைந்த பிறகுதான், காங்கிரஸ் அரசின் இராணுவ உதவி முழுமையாக அம்பலத்துக்கு வந்தது. அதுவரை இலங்கை அரசுக்கு எந்த உதவியும் செய்யவில்லை என்று பூசி மெழுகிவந்த மன்மோகன் சிங், முதன்முதலாக வைகோவுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கு நாங்கள் இத்தகைய பாதுகாப்பு உதவிகளைச் செய்திருக்கிறோம் என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். "நாம் இந்த உதவிகளைச் செய்யாவிட்டால், பாகிஸ்தானும் சீனாவும் அந்த உதவிகளைச் செய்துவிடுவார்கள் என்பது அவரது நியாயப்படுத்தலாக அமைந்தது.

பயங்கரவாதிகளுக்கு எதிரான போர் என்று சொல்லி அப்பாவித் தமிழ் இனத்தையே பூண்டோடு சுட்டுப் பொசுக்கி வருகிறார்கள் என்பது அப்போது மன்மோகன் சிங்குக்குத் தெரியாதா? தெரிந்திருந்தால், இலங்கையில் போர் நிறுத்தம் செய்வதில் இந்திய அரசுக்கு உடன்பாடே கிடையாது என்று சரத் பொன்சேகா சொல்லியபோது மறுத்திருக்க வேண்டும். இந்தியா கொடுத்த உலங்கு வானூர்திகள்தான் எங்களுக்குப் பயனுள்ளதாக இருந்தன என்று இலங்கை இராணுவத்தினர் பேட்டிகள் கொடுத்தனர்:

இந்தியா இலங்கைக்கு ஆயுதம் கொடுப்பதற்கு ஒரு காரணம், சீனா தந்துவிடும், பாகிஸ்தான் கொடுத்து விடும் என்பதாகக் கற்பிக்கப்பட்டது என விமர்சிக்கப்பட்டது.

அப்படி கொடுத்ததையும் வெளிப்படையாகச் சொல்லத் தைரியம் இல்லாமல், புறவழியாகக் கொடுத்து விட்டு. மறுபடியும் தாங்கள் ஆட்சிக்கு வராமல் போய்விட்டால் என்னாவது என்ற பயத்தில், 2009-ம் ஆண்டு மே மாதத்துக்குள் எல்லாவற்றையும் முடித்துவிடுங்கள் என்று உத்தரவிட்டுவிட்டு இன்று எதுவும் தெரியாதவர்கள் மாதிரி, நாடாளுமன்றத்தில் பசப்பு வார்த்தைகளைப் பேச ஆரம்பித்துள்ளார் பிரதமர். இவருக்குக் கிடைத்த சரியான கோமாளி அமைச்சர் சல்மான் குர்ஷித். மற்றவர்களின் பிரச்சனையில் நாம் எப்போதும் குறுக்கிடுவது இல்லை. பிறநாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா ஒருபோதும் தலையிடாது என்று புத்திசாலித்தனமாய் பதில் சொல்லி இருக்கிறார். இலங்கையில் தனிநாடு கோரிப் போராட்டம் மேற்கொண்ட தமிழ்ப் போராள அமைப்புக்களுக்கு இந்தியாவில் ஆயுதப் பயிற்சி வழங்கினார். இலங்கைத் தமிழர்களின் தரகராக மாறி ஜெயவர்த்தனாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டவர் சோனியாவின் கணவர். இந்த வரலாறுகளை மறைக்க நினைக்கிறார்கள்.

சரி, ஈழத் தமிழர்களை விடுங்கள். மீனவர்கள் இதுவரை சுமார் 400 பேர் கொலை செய்யப்பட்டுள்ளார்களே. "இனிஒருமீனவன்வீட்டில்இழவு விழுந்தாலும் பொறுக்க மாட்டோம்' என்று சொல்ல மன்மோகன், சோனியா, குர்ஷித் ஆகியோர் தயாரா? இராமேஸ்வரமும் தூத்துக்குடியும் இந்தியாவுக்குள்தானே இருக்கிறது.

ஈழத் தமிழன் கொலைக்கு உதவிகள் செய்து, இந்தியன் கொலையையும் வேடிக்கை பார்ப்பார்கள் என்றால், இதயம் இருக்கும் இடத்தில் இவர்களுக்கு என்ன இருக்கிறது?

*(நன்றி: ஜூனியர் விகடன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பழைய நினைவுகள் நெஞ்சில் நிழலாடும். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**இடபம்:** எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அனாவசியத் தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** நீங்கள் ஒன்று பேசப்போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்துக்கு ஆளாவீர்கள். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள்.

**கடகம்:** அநாவசியச் செலவுகளை குறைக்கப்பாருங்கள். சொத்துப் பிரச்சினைக்கு பேச்சு மூலம் சுமூகமான தீர்வு காண்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு இலாபம் வரும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.

**சிங்கம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள்.

**கன்னி:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக் குரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள்.

**நாளை**

பங்குனி-09 வெள்ளிக்கிழமை 22.03.2013
திதி: தசமி பி.ப. 03.02 வரை
நட்சத்திரம்: பூசம் முழுவதும் வரை
சுபநேரம்: 06.16- 07.46 வரை
இராகுகாலம்: 10.46- 12.16 வரை

**துலாம்:** முன்கோபம், படபடப்பு விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**விருச்சிகம்:** உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**தனுசு:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**மகரம்:** பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல் லைகள் விலகும்.

**கும்பம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**மீனம்:** உங்களின் குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் கிட்டும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | | | 8 |
| | | | | | 3 | | 2 | 7 |
| 3 | | 8 | 2 | | 1 | | 4 | 6 |
| | 8 | 2 | | 5 | 6 | | 7 | |
| | 5 | | | 1 | | | 8 | |
| | 3 | | 8 | 2 | | 9 | 6 | |
| 5 | 6 | | 9 | | 2 | 8 | | 4 |
| 8 | 1 | | 6 | | | | | |
| 7 | | | | | | | | 9 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 6 | 4 | 9 | 3 | 8 | 2 | 1 |
| 8 | 2 | 3 | 1 | 7 | 6 | 5 | 9 | 4 |
| 9 | 4 | 1 | 2 | 8 | 5 | 3 | 6 | 7 |
| 2 | 5 | 7 | 9 | 4 | 8 | 6 | 1 | 3 |
| 4 | 1 | 8 | 3 | 6 | 2 | 7 | 5 | 9 |
| 6 | 3 | 9 | 7 | 5 | 1 | 4 | 8 | 2 |
| 3 | 6 | 4 | 5 | 1 | 9 | 2 | 7 | 8 |
| 1 | 8 | 2 | 6 | 3 | 7 | 9 | 4 | 5 |
| 7 | 9 | 5 | 8 | 2 | 4 | 1 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு**
advt@uthayan.com
0215671111

**நாய்க்குட்டி விற்பனைக்கு**
ஒரு வயது நிரம்பிய லயன் சப்பேட் (ஒரிஜினல்) பெண்குட்டி விற்பனைக்குண்டு.
கோ.கிரிதரன், நுணாவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரி.
077 226 9823 (ச/9232) (6.11)

**தேவை**
பெண் தாதிய உத்தியோகத்தர்.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
LAVA Hospitals,
75, Temple Road, Jaffna.
(C/7123)(6.7.2)



**காணி விற்பனைக்கு**
நல்லூர் சுற்றாடலில் 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 075 510 9327
(34574)(5.6.7)

**ஆள்கள் தேவை**
கைதடி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் நிரப்புநர் தேவை. 28.03.2013 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
தொடர்பு:021 320 7042 (27897)(6.7.11)

**25ஆம் ஆண்டு திருமணவாழ்த்து**




இன்று (21.03.2013) வியாழக்கிழமை திருமணபந்தத்தில் இணைந்து வெள்ளிவிழாக்காணும் ஜேர்மனியில் வசிக்கும் திரு.திருமதி சக்திவேல் - தயாநிதி தம்பதியினரை பூவும் மணமும் போல, மணியும் ஓசையும் போல,நிலவும் ஒளியும் போல நிலையாக நிலைத்து நீடூழி வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பிள்ளைகள்-கபில்,கஜன் -ஜேர்மனி, கந்தசாமி குடும்பம் -கட்டுடை, சதீஸ்குமார் குடும்பம் -லண்டன், சுதாகரன் குடும்பம் - ஸ்பெயின், உதயகுமார் குடும்பம் - ஜேர்மனி, முகுந்தன் குடும்பம - ஜேர்மனி, முருகானந்தன் குடும்பம் - கட்டுடை, இராசமணி குடும்பம் - கட்டுடை
(ச/7836)(5.6.7)

TAG CORPORATION
TAG Group (Chennai India) Introduces
*Future Maestros Concert series*
in association with
CarnaticRadio.com (Singapore)

TAG குழுமம், கர்நாடிக் இணைய வானொலி இணைந்து அறிமுகம் செய்யும்
**வருங்கால சங்கீத விற்பனர்கள் கச்சேரித் தொடர் . . . . .**

முதல் கர்நாடக இசைக் கச்சேரி
ஐஸ்வர்யவித்யா ரகுநாத் ~ வாய்ப்பாட்டு
ஆர். ராகுல் ~ வயலின்
டெல்லி சாயிராம் ~ மிருதங்கம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக, இராமநாதன் நுண்கலைக் கல்லூரி அனுசரணையுடன்.

இடம் – நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபம்
காலம் – 22.03.2013 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஹம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையின் மிகப் பெரிய சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார். அருகில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் காணப்படுகின்றனர்.

## விமான சேவையைக் குறைத்தது ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ்

கொழும்பு,மார்ச் 21

தமிழ்நாட்டில் இலங்கை எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதை அடுத்து, சென்னைக்கான விமான சேவைகளை இலங்கையின் தேசிய விமான நிறுவனமான ஸ்ரீலங்கன்எயார்லைன்ஸ் பாதியாகக் குறைத்துள்ளது.

சென்னை - கொழும்புக்கு இடையில் வாரத்தில் 28 சேவைகளை நடத்தி வந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், தற்போது 14 சேவைகளாகக் குறைத்துள்ளது.

அதற்கமைய தினமும் காலை மற்றும் மாலையில் மட்டும் தலா ஒவ்வொரு சேவைகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் தமிழ் நாட்டில் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்தியாவிடம் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொது பல சேனாவைக் கண்டித்து நாடு முழுவதும் 25 இல் ஹர்த்தால்

### முஸ்லிம் உரிமைக்கான அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு,மார்ச் 21

நாடு முழுவதும் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள், பொது பலசேனாவின் எதிர்ப்புப் போராட்டங்கள் போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாடு தழுவிய ஹர்த்தால் ஒன்றை அனுஷ்டிப்பதற்கு முஸ்லிம் அமைப்புகள் ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

**நாடு முழுவதும் உள்ள முஸ்லிம்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி சகல செயற்பாடுகளில் இருந்தும் விலகி அமைதியான முறையில் இந்தக் ஹர்த்தாலை அனுஷ்டிக்கவேண்டும்**

எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை அமைதியான முறையில் ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு கொழும்பில் இயங்கும் 'முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு' வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் நாடு முழுவதும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நாடு முழுவதும் உள்ள முஸ்லிம்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி சகல செயற்பாடுகளில் இருந்தும் விலகி அமைதியான முறையில் இந்த ஹர்த்தாலை அனுஷ்டிக்கவேண்டும் என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் கேட்கப்பட்டுள்ளது.

'தொடரும் இனவாதத்தைத் தாங்கிக்கொண்டு இனியும் தூங்குவதா? அமைதியான முறையில் எமது எதிர்ப்பைக் காட்டுவோம்' என்ற தொனிப் பொருளில் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப் படவுள்ளது. (ச)

## மாணவர்களுக்காக இலவச பஸ் சேவை

கொழும்பு,மார்ச்21

அநுராதபுரம் நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் இலவச பாடசாலை பஸ் சேவையொன்றை நடத்துவதற்கு அநுராதபுரம் நகரசபை தீர்மானித்துள்ளது என்று நகரபிதா எச்.பி.சோமதாச தெரிவித்தார்.

**மாணவர்களுக்காக இரண்டு தட்டு பஸ் சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

பாடசாலை ஆரம்பக்கப்படுகின்றபோதும், மூடப்படுகின்றபோதும் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மாணவர்களின் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிசெய்யும் நோக்கிலும் இந்தப் புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்காக இரண்டு தட்டு பஸ் சேவையில் ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

## கஞ்சா விற்ற இருவர் கைது

கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட இருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு கஞ்சா விற்பனை செய்த குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களிடம் இருந்து 1,08,000 மில்லி கிராம் கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து கட்டுகஸ்தோட்டை வாசனாகந்த பிரதேசத்தில் சோதனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

அறிவுபூர்வமான முதலீட்டுத் தீர்மானத்திற்கு நீங்கள் தயாரா?




வாருங்கள் முதலீடு பற்றிய அறிவை வளர்ப்போம்
CSE முதலீட்டாளர் தினம் 2013

யாழ்ப்பாணம்
2013 மார்ச் 23
மு.ப 10.00 முதல் பி.ப 3.00
வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு www.cse.lk யைப் பாருங்கள் அல்லது அழையுங்கள் 021-2221455/0777-822014

CSE
COLOMBO STOCK EXCHANGE

(C/7148) (6.7)

**கோழிக் குஞ்சு விநியோகம்**

BAHIRAHA No - 1 புறொயிலர் குஞ்சுகள்
23.03.2013 விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.
★ றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
0776090926
★ கதிர்வேளாண் கிளிநொச்சி.
021 228 0007
(35434)(6.7.2)

**கண்ணீர் அஞ்சலி**



எமது ஆருயிர் நண்பன்
ந.சிவாஸ்கர்
அவர்களின் அன்புத் தந்தை
**பொன்னம்பலம் நடராஜமணி**
அவர்கள் 17.03.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(35403)2.6.7)
**E/08 நண்பர்கள்,**
**பொறியியல்பீடம், பேராதனை பல்கலைக்கழகம்.**

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



திருமதி
**ஜெயநாதன் திரேசம்மா**
அன்னை மடியில்
07.02.1948
ஆண்டவன் அடியில்
21.03.2012

அன்புத் தெய்வமே! ஓராண்டு கழிந்தாலும்
என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன்
தவிக்கும் நெஞ்சங்கள்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

அன்புக் கணவர்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# கடல் வளப் பாதுகாப்பு தொடர்பாக பயிற்சிகள்

### 76 மீனவர்களுக்கு சான்றிதழ்கள்



யாழ்ப்பாணம், மார்ச் 21

யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடல் வளத்தைப் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவோருக்கான கருத்தரங்கும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் யாழ்.மாவட்ட கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தில் அண்மையில் நடைபெற்றன.

யாழ்.மாவட்ட கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் எமிலியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் 79 பேருக்கு ஆழ்கடல் நீச்சல் பயிற்சி, இயந்திரங்கள் நடுக்கடலில் பழுதடைந்தால் மேற்கொள்ள வேண்டிய அவசர நடவடிக்கைகள், மீன்கள் பதனிடல்ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கடல்வளத்தைப் பாதுகாப்பது தொடர்பான கருத்தரங்கும் நடைபெற்றது.

கருத்தரங்கின் இறுதியில் 79 மீனவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்தச் சான்றிதழ்களை யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் வடக்கு, கிழக்குப் பிராந்திய திட்டமுகாமையாளர் டேன் ஹெய்டன் வழங்கினார்.

இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட கடல்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி, சம்மேளனத் தலைவர் எமிலியாம்பிள்ளை உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ம-13)

## இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 21

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை ஸ்ரீ கணேசா சனசமூக நிலைய மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறும்.

இரத்ததானம் செய்ய விரும்புவோர் இதில் கலந்துகொள்ளலாம் என ஆலய பரிபாலன சபையினரும், தொண்டர் சபையினரும் அறிவித்துள்ளனர். (3)

## அரச நடன விழா போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தேசியமட்ட அரச நடன விழாவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள் கீழ்காணும் போட்டிகளில் பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

பாரதியார் பாடல் (சிறுவர் பிரிவு)-2 ஆம் இடம், ஆண்டாள் நடனம் (கனிஷ்ட பிரிவு)-2 ஆம் இடம், செம்பு நடனம் (மத்திய பிரிவு)-3 ஆம் இடம். (எ-253)



கொழும்புத்துறை மணியந்தோட்டக் கிராம நுழைவாயிலில் அமைக்கப்பட்டிருந்த அன்னைவேளாங் கண்ணிமாதா வரவேற்பு வணக்கஸ்தலத்திலுள்ள மாதா சொரூபம், கண்ணாடிக் கூடு என்பன நேற்றுமுன்தினமிரவு விஷமிகளால் கல்லெறிந்து உடைத்து அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. வரவேற்புச் சொரூபம் சுமார் 25 வருடங்களுக்கு மேலாக இந்த இடத்தில் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-135)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தென்மராட்சி, மார்ச் 21

தென்மராட்சிப் பிரதேச திணைக்களத் தலைவர்களுக்கான 'விளைவு சார் மற்றும் இலக்கு நோக்கிய திட்டமிடல்' என்னும் விழிப்புணர்வு கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனம், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத் தப் படும் கருத்தரங்கில் கிராமிய, பிரதேச, மாவட்ட திட்ட மிடலை மிகச் சிறந்த வினைத் திறனான செயற்பாடாக மாற்றுவதற்கான வழிகாட் டல்கள் பற்றி கருத்துரை கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

கைதடி கலைவாணி வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டிகள் இன்று வியாழக்கிழமை பி.ப ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் நா. கருணாகரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப் பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசாவும், கௌரவ விருந்தினராக வித்தி யாலய முன்னாள் அதிபர் ப.செல்லத்துரை ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 21

புத்தூர் மடிஹே பஞ்சசீஹ வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் குரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பால சுப்பிரமணியம் கலந்து கொள்வார். (வ)

## உண்மையான சந்தோஷத்தை எவ்வாறு அடையலாம்?

பொதுமக்களுக்குச் சேவை செய்வதன் மூலமே உண்மையான சந்தோஷத்தை அடையலாம். வறியவர்களுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் உதவி செய்யப் போங்கள். அப்போது நீங்கள் பலமும், அச் சேவை மூலம் அமைதியையும் பெறுவீர்கள். உங்கள் மனச்சாட்சியும் திருப்தியடையும். சமூகத்திலுள்ள பணம் படைத்தவரோ அதிகார பீடத்திலுள்ளவர்களோ இத்தகைய சேவையை ஆற்றுவதற்கு நாட்டங் கொண்டவர்களாக இருக்காதது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும்.

தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

கைதடி, மார்ச் 21

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் இவ்வாண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவர் க.பாலசிங்கம் , செயலாளர் பொ.செல்வராசா பொருளாளர் சி.பிரேமரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 17 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-288)

★ ★ ★

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் இந்த ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு வளர்மதி சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிர்வாக உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

தலைவர் சி.திரவியம், செயலாளர் த.பாஸ்கரன், பொருளாளர் செ.கணேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 11 பேர் கொண்ட புதிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-288)

★ ★ ★

அச்சுவேலி, மார்ச் 21

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் பெயர் விவரம் வருமாறு:

தலைவர் வை. குணசேகரம், பிரதித்தலைவர் ரி.தங்கராசா, செயலாளர் மா.புவனேந்திரன், பிரதிச் செயலாளர் மா.ஞானலிங்கம், பொருளாளர் ஐ.ஜெகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக ஆர்.தங்கராசா, எஸ்.ஜெகதீஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எ-14)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடமராட்சி தெற்கு, மேற்கு பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் பொதுக்கூட்டமும் நடப்பு ஆண்டுக்கான நிர்வாக உறுப்பினர் தெரிவும் அண்மையில் நடைபெற்றன.

நிர்வாக உறுப்பினர் விவரம் வருமாறு:

தலைவர் வி.எஸ்.வீரசிங்கம், செயலாளர் சி.க.லோகநாதன், பொருளாளர் க.தா.சிறீஸ்கந்தசிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் நிர்வாக உறுப்பினர்களாக 4 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

★ ★ ★

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:

தலைவராக கி.றஜீவன், உபதலைவராக இ.விஜயகுமார், செயலாளராக சி.விஜிந்தன், உப செயலாளராக ஜெ.அருள்ராஜ், பொருளாளராக வி.காங்கேயன் உட்பட 10 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-135)

★ ★ ★

யாழ். சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டமும், நிர்வாகிகள் தெரிவும் சிவசம்பு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டோர் விவரம் பின்வருமாறு:-

தலைவர் கு.திருச்செல்வம் (அதிபர்), உப தலைவர் ஞா.விமலராஜா (உதவி அதிபர்), செயலாளர் கு.குணசிறீ, உப செயலாளர் ப.விஜயகுமார் , பொருளாளர் ஜீ.டேவிற், உறுப்பினர்கள் ந.செல்வராசா (ஆசிரியர்), அ.மங்களதாஸ் (ஆசிரியர்), வி.கருணாகரன் , ப. விமலதர்சினி, ஸ்ரீ. கயனி, ச.திருச்செல்வி, லோ. உஷாநந்தினி, யோ. ஜெயலலிதா, பொ.பிரகலாதன், மா.கணேஸ், க.இராசநாயகம் ஆகியோரும் மற்றும் கணக்காய்வாளராக நா.முருகானந்தமும் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றும் பணி வடமராட்சியில்

வடமராட்சி, மார்ச் 21

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் தடுப்பூசி ஏற்றும் பணி பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை பொலிகண்டி சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இத் தடுப்பூசி வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப்பட்டன.

நேற்று புதன்கிழமை தொடக்கம் அல்வாய் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள பொது இடங்களில் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இப் பணி அல்வாய்ப் பகுதியில் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் புலோலி பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள பொது இடங்களில் வைத்து வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படும்.

கரவெட்டிப் பிரதேச சபைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டது. (வ-8)

### 'சுவடுகள்' அமைப்பின் ஏற்பாட்டில்

# பனை அபிவிருத்தி நிலையத்தில் மகளிர் தின விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

பனை அபிவிருத்திச் சபையினூடாக உருவாக்கப்பட்ட சுவடுகள் அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் 28 ஆம் திகதி பனை அபிவிருத்தி நிலையத்தில் மகளிர் தின நிகழ்வு நடைபெறவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது :-

பனை அபிவிருத்திச் சபையால் ஒவ்வொரு கிராமங்களிலும் பனை தொழில் சார் உற்பத்தியை மேற்கொள்ளும் பெண்களள் தெரிவு செய்து அவர்களூடாக அமைக் கப்பட்ட அமைப்பே 'சுவடுகள்' ஆகும்.

அந்த அமைப்பால் யாழ். மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகிய மாவட்டங்களின் பெண்களிடையே உற்பத்தியாளர் போட்டி, உணவு உற்பத்தி போட்டி, தனிநபர் போட்டி என பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

இவற்றில் வெற்றி பெற்ற பெண்கள் பனை அபிவிருத்திச் சபையினூடாக சான்றிதழ் கள் வழங்கி கௌரவிக்க ஏற் பாடாகியுள்ளது என்றார். (வ-13)

## பாடசாலை மேம்பாட்டுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் எதிர்கால செயற்பாடுகள் பற்றி பாடசாலையின் புதிய அதிபர் தலைமையில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 இலட்சம் குடும்பங்களுக்கு மலையகத்தில் வீடுகள் இல்லை

## தோட்டத் தொழிலாளரின் அவலத்தை கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு,மார்ச்21

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களில் 2 இலட்சம் குடும்பங்களுக்கு சொந்த வீடுகள் இல்லை.

சொந்த வீடுகளில் இருப்பவர்களுக்குக்கூட அந்த வீடுகளுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் இதுவரையும் வழங்கப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலையில்தான் மலையக மக்கள் இன்னும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களைப் பாதுகாப்பதற்கான எந்த ஒரு நடவடிக்கையையும் எடுப்பதற்கு அரசு அக்கறையின்றி செயற்படுகிறது.

இன்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தவிசாளரும், இலங்கைத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான கே.வேலாயுதம் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னர் ஒரு காலத்தில் நான்கரை லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்த மலையக மண்ணில் இப்போது ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேர் மட்டுமே வேலைசெய்கின்றனர்.

இங்குள்ள இளைஞர், யுவதிகளும் வேறு இடங்களுக்கு வேலை தேடிச் சென்றுள்ளனர். இந்தநிலையில், கொழும்பில் கூட மலையக மக்களே பெரும்பாலும் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

மலையகத்தின் 2 லட்சம் குடும்பங்களுக்கு இன்று வரையிலும் அரசு வீடுகளைக் கட்டிக்கொடுக்கவில்லை. சில குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்தும் கூட அவற்றுக்கான காணி உறுதிப்பத்திரங்களை அரசு வழங்காமல் உள்ளது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் இன்னும் அதிகரிக்கப்படவில்லை. அவர்களுக்கான சம்பளம் நாளொன்றுக்கு ரூபா 515 மட்டுமே வழங்கப்படுகின்றது. இவ்வாறான சொற்ப சம்பளத்தை வைத்துக்கொண்டு தமது அன்றாட வாழ்க்கைச் செலவை இவர்களால் எவ்வாறு மேற்கொள்ள முடியும்?

தற்போது மின்கட்டணம், பஸ் கட்டணம், அத்தியாவசியப் பொருள்கள் என அனைத்தையும் அரசு அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்புகள் மூலம் மலையகத் தோட்டத் தொழிலாளர்களே பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையை நாளுக்கு நாள் அதிகரிக்கும் இந்த அரசு, இவர்களின் சம்பளத்தையும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இதனை அரசுடன் இணைந்திருக்கும் மலையக அரசியல்வாதிகள்தான் அரசுக்கு வலியுறுத்த வேண்டும்.

இந்த மலையக அரசியல்வாதிகள் அரசின் தாளத்திற்கு ஆடாமல் தொழிலாளர்களின் பிரச்சினையைக் கவனத்தில் எடுத்து அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். -என்றார். (ச)

# மார்க்கக் கோட்பாடு பற்றி பேச எவருக்கும் உரிமையில்லை

## முஸ்லிம்கள் எவருக்கு எதிராகவும் போராடவில்லை என்கிறார் அமீர்அலி



அம்பாறை,மார்ச்21

இந்த நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்களின் மார்க்க விடயங்களைப் பற்றிக் கருத்துக் கூறுவதற்கு பொது பல சேனா அமைப்புக்கு எந்த வித உரிமையும்இல்லை.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

தேசத்துக்கு மகுடம் வேலைத்திட்டத்தின் கீழ் கொங்கிறீட் வீதிகள் அமைக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கும் நிகழ்வு ஓட்டமாவடியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இன்று பொதுபலசேனா அமைப்பினர் முஸ்லிம்களின் மார்க்க விடயங்களில் தேவையற்ற தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றது.

ஹலால், முஸ்லிம் பெண்களின் ஹபாயா மற்றும் புனித அல் குர்ஆன் போன்ற இஸ்லாமிய மார்க்க விடயங்களில் அந்த அமைப்பு தொடர்ந்து தலையீடு செய்தால், அவர்கள் மோசமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

முஸ்லிம்களின் உணர்வுகளுக்கு எதிராக சவால்கள் விடப்படுமாக இருந்தால் அதனைப் பார்த்துக்கொண்டு வெறுமனே இருக்கமாட்டோம். சமூகத்தைக் காட்டிக்கொடுத்து அரசியல் செய்யவேண்டிய எவ்விதத் தேவையும் எமக்கு இல்லை. அதனால் நாங்கள் பொது பல சேனா அமைப்பினரைக் கண்டு அச்சமடையத் தேவையில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சிங்களப் பிரதேசங்களில் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள் என்ற ஒரே ஒரு காரணத்துக்காக நாங்கள் மௌனம் காக்கிறோம்.

இந்நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் வேறு எந்த இனத்தினதும் மார்க்க விடயங்களில் தலையிட்டது இல்லை. எந்த இனத்துக்கும் எதிராக ஆயுதங்கள் ஏந்திப் போராட்டம் நடத்தவும் இல்லை.-என்றார். (ச)

## அன்ன வாகனத்தில் பத்திரகாளி அம்பாள்...



திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய பெருந்திருவிழாவின் கற்பூரச்சட்டி திருவிழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது அம்பாள் அன்ன வாகனத்தில் முருகன், பிள்ளையார் சமேதராக வெளிவீதி உலா வருகிறார்

# பிள்ளையான் கட்சியில் மூன்று பேர் நீக்கம்

மட்டக்களப்பு,மார்ச்21

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளர் பிரதீப் மாஸ்டர் என்று அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்தராஜா, கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை கட்சியின் முன்னாள் செயலர் எ.கைலேஸ்வரராஜா மற்றும் கட்சியின் உறுப்பினர் எம்.வரதராஜன் ஆகியோர் ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் கட்சியின் சகல பொறுப்புக்களில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளனர் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த மூன்று பேரும் கட்சியின் யாப்பு விதிகளை மீறிச் செயற்பட்டார்கள், கட்சியின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தார்கள் போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கட்சியின் பணிக் குழு விசாரணை நடத்தி இந்த முடிவை எடுத்துள்ளது. (ச)

# யானைகளிடம் இருந்து பாதுகாப்பு வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்

## மட்டக்களப்பு செயலகம் முன்னால்



மட்டக்களப்பு,மார்ச்21


மட்டக்களப்பு, வெலிக்காகண்டி கிராம மக்கள் யானைகளின் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாக்குமாறு கோரி நேற்றுப் புதன்கிழமை காலை மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கிராமத்தில் 57 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தக் கிராமத்துக்குள் யானைகள் அடிக்கடி புகுந்து அட்டகாசம் செய்து வருவதுடன், இதுவரைக்கும் 5 பேர் யானைகளின் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளனர்; பல வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

யானைகளின் தாக்குதல்களிலிருந்து தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

# கைதிக்கு ஒரு நாளில் செலவு 720 ரூபா

## பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு என்கிறார் பிரதம நீதியரசர்



மட்டக்களப்பு,மார்ச் 21

சந்தேகநபர்களை சிறைச்சாலைக்கு அனுப்புவதைக் குறைத்து முடியுமான வரை பொலிஸார் பிரச்சினைகளைத் தீர்க்க முயல வேண்டும். விளக்கமறியலில் வைக்கும் கைதி ஒருவருக்கு நாளொன்றுக்கு 720 ரூபா செலவு செய்யப்படுகின்றது. அது நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற [illegible] றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதிமன்றத்துக்கு வரும் மக்களுக்கு கரிசனை காட்டுபவர்களாக நீதிபதிகள் நடந்து கொள்ள வேண்டும். [illegible] என்பது [illegible]த்தில் இருக்கக் கூடாது.

சட்டத்தையும் நீதியையும் தேடி நீதிமன்றத்துக்கு வருகிறார்கள் மக்கள். அதன்போது மக்களுக்கு நாம் கரிசனை காட்டி நடந்து கொள்ள வேண்டும்.

தம்மிடம் வரும் வழக்குகளை தனது வழக்கு போன்று நினைத்து சட்டத்தரணிகள் செயற்பட வேண்டும். சட்டத்தரணிகளை நம்பி வரும் மக்களிடம் அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டு அதற்கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டும்.

பொலிஸார் சகல வழக்குகளையும் நீதிமன்றத்துக்குக் கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. பொலிஸாருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி பொலிஸ் நிலையங்களிலும் பிணை வழங்கமுடியும்.

பொலிஸாரால் தீர்த்து வைக்க முடியுமான பிரச்சினைகளை அவர்கள் தீர்த்து வைத்து பிணை வழங்கி நீதிமன்றத்துக்கு வரும் வழக்குகளை குறைக்க வேண்டும்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காங்.கூட்டணியிலிருந்து தி.மு.க. விலகல்

## கருணாநிதியின் கொடும்பாவி எரிப்பு



சென்னை, மார்ச் 21

காங்கிரஸ் கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகியதை அடுத்து தி.மு.க. தலைவர் கருணாநிதியின் கொடும்பாவியை இளைஞர் காங்கிரஸார் நேற்று முன்தினம் எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணியில் பல முறை கருத்து வேறுபாடு ஏற்பட்ட போதிலும் கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகாமலேயே நீடித்து வந்தது. இந்தநிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ்- தி.மு.க. இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதை யடுத்து மத்திய அரசில் இருந்தும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருந்தும் விலகுவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி அதிகார பூர்வமாக நேற்று முன்தினம் அறிவித் தார்.

அதனையடுத்து சென்னையில் உள்ள காங்கிரஸ் தலைமையகமான சத்திய மூர்த்தி பவன் வாயிலில் தி.மு.க வினர் ரகளையில் ஈடுபட்டனர். அதனால், இளைஞர் காங்கிரஸார் கருணாநிதியின் உருவ பொம்மையை எரித்தனர்.

அதன் பின்பு, இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் உருவப் பொம்மையையும் எரித்தனர்.

இந்தச் சம்பவங்களால் சத்தியமூர்த்தி பவனுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. (வ)

### ■ இலங்கை மீது பொருளாதார தடை விதிக்கக் கோரி

# தூத்துக்குடியில் நேற்று பத்திரிகையாளர் ஆர்ப்பாட்டம்

சென்னை, மார்ச் 21

இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசு மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தூத்துக்குடியில் பத்திரிகையாளர்கள் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி பழைய மாநகராட்சி அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தூத்துக்குடி ஊடகவியலாளர் சங்கத் தலைவர் முருகன் தலைமை வகித்தார்.




ஆர்ப்பாட்டத்தில், சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சுப்பிரமணிய ஆதித்தன், இணைச் செயலாளர் செல்வம் கிறிஸ்டோபர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் மோகன்ராஜ், மக்கள் உரிமை பாதுகாப்பு குழு அமைப்பாளர் அதிசயகுமார், மனித உரிமை பாதுகாப்புக் கழக தலைவர் கார்த்திகேயன், செயலாளர் ராமசந்திரன், மதிமுக நக்கீரன், வீராங்கனை அமைப்பின் தலைவி பேராசிரியை பாத்திமா பாபு ஆகியோர் கண்டன உரை ஆற்றினர்.

இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசு மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டப் பேரவையில் கொண்டு வந்த தீர்மானத்தை இந்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

இனப்படுகொலை, போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள் போன்ற செயல்களில் ஈடுபட்ட இலங்கை மீது சுந்திரமான பன்னாட்டு விசாரணைக்கு ஐ.நா. சபை உத்தரவிட வேண்டும்.

இலங்கையில் 60 ஆண்டு கால போராட்டத்துக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், தமிழர் பகுதிகளிலும், புலம்பெயர் தமிழர் மத்தியிலும் ஐ.நா. சபை சுதந்திரமான பொது வாக்கெடுப்பு எடுக்க வேண்டும்.

தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டும். முள்வேலி முகாம்களில் அடைபட்டிருக்கும் தமிழர்களுக்கு சுதந்திரமான வாழ்வுரிமைகளை உத்தர வாதப் படுத்த வேண்டும்.

சிறுவர்களை குறிவைத்துக் கடத்துவதையும், கொலை செய்வதையும் ஐ.நா. மேற்பார்வையில் விசாரணை மேற்கொண்டு இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் ஊடகத்தினரை படுகொலை செய்வதும், கடத்தப்படுவதும், ஊடகத்தினர் மீது தாக்குதல் தொடுப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே, இலங்கையில் பத்திரிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய ஐ.நா. மேற்பார்வையில் கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன. (வ)

## இந்தியா-இலங்கை அனுமதித்தால் ஈழம் சென்று பணியாற்றத் தயார்

### இந்திய மருத்துவ சங்கத்தின் தமிழகத் தலைவர் தெரிவிப்பு



கோவை, மார்ச் 21

இந்திய அரசும், இலங்கை அரசும் அனுமதித்தால், ஈழம் சென்று அங்கு பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு சேவையாற்ற தயாராக இருப்பதாக இந்திய மருத்துவ சங்கத்தின் தமிழக தலைவர் டாக்டர் எல்.பி. தங்கவேலு தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரின்போது இலங்கை இராணுவத்தினரால் சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் ஒட்டு மொத்தமாக கொல்லப் பட்டனர்.

ஈழப்பிரச்சி னையைப் பொறுத்தவரை போரின்போது, போருக்குப் பின்னர் என்ற இரண்டு நிலையாகப் பார்க்க வேண்டும். போரின்போது ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்றால், போருக்குப் பின்னர் அங்கு ஆண்களே இல்லாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஈழத்தில் தற்போது 10 வயதுக்கு மேல் 45 வயதுக்குக் கீழான ஆண்களைப் பார்க்க முடியவில்லை. உலகிலேயே அதிக விதவைகளும் வாழும் பகுதியாக ஈழப்பகுதி இன்று மாறியுள்ளது.

அங்கு அடிப்படை சுகாதார வசதி எதுவும் இல்லை. ஊன முற்றோர் அதிகளவில் உள்ளனர். திறந்தவெளி சிறைச் சாலையில் அடைபட்டிருப்பதைப் போலத் தான் தமிழர்கள் அவல நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இலங்கை இராணுவத்தின் 17 பிரிவுகளில் 16 பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளை அங்கு குவித்து வைத் துள்ளனர்.

அங்கு ஆறு தமிழர்களுக்கு ஒரு இராணுவ வீரர் என்ற நிலை உள்ளது. அங்கு வீட்டில் ஏதாவது விழா நடத்துவதாக இருந்தாலும் கூட இராணுவத்தின் கண்காணிப்பு இல்லாமல் நடத்த முடியவில்லை.

இதையெல்லாம் நானாகச் சொல்ல வில்லை. செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் அங்கு பணிக்காகச் சென்று வந்த எனது நண்பர் கூறிய கருத்துத்தான் இது- என்றார். (வ)

## நாயின் கழுத்தில் தொங்கவிடப்பட்ட மஹிந்தவுக்கு எதிரான வாசகங்கள்

### ■ பாளையம் பகுதியில் விநோதப் போராட்டம்




குஜிலியம்பாறை, மார்ச் 20

திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை அருகில் உள்ள பாளையம் பகுதியில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான வாசகங்களை நாயின் கழுத்தில் கட்டித் தொங்க விட்ட சுவாரசியப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

குஜிலியம்பாறை அருகே இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக வர்த்தகர்கள் நூதன எதிர்ப்பு பிரசாரம் செய்து வரு கின்றனர். தமிழகம் முழுவதும் இலங்கை அரசை கண்டித்தும், இலங்கை ஜனாதிபதியைக் கண்டித்தும் பல்வேறு தரப்பினர், தமிழ் ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள் பல்வேறு விதமான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

உண்ணாவிரதப் போராட்டம், பேரணி, மறியல் போன்ற போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம் பாறை அருகில் உள்ள பாளையம் பகுதியில் அனைத்து கடைகள் முன்பா கவும் ''தமிழின துரோகி ராஜபக்ஷ ஒழிக'' என்ற வாசகங்களும் மேலும் ராஜபக்ஷவுக்கு எதிரான வாசகங்களும் அதற்குத் துணை போகும் மத்திய அரசுக்கு எதிரான வாசகங்களும் ஒட்டப்பட்டுள்ளன.

மற்றொரு சுவாரசியப் போராட்டமாக வீதிகளில் சுற்றி திரியும் நாய்களின் கழுத்துகளில் ராஜபக்ஷவுக்கு எதிரான வாசகங்களை தொங்க விட்டுள்ளனர். வீதியைக் கடந்து செல்பவர்களும், பஸ்ஸில் பயணம் செய்பவர்களும் ஒரு நிமிடம் இறங்கி இந்த வினோத போராட்டத்துக்கு தங்கள் ஆதரவு தெரிவித்துச் சென்றனர். (வ)

### ராஜினாமாக் கடிதங்களை பிரதமரிடம் ஒப்படைத்தனர் தி.மு.க. அமைச்சர்கள்

மத்திய அரசில் இருந்து விலகிய தி.மு.க.வின் 5 அமைச்சர்களும் நேற்று ராஜினாமாக் கடிதங்களை பிரதமரிடம் கையளித்தனர்

காங்கிரஸ் கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகியது அகில இந்திய அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது. இந்தநிலையில் நேற்று மத்திய அரசில் பதவி வகிக்கும் தி.மு.க. அமைச்சர்கள் 5 பேரும் தமது ராஜி னாமா கடிதங்களை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் உத்தி யோகபூர்வமாகக் கையளித் தனர்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தில், 2 முக்கிய திருத்தங்கள் செய்ய இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க. நிபந்தனை விதித்தது.

இந்த நிலையில் மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை தி.மு.க. வாபஸ் பெற்றது. அத்துடன் கூட்டணியில் இருந்தும் வெளியேறுவதாக அறிவித்திருந்தது. (வ)

## ஓர் இரவுக்குள் தி.மு.கவின் மாற்றம்; ஒன்றுமே புரியவில்லை

### நிதியமைச்சர் சிதம்பரம் கருத்து



சென்னை, மார்ச் 21

சென்னையில் கருணாநிதியை மத்திய அமைச்சர்கள் சந்தித்து, டில்லி திரும்பிய ஓர் இரவுக்குள், தி.மு.க. முடிவை மாற்றிய காரணம் புரியவில்லை என்று நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

மத்தியில் ஆளும் கூட்டணிக் கட்சியில் இருந்து தி.மு.க. நேற்று முன்தினம் விலகுவதாக அதன் தலைவர் கருணாநிதி அறிவித் தார்.

இதுகுறித்து நேற்று மத்திய அமைச்சர்கள் ப. சிதம்பரம், [illegible] செய்தியாளர்களுக்கு [illegible] கம் அளித்தனர். அதன் போது பேசிய நிதியமைச்சர்,

அமெரிக்கத் தீர்மானத்தை மத்திய அரசு நீர்த்து போகச் செய்யவில்லை. இந்த [illegible] கொண்டு [illegible] இந்தியா அரசு உறுதியாக உள்ளது.

அமெரிக்கத் தீர்மானத்தில் மாற்றங்கள் கொண்டு வருவது குறித்து பிரதமருக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கடிதம் எழுதியிருந்தார். அதுகுறித்து நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்றும் வலியுறுத்தியி ருந்தார். அதையடுத்து, நானும், அமைச்சர்கள் ஏ.கே. அந்தோனி மற்றும் குலாம் நபி ஆசாத் ஆகியோருடன் சென்னைக்குச் சென்று தி.மு.க. தலைவர் கருணா நிதியைச் சந்தித்து, அவரது கருத்துக்களைக் கேட்டு, உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறிவிட்டு டில்லி புறப்பட்டுச் சென்றோம்.

மறுநாள் காலை நாடாளுமன்றக் கூட்டுக் குழுக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே, தி.மு.க. மத்திய அமைச்சரவையில் இருந்து விலகுவதாக கருணாநிதி அறிவித்துள்ளார்.

ஓர் இரவுக்குள் தி.மு.க. ஏன் முடிவை மாற்றிக் கொண்டது என்று தெரியவில்லை-என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வியாபாரி பாதுகாப்பாக நாடு திரும்ப உதவிய பொலிஸ்

தூத்துக்குடியில் தங்கியிருந்த இலங்கை உப்பு வியாபாரியை இந்தியப் பொலிஸார் பாதுகாப்பாக, மதுரைக்கு அனுப்பி மீண்டும் நாடு திரும்ப வழிசெய்துள்ளனர்.

இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல் தொடர் பாக ஐ.நாவில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத் தில், இந்தியா திருத்தம் கொண்டு வர வேண்டுமென வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன. அதன் எதிரொலியாக தமிழகம் வரும் பிக்குகள், தாக்கப்படுகின்றனர்.

இந்தநிலையில் இலங்கையைச் சேர்ந்த உப்பு வியாபாரி, லாலாசி நானாதி ரண துங்கே, தொழில் விடயமாக தூத்துக்குடி சென்றிருந்தார்.

அதையறிந்த பொலிஸார், பிரச்சினையைத் தவிர்ப்பதற்காக நேற்று முன்தினம் காலை அவர் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று, அவரைச் சந்தித்தனர். (வ)

## ஈழத் தமிழர்களுக்கு தனி நாடு வேண்டும்; இல்லையேல் எமக்கு வேண்டும் தனித் தமிழ்நாடு



ஈழத் தமிழர்களுக்கு சுய அதிகாரம், சுதந்திரமான வாழ்வு கிடைக்க வேண்டும். அவர்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும். இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். இதற்கான நடவடிக்கையை இந்தியா எடுக்காமல் இலங்கை நட்பு நாடு என்று சொல்லிக் கொண்டிருந்தால் மாணவர்கள் நாம் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டோம். ஈழத்தமிழர்களுக்கு தனி நாடு வேண்டும். இது இல்லையென்றால் எங்களின் தமிழ்நாட்டை பிரித்துக் கொடுங்கள். நாம் தனித் தமிழ் நாடு அமைத்துக்கொள்கிறோம் என்று ஆவேசமாக கோஷங்களை எழுப்பினர் சென்னை கல்லூரிகளின் மாணவர்கள். (வ)

## தமிழக மீனவர்களுக்கு வாள் வெட்டு

நாகபட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களை நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையினர் வாளால் வெட்டித் தாக்குதல் நடத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் நாகபட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் கோடியகரை தென் கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது ரோந்து சென்ற இலங்கைக் கடற்படையினர், மீனவர்களின் படகை வழிமறித்து, அவர்களை அரிவாளால் சரமாரியாக வெட்டியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் கண்ணையன், செல்வக்குமார், பொன்னுசாமி, சசிகுமார் ஆகிய மீனவர்களுக்கு கை, கால் தொடைப் பகுதிகளில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன் பிறகும் இலங்கைக் கடற்படை அட்டூழியம் அடங்கவில்லை. அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும், வலைகளையும் பறித்துக் கொண்டு சென்றுவிட்டனர்.

இலங்கைக் கடற்படை சரமாரியாக அரிவாளால் வெட்டியதில் படகும் சேதம் அடைந்தது. அரிவாள் வெட்டில் காயம் அடைந்த 4 மீனவர்கள் ஏனைய மீனவரின் துணையுடன் ஆறு காட்டுத் துறை கடற்கரைக்குச் சென்றனர்.

பின்னர் வேதாரணியம் அரச மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. பலத்த வெட்டுக் காயம் அடைந்த மீனவர்கள் கண்ணையன், பொன்னுசாமி, சசிகுமார் ஆகியோர் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## வசதிக்கேற்ப நாடகமாடுகிறது தி.மு.க. தமிழர்களுக்கு அது புரியாமலில்லை

### சாடுகிறார் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்



சென்னை, மார்ச் 21

தி.மு.க. தனது வசதி போல் நடத்தும் நாடகத்தை (தேவையானபோது வெளி வந்து விடுதல்) இந்திய நாட்டில் உள்ள தமிழர்களும், இலங்கைவாழ் தமிழ் மக்களும் புரிந்து கொள்ளக் கூடியவர்களே. ஆதலால் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று வாழும் கலை அமைப்பின் நிறுவுநர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

தி.மு.க. தனது வசதி போல் நடத்தும் நாடகத்தை (தேவையானபோது வெளி வந்து விடுதல்) இந்திய நாட்டில் உள்ள தமிழர்களும், இலுங்கைவாழ் மக்களும் புரிந்துகொள்ளக் கூடியவர்களே. எனவே இதனை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் உண்மையானவர்களாக இருந்திருப்பின் தமிழர்களுக்காக எவ்வளவோ செய்திருக்க முடியும்.

ஆனால் அதிகாரத்தில் இருக்கும்போது தம் குடும்பச் சண்டைகளிலும், சொத்துச் சேகரிப்பதிலுமே குறியாக இருந்தனர். தற்போது கை கழுவி விடுவதும், முதலைக் கண்ணீர் வடிப்பதும் சரியானதல்ல- என்றுள்ளது.

இலங்கை விவகாரத்தில் தொடர்ந்து அக்கறை காட்டி வருபவர் ரவிசங்கர். இருப்பினும் இந்த விவகாரத்தில் ஓர் அரசியல் கட்சியை குறிப்பாக முக்கிய கட்சியான தி.மு.க.வை பகிரங்கமாக அவர் சாடிப் பேசியிருப்பது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத் தக்கது. (வ)

# ஜெயலலிதாவின் தலைமையில் ஈழத் தமிழருக்காக போராடுவோம்

### கம்யூ. பாண்டியன் கோரிக்கை

சென்னை, மார்ச் 21

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் போராட்டம் நடைபெற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டியின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-


இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழுக் கூட்டம் கடந்த 15, 16, 17 ஆகிய திகதிகளில் டில்லியில் நடைபெற்றது.

அதில், ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இனப்படுகொலைகள் குறித்து சர்வதேச சட்டப்படி விசாரணை நடத்த வேண்டும், இலங்கையில் உள்ள அகதி முகாம்களை மூடிவிட்டு அங்குள்ள தமிழர்களை சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும், அவர்களின் மறுவாழ்வுக்கான நலத்திட்டங்களை விரைவாக முடிக்க வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகளை நிறைவேற்ற இலங்கை அரசை, இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கட்சிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே ஈழத் தமிழர்களுக்காக அதிகாரபூர்வமாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தீர்மாணம் நிறைவேற்றியதோடு மட்டுமல்லாது போராட்டங்களையும் நடத்தி வருகிறோம்.

ஈழத்தமிழர்களுக்காக தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராடி வருவது வரவேற்கத்தக்கது. சமுதாய அக்கறையுடன் போராடும் உணர்வு மாணவர்களிடம் இன்னமும் இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.



**தி.மு.கவின் முடிவு ஆறுதல் அளிக்கிறது:**

மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெறுவது என்று தி.மு.க எடுத்துள்ள முடிவு ஆறுதல் அளிக்கிறது. இது காலம் கடந்து எடுக்கப்பட்ட முடிவு என்றாலும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான போராட்டத்துக்கு இது வலுச் சேர்க்கும் என்பதால் இதனை வரவேற்கிறோம்.

ஒருவேளை கருணாநிதியின் இந்த முடிவு நாடகமாக இருந்தால் அது விரைவில் அம்பலமாகி விடும்.

தமிழகத்துக்குச் சுற்றுலா வரும் இலங்கை நாட்டவர் மீது தாக்குதல் நடத்துவது கண்டிக்கத்தக்கது. இது போன்ற நடவடிக்கைகளில் யாரும் ஈடுபட வேண்டாம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தில் இந்திய அரசு வலுவான திருத்தங்களைக் கொண்டு வந்தால் அதனை ஆதரிக்க பெரும்பாலான நாடுகள் தயாராக இருக்கின்றன.

இலங்கைக்கு அருகில் இருக்கும் மிகப் பெரிய நாடான இந்தியா, இலங்கைக்கு ஆதரவாக இருப்பதால்தான் பல நாடுகள் அந்தநாட்டுக்கு ஆதரவளிக்கின்றன. எனவே, மத்திய அரசு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் வலுவான திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும்.

இலங்கைத் தமிழர் களுக்கு ஆதரவாக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் போராட்டம் நடைபெறவேண்டும் - என்றார். (வ)


### இலங்கை விவகாரம் தொடர்பில்

## இலவச சிகிச்சை அளித்து வைத்தியர்கள் ஆதரவு

நெய்வேலி, மார்ச் 21

இலங்கை விவகாரத்தில் இந்தியாவே தகித்துக் கொண்டிருக்கையில், நெய்வேலி ஏரியாவில் உள்ள டாக்டர்கள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக்கோரி, நோயாளர்களுக்கு இலவச சிகிச்சை அளித்து வித்தியாசமான முறையில் தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை விவகாரத்தில் லொயோலா கல்லூரி மாணவர்கள் கொளுத்திப்போட்ட போராட்ட நெருப்பு பல்வேறு பரிமாணங்களைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கிறது. அரசியல் கலப்பில்லாமல் தன்னெழுச்சியாக நடக்கும் இந்த போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் நெய்வேலி வட்டார அகில இந்திய மருத்துவ சபையைச் சேர்ந்த வைத்தியர்கள் நேற்றுமுன்தினம் ஒருநாள் மட்டும், தங்களிடம் சிகிச்சைக்காக வந்த வெளி நோயாளிகளுக்கு சிகிச்சைக் கட்டணம் வாங்கா[illegible] சிகிச்சை அளித்திருக்கின்றன[illegible]



## தமிழக மாணவர்களுக்கு ஆதரவாக அமெரிக்காவிலும் தமிழர் போராட்டம்

### இலங்கை விவகாரம் தொடர்பில்

தமிழக மாணவர்களின் போராட்டங்களுக்கு ஆதரவாக உலகத் தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் முன் சான் பிரான் சிஸ்கோ வளைகுடாப் பகுதித் தமிழர்கள் போராட்டம் நடத்தினர்.

போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் எதிர்பார்த்ததைவிட அதிக அளவில் தமிழர்கள் பலர் அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கோஷங்கள் எழுப்பினர் ஒரு சில தினங்களில் திட்டமிட்ட இந்தப் போராட்டத்தில் ஏராளமான தமிழர்கள், அதுவும் வேலை நாளில் வந்து கலந்து கொண்டனர்.

'தமிழ் நாட்டு மாணவர் போராட்டத்தை ஆதரிக் கிறோம், இந்தியாவே ! மனித உரிமையை ஆதரி, தமிழர்களைக் காப்பாற்று, இந்தியாவே ! அமெரிக்கத் தீர்மானத்தை நீர்த்துப்போகச் செய்யாதே, என்று போராட்டத்தில் கலந்து கொண் டவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இறுதியாக துணைத் தூதர் ஒருவரைச் சந்தித்து உலகத் தமிழ் அமைப்பின் சார்பில் (www.worl dthami l.org) கடிதம் ஒன்றை அளித்தனர். அவரும் அந்தக் கடிதத்தை இந்தியாவுக்கும் ஏனைய தூதரகங்களுக்கும் அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார். மேலும் அதே கடிதத்தை நியூயோர்க் நகரில் உள்ள தூதரகத்துக்கும் தொலை நகல் மூலம் அனுப்பி வைத்தார்.

அமெரிக்க பொலிஸாரின் ஒத்துழைப்புடனும், பாதுகாப்புடனும் இந்தப் போராட்டம் சிறப்பாக நடைபெற்றது. அடுத்தடுத்துப் போராட்டங்களை இதைவிட மிகவும் வலிமையாக நடத்தமுடியும் என்று போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறையில் சிலுவைப்பாதை

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் தவக் காலத்தையொட்டி வீதிச் சிலுவைப்பாதை நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி ஆனந்தன் வடலி வீதி சென்.மேரிஸ் முதலாம் ஒழுங்கை, 2 ஆம் ஒழுங்கை வழியாக ஆலயத்தைச் சென்றடையும். (எ-135)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அமிர்தநாதன் றொபேட் கெனடி

S.L.P.S.2 II

தனது அயராமுயற்சியாலும் கடின உழைப்பாலும் உயர்வடைந்து இலங்கை அதிபர் சேவை தரம் 2 II இல் பதவி உயர்வு பெற்றிருக்கும் எமது அதிபர் மேலும் உயர்வுபெற்று பணிதொடர அக மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

(34627)(2.6.7)

கிளி/குமுழமுனை அ.த.க.பாடசாலை, பாடசாலை சமூகம்.

## யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

பொன் விழா வாழ்த்துக்கள்

வடபுலத்தில் மானிப்பாய் பிரதேசத்தில்
சிகரமாய் நின்று எல்லோருக்கும் வெளிச்சவிடாக
திகழ்ந்து தனது 50ஆவது ஆண்டினை
பெருவிழாவாக கொண்டாடிக் கொண்டிருக்கும்
மானிப்பாய் மகளிர் கல்லூரியே வாழ்க
கல்விப்புலத்திலும் புகழீட்டி விளையாட்டுத்
துறையிலும் புகழோங்கி தேசியமட்டத்தில்
சாதனை படைத்த கல்லூரியே நீடூழி வாழ்க
அதிபரின் காலம் பாடசாலைக்கு கிடைத்த பொற்காலம்
மகளிர்க்கு மகுடம் சேர்த்த அதிபரே
பெண்மையின் சிகரமாய் உலகம் வியந்திட
உங்கள் கடமையோடு கண்ணியம் கட்டுப்பாடுடன்
பெற்றதாயும் பிறந்த நாடும் பொன் என்பதனை
பொன் விழாவில் காட்டிய முதல்வரே உங்கள்
பணிகள் மேலும் சிறந்திட பொன் விழாநாளில்
அதிபர் அவர்களைப் பாராட்டுவதுடன் பல்லாண்டு
காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

Director - M. பத்மநாதன்
பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்-இணுவில்.
BARATHY INSTITUTE -சித்தன்கேணி

(C/7154)(10,6,7)


## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி வரும் திருமதி பகீரதி பேரின்பராஜா அவர்களின் அன்புத் தந்தை

**சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம்**

18.03.2013 அன்று இறைபதம் அடைந்த செய்தி அறிந்து எமது வித்தியாலய கல்விச் சமூகம் ஆழ்ந்த அதிர்ச்சியுற்றுள்ளது. மேலும் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/கனகரத்தினம் ம.ம.வி
(ஸ்ரான்லிக் கல்லூரி),
யாழ்ப்பாணம்.

(34626)(10,6,7)

ஆசிரியர்
நலன்புரி கழகம்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புவியியல் பாடத்தில் புலமை மிகு ஆசானாய் ஆற்றலும் ஆளுமையும் மிக்க நல் அதிபராய் சேவையாற்றி இன்று நலம் பெருக நல்லூரின் கோட்டக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றும் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளரும், எமது வித்தியாலய ஆசிரியை **திருமதி கௌரி அம்பாள் மாணிக்கராஜா** அவர்களின் அன்புக் கணவரும் ஆகிய

**உயர்திரு. சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜா** அவர்கள்

(B.A.Dip.in.Edu, M.Ed, SLPS - I, SLEAS III)

இலங்கை கல்விநிர்வாக சேவை தரம் -III இற்கு பதவி உயர்வு பெற்றமையை மன மகிழ்ந்து பாராட்டுவதுடன், மேலும் அவர் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று பாரினில் உயர வாழ்த்துகின்றோம்.

(34630)(2.6.7)

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம், கோண்டாவில்.


# வன்னிப் பாடசாலைகளுக்கு புத்தகங்கள் அன்பளிப்பு; இந்தியத் தூதரகத்தால்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

வன்னிப் பிராந்திய கல்வி வலயங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கும், ஆரம்பப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கும் ஒரு தொகுதி தமிழ்ப் புத்தகங்கள் இந்தியத் தூதரகத்தால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இந்திய அரசு 2012 ஆம் ஆண்டு, வடக்கில் 79 பாடசாலைகளை புனர்நிர்மாணம் செய்ததன் தொடர்ச்சியாக, வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது.

வடமாகாண கல்வி, கலாசார, விளையாட்டு அமைச்சுடன் இணைந்து இந்தியத் துணைத் தூதரகம் வன்னிப் பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட 240 பாடசாலைகளுக்கிடையே முழுமையாக வழங்குவதற்கும், ஆரம்பப் பாடசாலை பிள்ளைகளுக்கேற்ற 5 ஆயிரம் புத்தகங்கள் மற்றும் ஒலிப் புத்தகங்களையும் கொண்ட 240 தொகுதி தமிழ்ப் புத்தகங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகங்களில் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு 90 புத்தகங்களும், மடு கல்வி வலயத்துக்கு 41 புத்தகங்களும், முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு 53 புத்தகங்களும், துணுக்காய் கல்வி வலயத்துக்கு 56 புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட 23 பாடசாலைளில் கல்வி கற்கும் 539 மாணவர்களுக்கும், 469 மாணவிகளுக்கும் வழங்குவதற்காக கற்றல் உபகரணங்கள் அடங்கிய ஆயிரத்தெட்டு பாடசாலைப் பைகளும் வழங்கப்பட்டன. இவை இந்திய இலங்கை நிறுவனம் நன்கொடையாக வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

# வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு குடிதண்ணீரை வழங்க தீர்மானம்

**பருத்துறை பிரதேச சபை கூட்டத்தில் முடிவு**

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தினை பருத்தித்துறை பிரதேசசபை பொறுப்பேற்று குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைக்கூட்டம் சபைத் தலைவர் பு.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற போது இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

என்றிப் நிதி உதவியுடன் குடத்தனை, செம்பியன்பற்று, மருதங்கேணி ஆகிய பகுதிகளில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குழாய் மூல குடிதண்ணீர் விநியோகத்திட்டம் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பொறுப்பேற்று நடத்துமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்தே இத்திட்டத்தை பிரதேச சபை பொறுப்பேற்க முன்வந்துள்ளதாகத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

# புனித வியாகுல அன்னை கெபித் திருவிழா நாளை

**கரவெட்டி அந்தோனியார் ஆலயத்தில்**

கரவெட்டி புனித அந்தோனியார் தேவாலயத்தில் அமைந்துள்ள புனித வியாகுல அன்னை கெபித்திருவிழாவும் 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை ஒட்டி கடந்த 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் மாலை 5 மணிக்கு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

திருநாள் திருவிழா அன்று காலை 9 மணிக்கு நற்கருணை வழிபாடும் அதனைத் தொடர்ந்து கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு எமில்போல் அடிகளார் தலைமையில் திருப்பலிப் பூஜையும், பெரிய சிலுவைப் பாதையும் இடம் பெறுவதுடன் விழா நிறைவுறும். (எ-8)

advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோன்மணி இராஜதுரை

இராசாம் தோட்டம், பலகாடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் கருவிளாத்தனை, களபூமியை வசிப்பிடமாகவும், கள்ளி வீதி, மாவடி, வட்டுக்கோட்டையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி இராஜதுரை (ஓய்வுபெற்ற ஆசிரியை) நேற்று (20.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓவசியர் சுந்தரம்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், ஓவசியர் செல்லத்துரை , மகாலிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், இராஜதுரையின் (கார்க்கார செல்வம்) அன்பு மனைவியும், கெங்காகௌரி, சேதுகாகௌரி ஆகியோரின் அன்புத் தாயும், சங்கர், துரைராசா (சேது களஞ்சியம்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2013) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கள்ளிவீதி,**
**வட்டுக்கோட்டை கிழக்கு.**

**தகவல்:**
**சங்கர்** (மருமகன்).

## திருமதி இன்பமணி நடராசா (சின்னக்கிளி)



சின்னாலடி, அல்வாய் தெற்கு, அல்வாயைச் சேர்ந்த திருமதி இன்பமணி நடராசா (சின்னக்கிளி) நேற்று (20.03.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மார்க்கண்டு-நடராசாவின் பாசமிகு மனைவியும் நிவேதிதா, வாகினி ஆகியோரின் பாசமிகு தாயும் மாசிலாமணி- அன்னப்பிள்ளை தம்பதியரின் இளையபுத்திரியும் நவமணி (வவுனியா), குபேந்திரராசா (குமார்), வதிரி), குணேந்திரராசா (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் மார்க்கண்டு - செல்லப்பாக்கியம் (பொலிகண்டி) தம்பதியரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.03.2013) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று அல்வாய் பங்குவன்வெளி பொது மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம்செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய்.

(சி/7301-14)

தகவல்:
மா.நடராசா
(கணவன்)

## சின்னத்தம்பி அருளப்பு



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் தம்பி அருளப்பு நேற்று (20.03.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் (கொடிகாமம் கந்தையா), திரேசம்மா, சின்ராசா, சின்னமலர், பிலோமினா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான அருளானந்தம் அவர்களின் மைத்துனரும், ஞானம்மாவின் அன்புக் கணவரும், டெய்சி பற்றிமா (ஓய்வு பெற்ற ஆசிரியை- வெஸ்லி கல்லூரி, கொழும்பு), ஸ்ரீபன் (லண்டன்), அன்ரனிதாஸ் (கனடா), அருள்தாஸ் (லண்டன்), மேரிலூட்ஸ், மேரியசிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோகரன் (ஓய்வுபெற்ற சுகாதார இணைப்பதிகாரி, முன்னாள் சினிமா தியேட்டர் முகாமையாளர்), பமிலா (லண்டன்), சரோஜினி தேவி (கனடா), வசந்தா (லண்டன்), ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மரீனா, பிறின்சி, டன்சி, டன்சன், ஜெனி, சாரா, டேவிட், ஸ்ரெபினி, கலிஸ்ரா, வானுசன், சரண்யா, யனு, வின்சன், பிரசாத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.03.2013) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் புனித இசிதோர் தேவாலயத்தில் திருப்பலி பூசை யின் பின்னர் சேமக்காலையில் அன்னாரின் உடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஏழாலை வடக்கு,**
**ஏழாலை.**
**021 2059066**
**077 3312263**

(34628)(10.6.7)

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிர்தல்

மத்தேயு நற்செய்தியில் (14:13:21) நாம் பார்க்கின்ற போது ஒரு ''பகிர்தல்'' நிகழ்வு நடக்கின்றது. பெருந் திரளான மக்கள் தம்மிடம் வந்துள்ளதைக் கண்டு இயேசு பரிவு கொள்கின்றார். அவர்களது நோயைக் குணப் படுத்துகின்றார். மக்களின் பசியைக் கண்டு தங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டு வந்திருந்த மக்களை அனுப்பி விட நினைத்த சீடரை நோக்கி ''நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்'' என்கிறார். இருப்பதையிட்டு பகிர்ந்து எல்லோருடைய பசியையும் போக்கிப் புதுமை செய்கின்றார். இதன் வழியாக மனமிரங்குதல், பகிர்தலுக்கு நம்மைத் தூண்டுபவராக ஆண்டவராகிய இயேசு இருக்கின்றார்.

ஒருமுறை அன்னை திரேசா பசியோடு இருந்த முதியவருக்கு உணவுப் பொதியை வழங்கினார். அந்த முதியவர் உணவுப் பொதியைத் திறந்து அதை இரண்டாகப் பங்கிட்டு சற்று தூரத்திலிருந்த ஒரு முதியவருக்கு கொடுத்தாராம். ஏன் இப்படி செய்தீர்கள் என அன்னை திரேசா அந்த முதியவரிடம் கேட்ட போது; ''அன்னையே அவரும் என்னைப் போன்று பசியோடு இருக்கின்றார்'' என்று கூறினார். தன் பசியைப் போக்க தந்த உணவையே பகிர்ந்துண்டு வாழ நினைக்கின்றார் இந்த முதியவர். இன்று எம்மில் எத்தனை பேர் பகிர்ந்து வாழ விரும்புகின்றோம்.




இயேசுவின் மரணத்தின் வெளிப்படுத்தப்பட்ட அன்பை இன்றும் ஒவ்வொரு திருப்பலியிலும் உடைத்துத் தரப்படுகின்ற இயேசுவின் உடலை நாம் நமது அனுபவமாக மாற்றும் போதுதான் இந்த பகிர்வு நம்மில் பலன் தரும். எனவே

★ என்னைச் சுற்றி வாழும் துன்புறும் மனிதர் பற்றி எனக்குள்ள அறிவு, அக்கறை என்ன?

★ அவர்கள் துன்பம் கண்டு நான் மனமிரங்குகின்றேனா? அல்லது என் இதயத்தை கடினப்படுத்திக் கொள்கிறேனா?

★ நான் எனது தலைவராக ஏற்றுள்ள இயேசு ஆண்டவரின் பகிர்வு எந்த அளவுக்கு என் இதயத்தில் ஆழப்பட்டுள்ளது? என்று இத் தவக்காலத்திலாவது சிந்திப்போம்.

க. அருள்நேசன், குருநகர்

# பாலங்களில் விபத்துக்களை தடுப்பதற்கு விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச் 21

நாவற்குழி மற்றும் கைதடிப் பாலங்களில் விபத்துக்கள் நிகழாமல் இருப்பதற்கு தார்க்கலவை போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் பாலங்களில் போடப்பட்டுள்ள தகரங்களில் ஏற்பட்டுள்ள வெடிப்புக்களை அகற்றிப் புதிய தகரங்கள் போடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இருப்பினும் புதிய தகரங்கள் கொழும்பில் இல்லாமையால் அவற்றை வெளி நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இருப்பதாகவும் , விரைவில் அவற்றை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார்.

ஏ-9 பிரதான வீதியில் அமைந்துள்ள கைதடி நுணாவில் பாலம், நாவற்குழிப் பாலம் ஆகியவற்றில் தொடர்ச்சியாக விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன. பாலத்தில் போடப்பட்டுள்ள தகரத்தில் வாகனங்கள் வழுக்குவதாலேயே இந்த விபத்துக்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

இந்த விடயம் தொடர்பில் கடந்த 2011 ஆம் ஆண்டு சாவகச்சேரி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொது மக்களால் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி பாலத்தில் தார்க்கலவை போடப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இதற்கமைய தார்க்கலவை போடப்பட்டிருந்த போதும் தற்போது அந்தத் தார்க்கலவைகள் தகரத்திலிருந்து அகன்றுள்ளது. இதனால் விபத்துக்கள் தொடர்ச்சியாக ஏற்படுவதுடன், தகரத்தில் வெடிப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகரிடம் கேட்டபோது, தகரத்தில் ஏற்பட்டுள்ள வெடிப்புக்களை நீக்கிப் புதிய தகரம் போடப்பட்ட பின்னரே தார்க்கலவை போட முடியும்.

தகரத்தை மாற்றீடு செய்வதற்குப் புதிய தகரங்கள் இலங்கையில் எந்தவொரு இடத்திலும் இல்லை. வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இதனால் தாமதம் ஏற்படுகின்றது-என்றார். (த-5)

## வடமராட்சி வலய அதிபர், ஆசிரியர்களுக்கு விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 21

சர்வதேச கல்வியகமும், பிறற்றிக் ஈபோர்ட் மன்றமும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து வடமராட்சி அதிபர், ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கையும், ஒன்றுகூடலையும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடத்தத் தீர்மானித்துள்ளன.

இதில் வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களைக் கலந்து கொண்டு பயனடையுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (ஒ)

## மீண்டும் பணிப்பாளராக பவானந்தராஜா

யாழ்ப்பாணம்,மார்ச் 21

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா பதவி விலகுவதாக நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்ட நிலையில் அவர் இன்று மீண்டும் பணிப்பாளராகப் பதவியேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவர் சங்கத்தினருடனான முரண்பாடு காரணமாகவே தான் பதவி விலகுவதாகவும், அதுபற்றி சுகாதார அமைச்சுக்கும், மருத்துவச் சங்கத்துக்கும் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியிருந்தார்.

இந்த நிலையில் சுகாதார அமைச்சின் செயலாளர், பணிப்பாளர் நாயகம் ஆகியோர் நேற்று தன்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இன்று வியாழக்கிழமை தொடக்கம் மீண்டும் பணிப்பாளர் பணியை முன்னெடுக்குமாறும் முரண்பாடு தொடர்பில் தாம் பேசித் தீர்ப்பதாகவும் கூறியதை அடுத்து இன்று தொடக்கம் மீண்டும் பணிப்பாளராகக் கடமையாற்றுவேன்-என்றார். (த-4)

## கீரிமலைக் கேணியில் சறுக்கி வீழ்ந்தவருக்கு செயற்பாடுகள் குறைந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 21

கீரிமலைக்கேணியில் குளித்தவர் கேணிப் படி சறுக்கியதால் கால் தடுமாறி விழுந்தவர் கழுத்துக்குக் கீழ் செயற்பாடுகளை இழந்தார்.

தலை, கால் பகுதிகள் பலமாக அடிபட்டதால் ஏற்பட்ட முறிவு காரணமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக மாற்றப்பட்டுள்ளார்.

தொட்டிலடி சங்கானையைச் சேர்ந்த தர்மராசா கணேஸ்குமார் (வயது-32) என்ற குடும்பஸ்தரே இந்தச் சம்பவத்தில் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டார். கேணியின் படிகளில் பாசி நிறைந்து காணப்படுவதே இவர் சறுக்கி விழக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-36)

## ஆன்மிகச் சொற்பொழிவு

வடமராட்சி, மார்ச் 21

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''தேவி பாகவதம்'' எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார்.

(வ-8)




ஜெய்குருதேவ்

பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின்

வாழும் கலைப் பயிற்சி பாகம் II

இடம்:- சைவபரிபாலன சபை மண்டபம், நீராவியடி.
காலம்:- 23, 24,25,26/03/2013 - 4 நாள்கள்
காலை 6 மணியில் இருந்து மாலை வரை
முற்பதிவுகளை 21, 22/03/2013 மாலை 5 மணிக்கு
சபை மண்டபத்தில் மேற்கொள்ளலாம்.
மேலதிக விவரங்களுக்கு
0776655408/ 0777607008

(34629)(ட.6)


## பிறந்தநாள் நினைவும் 13ஆம் நாள் நினைவு தினமும்

மலர்வு 21 * 03 * 1953

உதிர்வு 09 * 03 * 2013



### அமரர் சந்திரலிங்கம் விமலா

கணப் பொழுதும் எண்ணவில்லை -எம்
கலங்கரை விளக்கே...
நீ இமைப்பொழுதில் எம்மை விட்டகல்வாயென
நொடிப்பொழுதும் மறவாமல்
எம்மை மடிக்குள்ளே தினம் பொத்தி வைப்பாய்
ஆறவில்லையம்மா வேரோடு சாய்ந்தாலும் உன்
விழுதம்மா நாங்கள் பொழுதானாலும் உன்
நினைவுகள் தான் பொழுது புலர்வதும் உன்னில் தான்
எம்மிடத்தில் உதிக்கும் வரை
உன் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கோப்பாய். (34642) குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

### அமரர் செல்லத்துரை தர்மலிங்கம்



கடந்த (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபத மடைந்த எமது குடும்பத்தலைவர் செல்லத்துரை தர்மலிங்கத்தின் அந்தியேட்டி நிகழ்வுகள் நாளை (22.03.2013) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர், நண்பர்களை அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு,
இணுவில்.

(சி/7304) (8.14) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லர் மாணிக்கம்



கோண்டாவில் கிழக்கு காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் மாணிக்கம் நேற்று (20.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகராசா, இராஜேஸ்வரி, சண்முகராசா (சிங்கர்) மற்றும் யோகராசா (சின்ராசு), லீலா (கிளி), கணேசு, பாலசிங்கம், இரவீந்திரன், மனேகரன் ஆகியோரின் பாசமிகு தாயும், கமலநாதனின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2013) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு.

(34638)

தகவல்:
குடும்பத்தினர்.

### கனகர் நாகேந்திரம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் நாகேந்திரம் நேற்று (20.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் மிதிலா, கோபிநாத் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதீஸ்வரியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (20.03.2013) புதன்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமோதர இல்லம்,
கே.கே.எஸ் வீதி,
மல்லாகம்.

(34640-14)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகடி சிவகுமரன் வெற்றிக்கிண்ண கரப்பந்தில் சாதித்த அணிகள்

கரணவாய், மார்ச் 13

இலகடி சிவகுமரன் விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இலகடி சிவகுமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இரவு மின்னொளியில் இடம் பெற்றன.

இதில் 'ஓவர் கேம்' முறையிலான நான்கு நபர்கள் கொண்ட ஆட்டத்தில் வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக் கழகமும், ஆறு நபர்கள் கொண்ட ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் சம்பியனாகின.

இதேவேளை செற்அப் ஆட்டத்தில் நாவலடி நவஜீவன்ஸ் அணி வென்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

### ஓவர் கேம்
### 6 பேரில் இமையாணன் மத்தி
### 4 பேரில் வல்வெட்டி குணசேகரா

முதலில் இடம் பெற்ற 'ஓவர் கேம்' முறையிலான 6 நபர்கள் கொண்ட ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் , வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக்கழகமும் மோதின.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் 15:13, 12:15, 15: 12 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2:1 என்ற சுற்றுக் கணக்கில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனானது. இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக இமையாணன் மத்திய அணியைச் சேர்ந்த எஸ். ஜெசிந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்த இடம்பெற்ற 'ஓவர் கேம்' முறையிலான நான்கு நபர்கள் கொண்ட ஆட்டத்தில் வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக் கழகமும், இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் எந்த அணி வெற்றி பெறும் என்று இறுதிவரை கணிக்க முடியாத வகையில் இரு அணிகளும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற வண்ணமிருந்தன.

இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்படும் போது 16 : 14 என்ற புள்ளிகள் அடிப்படையில் குணசேகரா அணி முன்னிலையில் இருந்தது. இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் போட்டி மேலும் சூடுபிடிக்கத் தொடங்கியது. இருந்த போதும் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக வீரர்களின் பலவீனங்களைத் தமக்குச் சாதமாக்கிய குணசேகரா அணியினர் அடுத்தடுத்துப் புள்ளிகளைப் பெற்றனர்.

இறுதியில் 24:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

### 'செற்-அப்' ஆட்டம்
### நவஜீவன்ஸ் சம்பியன்

**வெற்றியாளரை நிர்ணயிப்பதற்கான மூன்றாவது சுற்றில் நாவலடி நவஜீவன்ஸ் அணி 25:20 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது**

பின்னர் இடம்பெற்ற'செற்-அப்' முறையிலான ஆட்டத்தில் நாவலடி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியும், இலகடி சிவகுமரன் விளையாட்டுக்க ழகமும் மோதிக் கொண்டன .

வடமராட்சியில் மிகவும் பலம் பொருந்தியதாக இந்த இரு அணிகளும் விளங்குவதால் மைதானத்தில் பார்வை யாளர்கள் திரண்டு வந்து, தத்தமது அணிகள் வெற்றி பெறவேண்டும் என்று உற்சாகப்படுத்தி கரகோஷம் செய்தனர். ரசிகர்களின் பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் இடம்பெற்ற முதல் சுற்றினை பலத்த போராட்டத்தின் பின் னர் 25:22 என்ற புள்ளிகள் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றி கொண்டது.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் தன்னை சுதாகரித்துக் கொண்டது சிவகுமரன் விளையாட் டுக்கழகம் . அந்த அணி 25:23 என்ற புள்ளிகள் அடிப்ப டையில் இரண்டாம் சுற்றினை தனதாக்கியது.

இதனால் 1:1 என்ற செற் கணக்கில் இரு அணியினரும் சமனிலைபெற்றனர்.

எனவே வெற்றியாளரை நிர்ணயிப்பதற்கான மூன்றா வது சுற்று இடம்பெற்றது. இதில் நாவலடி நவஜீவன்ஸ் அணி 25:20 என்ற புள்ளிகள் கணக்கில் சிவகுமரன் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து சம்பியன் கிண் ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (ந-400)

## இன்றைய ஆட்டங்கள்



கைதடி விநாயகர் சனசமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு - 7மணி

நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் எதிர் கைதடி குமரநகர் விளையாட்டுக்கழகம். (ந-288)

## வடமராட்சி வலய மேசைப்பந்து வெற்றியீட்டிய கல்லூரி அணிகள்

கரணவாய், மார்ச் 20

வடமரா்ட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவில் மெதடிஸ்த பெண்கள் உயரதரப் பாடசாலையும், 19 வயதுப் பிரிவில் வல்வை மகளிர் கல்லூரியும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இடம் பெற்றன.

முதலில் இடம் பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையும் வல்வை மகளிர் கல்லூரியும் மோதின. இரண்டு ஒற்றையர், ஒரு இரட்டையர்கள் ஆட்டமும் கொண்ட இந்தப் போட்டியில் மெதடிஸ்த பெண்கள் அணி 2 ஒற்றையர் ஆட்டத்தினையும் வெற்றி கொண்டு 2:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

இதில் மூன்றாமிடத்தினை வட இந்து மகளிர் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம் பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இறுதி யாட்டத்தில் வல்வை மகளிர் கல்லூரி அணியும், பருத்தித் துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதிக் கொண்டன.

வல்வை மகளிர் அணி இரண்டு ஒற்றையர் ஆட்டங்க ளையும் பலத்த எதிர்ப்பின் மத்தியில் வென்று 2:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் சம்பியனாகியது.இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தினை வட இந்து மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது. (ந-400)

## மகளிர் கரம் : வடமாராட்சி மத்திய மகளிர் கல்லூரி சம்பியன்

கரணவாய்,மார்ச் 21

வடமராட்சி வலயப்பா டசாலைகளுக்கிடையிலான கரம் சுற்றுப்போட்டியின் பெண்களுக்கான 19 வயதுப் பிரிவு, 15 வயதுப் பிரிவு இரண்டிலும்வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வலயச் சம்பியனானது.

வடமராட்சி வலயப் பாட சாலைகளுக்களுக்கிடையி லான கரம் சுற்றுப் போட்டி யின் இறுதியாட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் வடம ராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியும், நெல்லியடி மத்திய மகாவித்தியால அணியும் மோதின.

இரண்டு ஒற்றையர் ஆட்டங்களையும் ஒரு இரட் டையர் ஆட்டங்களினையும் கொண்ட இந்த ஆட்டத்தில் 2:0 என்ற அடிப்படையில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வெற்றியீட்டியது.

முதலில் இடம்பெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வீராங்கனை தன்னை எதிர்த்து விளையாடிய நெல் லியடி மத்திய மகா வித்தி யாலய வீராங்கனையை 23:06 என்ற புள்ளிகள் அடிப் படையில் மிக இலகுவாக வெற்றி கொண்டார்.

அதனை அடுத்து இடம் பெற்ற இரண்டாவது ஒற் றையர் ஆட்டத்தை வடம ராட்சி மத்திய மகளிர் கல்லூ ரியின் சாதனா, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவி நிலாயினியின் கடும் எதிர்ப்பின் மத்தியிலும் 10:08 என்ற புள்ளிகள் அடிப் படையில் வெற்றி கொண்டார் இதன்மூலம் 2:0 என்ற அடிப் படையில் வடமராட்சி மத் திய கல்லூரி வெற்றி பெற்று வலயச் சம்பியனாகியது.


இதன் பின்னர் நடை பெற்ற மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வல்வை மகளிர் அணி வெற்றபெற்றறிது. அடுத்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியும், மணற்காடு றோ.க வித்தியாலயமும் மோதின.

இதில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியைச் சேர்ந்த அபிசாயினி றோ.க வித்தி யாலய மாணவியான யாழி னியை 18:4 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியைச் சேர்ந்த யசோதா தன்னை எதிர்த்து விளையாடிய றோ.க வித்தியாலய மாணவியான சுவர்ணஸ்ரீயை 1:0 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வென்றனர். இதனால் அந்த அணி 2:0 என்ற அடிப்படை யில் வெற்றியைத் தனதாக் கிக் கொண்டது.

இந்தப் பிரிவில் மூன்றா மிடத்தினை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி பெற்றுக் கொண்டது. (ந-400)

## வீதியோட்டம், சைக்கிளோட்டத்தில் வென்றோர் .........






வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுடன் அதிபர்,உப அதிபர், மற்றும் விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர்

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம. வித்தியாலய மெய்வல்லுனர் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட வீதியோட்டம் மற்றும் பெண்களுக்கான சைக்கிளோட்டம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு:-


**வீதியோட்டம்**

1 ஆம் இடம் - மதியாபரணம் பிரசாந்தன் ,2 ஆம் இடம்- சிவசக்திவேல் கோகுலன்,3 ஆம் இடம் -பாலசுப்பிரமணியம் சிவதர்சன்,4 ஆம் இடம் -தபேந்திரன் யாதவமருகன் ,5 ஆம் இடம் - கதிர்காமநாதன் தர்சிகன்.

**சைக்கிளோட்டம் (பெண்கள்)**

1 ஆம் இடம்- விஜயகுமாரி நாகலிங்கம்,2 ஆம் இடம் - தேனுகா செல்வரட்ணம்,3 ஆம் இடம் - லாவண்யா கிருஸ்ணகோபால் (ந-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டில்லி அணிக்கு வோர்ணர் துணைத் தலைவராகிறார்

ஐ.பி.எல். அணிகளில் ஒன்றான டில்லி டேர்டெவில்ஸ் அணியின் துணைத் தலைவராக ஆஸ்திரேலிய அணியின் டேவிட் வோர்ணர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தனது அறிமுக '20/20' போட்டியில் 43 பந்துகளில் 89 ஓட்டங்களைக் குவித்தவர் ஆஸ்திரேலிய அணியின் அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்ணர். அவர் ஐ.பி.எல்., தொடரில் டில்லி அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

கடந்தவருடம் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் டெக்கான் அணிக்கு எதிரான ஒரு சதம் உட்பட, தான் பங்கேற்ற 8 போட்டிகளில் 256ஓட்டங்களை இவர் எடுத்தார். இந்த நிலையில் ஐ.பி.எல். தொடரின் 6 ஆவது பருவப் போட்டிகளின்போது டில்லி அணியின் துணைத் தலைவராக நியமிக்க முடிவு செய்துள்ளது அணி நிர்வாகம்.

இதுகுறித்து டில்லி அணி நிர்வாகி ஒருவர் கூறுகையில்,''டில்லி அணித் தலைவராக மஹேல ஜெயவர்த்தன உள்ளார். தற்போது வோர்ணரைத் துணைத் தலைவராகத் தேர்வு செய்திருப்பது உண்மை தான். இந்தமுறை ஐ.பி.எல்., தொடரில் அணிக்கு அவர் சிறந்த பங்களிப்பை தருவார்'' - என்றார். (ங)

# தவறான முடிவுகள்

''பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்ட வீரர் மொமினுல் ஹக், ஆட்டம் இழந்ததாக நடுவரின் தவறான முடிவும் எமது தோல்விக்குக் காரணம்'' இவ்வாறு பங்களாதேஷ் அணியின் தலைவர் முஷ்பிஹீர் ரஹீம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் இளம் துடுப்பாட்ட வீரரான மொமினுல் ஹக் பிடியெடுப்பின் மூலம் ஆட்டமிழந்தார் என்று நடுவர் அறிவித்தார். போட்டியின் இறுதிநாளன்று ரங்கன ஹேரத்தின் பந்துவீச்சில் மொமினுல் ஹக் ஆட்டமிழந்திருந்தார்.

மொமினுல் ஹக் ஆட்டமிழந்த பின்னர் பங்களாதேஷ் அணியின் அனைத்து இலக்குகளும் விரைவாக வீழ்ந்தன. இதனால் பங்களாதேஷ் அணியால் 160 ஓட்டங்களை மாத்திரமே இலங்கைக்கு வெற்றியிலக்காக நிர்ணயிக்க முடிந்தது.

இந்தநிலையில் கருத்துத் தெரிவித்த பங்களாதேஷ் அணித்தலைவர் முஷ்பிஹீர் ரஹீம், ''என்னைப் பொறுத்தவரை மொமினுல் ஹக்கின் ஆட்டமிழப்பு தொடர்பான நடுவரின் முடிவு தவறானது. இது சிறிய விடயம் தான். எனினும் இந்த முடிவு எமது அணியைப் பாதித்திருந்தது.

இந்தத்தொடரில் பல முடிவுகள் எங்களுக்கெதிராக வழங்கப்பட்டன. எங்கள் நாடு சிறிய நாடாக இருப்பதால்தான் இவ்வாறான நிலை ஏற்படுகின்றது.'' - என்றார்.

மொமினுல் ஹக்கின் ஆட்டமிழப்புத் தொடர்பான மீள்ஒளிரப்புகளில் அவர் ஆட்டமிழந்தாரா?, இல்லையா? என்பதைத் தெளிவாக தீர்மானிக்க முடிந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ங)



# ஹிட்லர் வணக்கம் விழுந்தது தடை

உதைபந்தாட்டப் போட்டியொன்றில் கோல் அடித்த மகிழ்ச்சியை, ஹிட்லரின் நாஜி பாணியில் வணக்கம் செலுத்திக் கொண்டாடிய கிரீஸ் நாட்டு உதைபந்து வீரருக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கிரீக் சுப்பர் லீக் உதைபந்து தொடரில் எதென்ஸ் அணியுடன் வெரோயா அணி மோதியது.

இந்த போட்டியின் போது, எதென்ஸ் அணி வீரர் கியார்கியாஸ் கோல் அடித்த மகிழ்ச்சியில் வலது கையை தலைக்கு மேல் உயர்த்தி நாஜி பாணியில் வணக்கம் செலுத்தினார். அவரின் நாஜி பாணியிலான வணக்கம் ரசிகர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

சமூக வலையத்தளங்கள் மூலம் அவருக்கு கண்டனங்கள் குவிந்தன. இதனைத் தொடர்ந்து கிரீஸ் உதைபந்தாட்ட சங்கம் உடனடியாக அவசர கூட்டத்தை கூட்டி கியார்கியாஸ்க்கு கிரீஸ் நாட்டில் உதைபந்து விளையாட வாழ்நாள் தடை விதித்துள்ளது.

தற்போது கிரீஸ் நாட்டின் 20 வயதுக்குட்பட்ட அணித் தலைவராக இருக்கும் கியார்கியாஸ், அந்த அணியில் இருந்து உடனடியாக நீக்கப்பட்டுள்ளார்.

தமது செய்கைக்காக மன்னிப்பு கோரியுள்ள கியார்கியாஸ், நாஜி பாணியிலான வணக்கத்துக்கான அர்த்தம் தமக்கு தெரியாது என்றும் ருவிட்டர் வலைதளத்தில் தெரிவித்துள்ளார். (ங)

# உழைப்புக்குப் பரிசு



நீண்டகாலமாக இந்திய டெஸ்ட் அணியில் இணைக்கப்படாதிருந்த சுரேஷ் ரெய்னாவுக்குத் திடீர் அதிர்ஷ்டம் கிட்டியுள்ளது. ஷிகர் தவானுக்குக் காயம் ஏற்பட்டுள்ளதால், ரெய்னா அணியில் இணைக்கப்பட்டுள்ளார். இது குறித்து ரெய்னா கூறுகையில்,'''' இந்திய அணியில் மீண்டும் இடம் கிடைத்த விடயம் மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்காக கடவுளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இரானி கிண்ணத் தொடரில் கடுமையாகப் பாடுபட்டேன். தற்போது அந்தக் கடின உழைப்புக்கு நல்ல பரிசு கிடைத்துள்ளது. நான்கா[illegible] விளையாடுவேன் என்பதை உறுதியாகச் சொல்ல மு[illegible] அணியில் மீண்டும் இடம் கிடைத்ததை நினைத்துப் பெருமைப்படுகிறேன்," என்றார். (ங)


## விலகினார் ஆர்தர்

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சந்தித்துள்ள மோசமான தோல்விகளை அடுத்து, அந்த அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தரை விமர்சித்து, அவரது ''ருவிட்டர்' தளத்துக்கு ஏராளமான செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தொடர்ச்சியாகத் தனக்கெதிரான பதிவுகள் வெளியானதால் அதிர்ச்சியுற்ற ஆர்தர் தனது ''ருவிட்டர்' இணையத்தளத்தை விட்டு விலகியுள்ளார். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வீரர்களுக்கு ஆபத்தில்லை








ஐ.பி.எல். தொடரின் 6 ஆவது பருவகாலத் துக்கான போட்டிகளில் சென்னையில் நடைபெறும் ஆட்டங்களில் இலங்கை வீரர்கள் பங்கேற்பது தடைப்படலாம் என்று தகவல்கள் வெளியாகின.

தமிழ்நாட்டில் இலங்கைக்கெதிரான ஆர்ப்பாட் டங்களும், போராட்டங்களும் அதிகரித்துள்ள நிலையில் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டே இலங்கை வீரர்கள் சென்னைப் போட்டிகளில் பங்கு பற்று வதைத் தவிர்க்கக் கோரப்படும் எனக் கருதப்பட்டது.

ஆயினும் இதனை ஐ.பி.எல். அமைப்பு மறுத்துள்ளது.

''இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் பங்கு பற்றுவதால் எந்த ஆபத்தும் இல்லை. தற்போதைய நிலையில் இலங்கை வீரர்களுக்கு ஆபத்தில்லை. தொடரின் நடுவே அவ்வாறான ஆபத்துக்கள் ஏற்பட்டால் அது குறித்து பின்னர் முடிவெடுக்கப்படும்'' என்று ஐ.பி.எல். அமைப்பின் தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார். (ந)

## யுவராஜுக்குப் புற்றுநோய் டோனிக்கு முன்பே தெரியுமாம்



''இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவராஜ் சிங்குக்குத் தெரிய முன்னரே அவருக்குப் புற்றுநோய் ஏற்பட் டுள்ள விடயத்தை நான் அறிந்திருந்தேன்.'' - இவ்வாறு இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவித்துள்ளார்.

யுவராஜ் சிங் தனக்குப் புற்றுநோய் ஏற்பட்டதிலிருந்து அதிலிருந்து மீண்டது வரையான சம்பவங்களைத் தொகுத்து நூலொன்றை வெளியிட்டுள்ளார். இந்த நூலின் வெளியீட்டு நிகழ்விலேயே மகேந்திரசிங் டோனி இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது :-

''யுவராஜ் சிங்கின் மருத்துவ அறிக்கைகளைப் பார்த்த ஒருவர், யுவராஜ் சிங்குக்கு புற்றுநோய் ஏற்பட்டிருப்பதாகக் கூறினார். ஆயினும் நான் நம்பவில்லை. அந்த நபரிடம் யுவராஜுக்குப் புற்றுநோய் உண்டென்பதை உறுதிப்படுத்துமாறு கோரினேன். அவரும் சில நாள்களின் பின்னர் யுவராஜுக்கு ஏற்பட்டுள்ளது புற்றுநோய்தான் என்பதை உறுதியாகத் தெரிவித்ததார். இதனால் நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.'' - என்றார்.

இந்த விழாவில் சச்சின் டெண்டுல்கர் உரையாற்றும்போது

''யுவராஜ் சிங் புற்றுநோய்க்கான சிகிச்சைகளை அமெரிக்காவில் முடித்துக் கொண்டு லண்டனில் தங்கியிருந்த போது அவரைச் சந்தித்திருந்தேன். அவரைச் சந்திக்கும் போது அழுவதைத் தவிர்த்தேன்.

நான் யுவராஜ் சிங்கின் முன்னால் அழ விரும்பவில்லை. அழுகையைக் கட்டுப்படுத்த யுவராஜ் சிங்கை இறுகக் கட்டியணைத்துக் கொண்டேன். யுவராஜ் சிங் எனது தம்பி போன்றவர். அவருக்கு இவ்வாறான நோய் ஏற்பட்டமை குறித்து அதிகம் வருந்தி னேன். யுவராஜுக்கு ஏன் இந்த நோயைக் கொடுத்தீர்கள் எனக் கடவுளிடம் பல தடவை முறையிட்டேன்.'' - என்று தெரிவித்தார். (ந)

# யாரைச் சேர்ப்பது? யாரை விடுவிப்பது?

ஷேன் வொட்சன் மீண்டும் ஆஸ்திரேலிய அணியில் இணைக்கப்பட்டுள்ளதால் இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டிக்கான அணித்தெரிவில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு எதிரான முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் ஆஸ்தி ரேலிய அணி தோல்வியுற்று 0:3 என்ற ரீதியில் தொடரை இழந்தது.

இதற்கிடையே ஒழுங்கு நடவடிக்கை காரணமாக துணைத் தலைவர் வொட்சன் உள்ளிட்ட நான்கு பேர் ஆஸி. அணியிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர். இது அந்த அணியிலுள்ள பிளவை வெளிப்படுத்தியது. இந்த நிலையில் நான்காவது டெஸ்ட் போட்டி டில்லி யில் நாளை ஆரம்பமாகவுள்ளது.

மொஹாலி டெஸ்ட் போட்டியில் இருந்து நீக்கப்பட்ட வொட்சன், மீண்டும் அணியில் இணைத் துக் கொள்ளப்பட்டார். கிளார்க் காயம் அடைந்துள்ளதால், டில்லி டெஸ்ட் போட்டியில் ஆஸி. அணிக்கு வொட்சன் தலைமை தாங்குவார் என்று ஊகிக்கப் படுகிறது.

இதேவேளை காயத்திலிருந்து குணமடைந்து அணித் தலைவர் கிளார்க், விளையாடும் பட்சத்தில் வொட் சனை இணைப்பதற்காக மொஹாலி டெஸ்டில் சிறப்பாக விளையாடிய ஹியுஸ், ஸ்டீவ் ஸ்மித் ஆகிய இருவரில் ஒருவரை நீக்க வேண்டியிருக்கும்.

காயமடைந்து நாடு திரும்பிய மிட்சல் ஸ்டார்க் குக்கு பதிலாக வொட்சனை அணியில் இணைப் பதும் சாத்தியமற்றது. ஏனெனில்




வொட்சன் பந்துவீசும் அளவுக்கு உடற்தகுதி பெறவில்லை. இதனால் யாரைத் தேர்வு செய்வது, யாரை வெளி யேற்றுவது என குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆஸி. அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் கூறியது:

வொட்சன் வருகை மகிழ்ச்சி தான். இதற்காக அவரிடம் கடந்த வாரம் முழுவதும் தொடர்ந்து பேசினோம். இதனால் அணித் தேர்வில் சில குழப்பங்கள் உள்ளன. இருப்பினும், வொட்சனின் ஆட்டத்திறனும், கவலையான விஷயம் தான். ஏதாவது ஒரு போட்டி இவருக்கு நன்கு அமைந்து விட்டால் அதன்பிறகு எல்லாம் சரியாகி விடும்.

கிளார்க்குக்கு இன்னும் லேசான வலி உள்ளது. ஒருவேளை காயம் குணமடைந்தால் களமிறங்கி விடுவார். ஏனெனில் அணியின் முன்னணி வீரர் கிளார்க் தான் - என்றார். (ந)

**விநியோக முகவர்கள் தேவை**

மாந்தை மேற்கு விவசாய அமைப்புக்களின் சமாசத்தின் மாதோட்டம் நவீன அரிசி ஆலையின் தயாரிப்புக்களை விநியோகிக்க நாடளாவிய ரீதியில் முகவர்கள் தேவை.

எமது தயாரிப்புக்களான தரமான சிவப்பு நாடு, வெள்ளைநாடு, சம்பா, பச்சைஅரிசி வகைகள், சிறந்த முறையில் பொதியாக்கப்பட்ட சிவப்பரிசி மா ஆகியவற்றை விநியோகிக்க விரும்புபவர்கள், மற்றும் மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மேலதிக விவரங்களுக்கு கீழ்வரும் முகவரியுடனோ, தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளலாம்.

தலைவர்- வீ.எஸ்.சிவகரன்
மாந்தை மேற்கு விவசாய அமைப்புகளின் சமாசம்- மன்னார்
0233238000/ 0778355464 (c/7303)

**மரண அறிவித்தல்**



**தவநாயகம் அருமைநாயகம்**

நவாலியைப் பிறப்பிடமாகவும், கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்டதவநாயகம் அருமை நாயகம் நேற்று (20.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தவநாயகம் -பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நிர்மலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சேதுபதி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பிரசாந்தனின் தந்தையும், கெங்காதரன், காலஞ்சென்ற குருபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.03.2013) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3.30 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

31, சின்னப்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (34641) (8.16)

தகவல்
பிரசாந்தன்(மகன்)

FINGER PRINT
உங்கள் ஊழியர்களின் வரவு, விடுமுறை என்பவற்றை மிகக் குறைந்த செலவில் கட்டுப்படுத்த இலகுவானது. மேலதிக விபரங்களிற்கு
STP Your Partner in IT Solution
#49, 1st cross street, Jaffna
T.P: 0212222674, 2228147

**கணினி திருத்தம்**
மிகவும் நீண்ட அனுபவம் உடைய Technicianனால் தங்கள் வீடு, அலுவலகம் என்பவற்றிற்கு வந்து திருத்தி தரப்படும்.
அழையுங்கள்- 0774784381

**2 மணித்தியாலத்தில் கணினி திருத்தம் (Computer Repair)**
2 மணித்தியாலத்தில் கணினிகள் திருத்தி கொடுக்கப்படும் விசேட விரைவு சேவையினை ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகிறோம். (Quick Service Software and Hardware) நேரத்தை மிச்சப்படுத்தி நேரடி சேவைகளைப் பெற்றுக்கொள்ள GUNAA BEST PC (34639)
52. Hospital Road, Jaffna. T.P-0779086737

**கடை வாடகைக்குண்டு**
கிளிநொச்சி கனகபுரம் வீதியில் டிப்போ சந்தியில் இருந்து 500m தொலைவில் உள்ள கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0776703284

**நாய்க் குட்டிகள் விற்பனைக்கு**
ஜேர்மன் செப்பேட், டல்மேஷன், பொமனேறியன் போன்ற நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.
மல்ரிபாம்
0759880000

**பசு மாடுகள் விற்பனைக்கு**
நல்ல இன பால் மாடுகள்
கிளிநொச்சியில்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 585 3891 (c/7153) (6.7.11)

**வேலையாள்கள் தேவை**
பேக்கரி வேலைக்கு
ஆண், பெண்
இருபாலாரும் தேவை.
தொடர்பு:
077 253 6162 (34620) (6.7.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.